# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

Follow us:

மலர் : 01, இதழ் : 37 சார்வரி வருடம், ஆடி மாதம் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (11.08.2020) ஹிஜ்ரி - 1441 துல்ஹஜ் பிறை-20, 0115886187 பக்கங்கள் 12 விலை ரூ.20


## சஜித் அணி தேசியப்பட்டியல் இன்று அறிவிக்கப்படும்!

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் இன்று தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்படவுள்ளது.

அந்தக் கட்சியின் பங்காளிக்கட்சிகள் ஏற்கனவே காணப்பட்ட இணக்கத்தின்படி தேசியப்பட்டியலை கோரி நிற்பதால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. இன்று வரும் முடிவு அக்கட்சியின் எதிர்காலத்தை தீர்மானிக்குமென அக்கூட்டணியின் பங்காளிக் கட்சியின் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

### நக்கல்நமசிவாயம்




# கட்சித் தலைமைப்பதவியை துறந்து ரணில் அரசியல் அஞ்ஞாதவாசம்!



## 43 வருட தொடர் நாடாளுமன்ற வாழ்வு பின்னடைவைச் சந்தித்ததால் அதிரடி முடிவு

02

## ஐ.தே.க.வின் தலைமையை ஏற்க கருவுக்கு அழைப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்குமாறு அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் மகாசங்கத்தினர் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஏற்பட்ட பாரிய தோல்வியை அடுத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க அந்தக் கட்சியின் தலைமைப்பொறுப்பை இராஜினாமா செய்ய தீர்மானித்துள்ளதைத் தொடர்ந்தே....



02

## உறுதியான தலைமை தெரிவான பின்னர் ஐ.தே.க.வின் பொறுப்புகளிலிருந்து விலகுவேன்

### செயற்குழுக் கூட்டத்தில் ரணில் அறிவிப்பு

එක්සත් ජාතික පක්ෂය
ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY

கட்சிக்கு உறுதியான தலைமைத்துவம் கிடைத்த பின்னர் கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து விலகுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு, கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று திங்கட்கிழமை கூடியிருந்தது. அதன்போதே ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கை தொடர்பாக இதன்போது தீர்க்கமாக கலந்துரையாடப்பட்டுள்ளது. கட்சியின் தலைமைத்துவம் மாற்றமடைய வேண்டுமென்று செயற்குழுவின்...

02

## எதிர்வரும் ஒவ்வொரு தேர்தலிலும் ஐக்கிய மக்கள் சக்தியிலேயே போட்டியிடுவோம்



வேண்டுமானால் ஐ.தே.க. இணைந்துகொள்ளலாம் - ஹரீன்

02

## கலையரசனின் பெயர் அரச அச்சகத்துக்கு!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் உறுப்பினராக பரிந்துரைக்கப்பட்ட கலையரசனின் பெயர் அரச இதழில் பிரசுரிப்பதற்காக அரச அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

02

## நாடாளுமன்ற கன்னி அமர்வில் பங்குபற்ற பிள்ளையானை பிணையிலெடுக்க முயற்சி

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் தலைவர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு கூடமுன்னர் பிணையிலெடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறியமுடிகின்றது.



02

## ஒன்லைன் படிவங்களை பூர்த்திசெய்து 15 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குக!

### புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்தல்

எதிர்வரும் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் தகவல்களை ஒன்லைன் முறையில் (Online Registration System) பெற்றுக்கொள்ளும் முறையொன்று நாடாளுமன்ற செயலகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, அனைத்து உறுப்பினர்களும் தமது தகவல்களை வழங்குவதற்கு நாடாளுமன்றத்தின் இணையதளத்துக்கு பிரவேசித்து ஒன்லைன் விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்த முடியும்...

02

## 28 அமைச்சுகள் 40 இராஜாங்க அமைச்சுகள்

### பிரதமர் இன்று பதவியேற்பு; நாளை அமைச்சரவை!



### அமைச்சுகளின்கீழ் வரும் நிறுவனங்கள் விபரம் வர்த்தமானியில் அறிவிப்பு

அரசின் புதிய அமைச்சரவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நாளை கண்டியில் பதவியேற்கவுள்ளது.

அதேசமயம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று காலை கொழும்பில் கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.

இதற்கிடையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் 28 அமைச்சுக்கள் மற்றும் 40 இராஜாங்க அமைச்சுகளைக் கொண்ட அமைச்சுக் கட்டமைப்பு.....

02

## தேசிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியலுக்கு விரிவுரையாளர் ஹரினி அமரசூரிய தெரிவு?



நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கட்சிக்கு கிடைக்கப்பெற்றுள்ள தேர்தல் முடிவுக்கமைய, அந்தக் கட்சிக்கு கிடைக்கப்பெற்றுள்ள தேசியப்பட்டியலுக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஹரினி அமரசூரியவை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலில் பங்குபற்றி தோல்வியடைந்த எவருக்கும் தேசியப்பட்டியலினூடாக உறுப்புரிமை பெற்றுக்கொடுக்க போவதில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்...

02

## சமித தேரர் உட்பட சமசமாஜ கட்சியில் போட்டியிட்ட மூவரும் படுதோல்வி!


### திஸ்ஸ விதாரண தேசியப்பட்டியலில்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினூடாக போட்டியிட்டிருந்த லங்கா சமசமாஜ கட்சியின் உறுப்பினர்கள் மூவரும் தோல்வியடைந்துள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் போட்டியிட்ட எஸ்.ஜீ.பத்மசிறி, காலி மாவட்டத்தில் போட்டியிட்டிருந்த பத்தேகம சமித தேரர் மற்றும் கண்டியில் போட்டியிட்டிருந்த சட்டத்தரணி சந்திரிகா சேனாரத்ன ஆகியோரே இவ்வாறு தோல்வியை சந்தித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா கொம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்ட வீரசுமன வீரசிங்க வெற்றிபெற்றுள்ளதோடு அந்தக் கட்சியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டிருந்த மகேஷ் அல்மேதா தோல்வியடைந்துள்ளார்.

02

# குருநாகல் நகரசபை மேயர் வெளிநாடு செல்லத்தடை!



குருநாகல் புவனேகபாகு மன்னரின் அரசவை உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள குருநாகல் நகரசபை மேயர் உட்பட 5 பேருக்கு வெளிநாடு செல்வதற்கு தடை விதித்து நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

குருநாகல் நகரசபை மேயர் உட்பட 5 பேர் மீதான பிடியாணையைப் பெற்று கைதுசெய்யுமாறு சட்டமா அதிபரால் பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்த நிலையில் அவர்கள் அனைவரும் இதுவரையில் கைதுசெய்யப்படாமல் உள்ளனர்.

எனவே, குறித்த நபர்களை கைதுசெய்வதற்காக பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியாணை உத்தரவு நேற்றுடன் நிறைவடைந்ததன் காரணமாக நீதிமன்றம் மீண்டும் பிடியாணையொன்றை பிறப்பித்துள்ளது.

# காமினி செனரத் பிரதமரின் செயலராக மீண்டும் நியமனம்



இலங்கை நிர்வாக சேவை சிரேஷ்ட அதிகாரியான காமினி சேதர செனரத் பிரதமரின் செயலாளராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் தனது நியமனக் கடிதத்தை நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து பெற்றுக்கொண்டார். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த போது மேலதிக செயலாளராகவும் பணிக்குழாம் பிரதானியாகவும் கடமையாற்றிய காமினி செனரத், 2019 நவம்பர் மாதம் 21ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் பிரதமரின் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

களனி பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான காமினி செனரத் 1984ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் இணைந்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் கணினி தொழில்நுட்பத்தில் பட்டப்பின்படிப்பு பட்டத்தை பெற்றுள்ள அவர், பல்வேறு வெளிநாட்டு கற்கை நெறிகளையும் பூர்த்திசெய்துள்ளார்.

## சாய்ந்தமருது கடற்கரைப் பகுதியில்

# இறந்த நிலையில் டொல்பின் மீனொன்று கரையொதுங்கியது

[சாய்ந்தமருது]

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது கடற்கரைப்பகுதியில் டொல்பின் மீனொன்று இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது. நேற்று காலை கடற்கரையோரப் பகுதியில் இறந்த நிலையில் மிதந்து வந்த குறித்த மீன் கரையை அடைந்துள்ளமையை அப்பகுதிவாழ் மக்கள் கண்டனர். அதனை தொடர்ந்து உரிய அதிகாரிகள் குறித்த பகுதிக்கு விரைந்து வந்து இந்த டொல்பின் மீனை பார்வையிட்டதுடன் ஆய்வுகளையும் மேற்கொண்டனர். மேலும் அண்மைக்காலமாக அம்பாறை மாவட்ட கரையோரங்களில் அரிதான மீன் இனங்கள் உயிருடனும் இறந்த நிலையிலும் கடற்கரையை வந்தடைகின்றமை வழமையாகியிருப்பது சுட்டிக்காட்டத்தக்கது .



## நாடாளுமன்ற...

நாடாளுமன்ற அமர்வுகளில் அவர் கலந்து கொள்ளவேண்டுமென்பதால் அதற்குரிய வகையில் ஏற்பாடுகளை செய்துவரும் நாடாளுமன்ற நிர்வாக அதிகாரிகள் சட்ட மா அதிபர் திணைக்களத்தினூடாக இந்த நடவடிக்கைகளை எடுத்துவருவதாக அறியமுடிந்தது.

அதன்படி, சட்ட மா அதிபர் திணைக்களம் உரிய நடவடிக்கைகள் எடுக்கும் பட்சத்தில் புதிய நாடாளுமன்ற அமர்வுக்கு முன்னர் பிள்ளையான் பிணையில் விடுதலை செய்யப்படும் வாய்ப்பு அதிகமென மேலும் தெரிவிக்கப்பட்டது.

## கலையரசனின்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினரின் வெற்றிடத்துக்காக ஒருவரைப் பரிந்துரைப்பது தொடர்பில் பெரும் சர்ச்சை நிலவிய நிலையில், கலையரசனின் பெயரைப் பிரசுரிக்க வேண்டாம் என கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் மூன்று தலைவர்களும் கூட்டாக ஒப்பமிட்டு ஆணைக்குழுவின் தவிசாளருக்கு நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர்.

அவ்வாறு அனுப்பிய கடிதத்தில் கலையரசனின் நியமனத்தை நிறுத்தி வைக்குமாறு கோரியிருந்தனர்.

இவ்வாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை ஆணைக்குழு ஆராய்ந்தபோதும் தேர்தலில் போட்டியிட்ட கட்சியின் செயலாளரினால் பரிந்துரைக்கப்பட்டதனால் கலையரசனின் பெயர் அரச அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அரச அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட பெயர் விபரங்கள் அரச இதழில் வெளிவரும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## 28 அமைச்சுக்கள்...

விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மற்றும் பிரதமரினால் வகிக்கப்படும் அமைச்சுக்களும் இதில் அடங்கும்.

அமைச்சுக்கள், அமைச்சுக்களுக்குரிய விடயங்கள், சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்கள், நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் பற்றிய வர்த்தமானி அறிவித்தல் நேற்று மாலை வெளியிடப்பட்டது..

அமைச்சரவையை அமைக்கும்போது தேசிய முன்னுரிமை, கொள்கை பொறுப்புகள் மற்றும் பணிகள் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு அமைச்சுக்குமுரிய விரிவான பணிகளுக்கேற்ப முன்னுரிமையை வழங்குதல் மற்றும் குறித்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை இலகுபடுத்தும் வகையில் இராஜாங்க அமைச்சுக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அமைச்சுக் கட்டமைப்பை வகுக்கும்போது தேசிய பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகள், கல்வி, சுகாதாரம், விளையாட்டு ஆகிய துறைகளுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இக்கட்டமைப்பின் மூலம் கிராமிய, விவசாய அபிவிருத்தி மற்றும் கல்வித்துறையின் பல்வேறு துறைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அமைச்சுக்களுக்கு பொறுப்பான அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் நாளை 12ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் வரலாற்று முக்கியத்துவமிக்க கண்டி ஸ்ரீதலதா மாளிகை வளாகத்தில் உள்ள மகுல்மடுவ மண்டபத்தில் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை அமைச்சுகளின் கீழ் இணைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் வருமாறு,

1. பாதுகாப்பு அமைச்சு - உள்நாட்டு பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள், இடர்முகாமைத்துவம்.

2. நிதி அமைச்சு - நிதி மற்றும் வர்த்தக சந்தைப்படுத்தல் முகாமைத்துவ மறுசீரமைப்பு, சமுர்த்தி, சுயதொழில், வியாபார அபிவிருத்தி, அரசவள முகாமைத்துவம்.

3. புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு - தேசிய மரபுரிமைகள், அரங்கக்கலை மற்றும் கிராமிய கலைத்துறை விவகாரங்கள்.

4. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு - நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, குப்பைகள் மீள்சுழற்சி மற்றும் பிரஜைகள் சுகாதார செயற்பாடு, கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, கட்டிடப்பொருட்கள் கைத்தொழில் மேம்பாடு, தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்.

5. நீதி அமைச்சு - நீதிமன்றம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, கைதிகள் புனர்வாழ்வு.

6. வெளிவிவகார அமைச்சு - பிராந்திய ஒத்துழைப்பு நடவடிக்கைகள்.

7. அரச சேவைகள் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி நடவடிக்கைகள்.

8. கல்வி அமைச்சு - மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி பாடசாலைகள், ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள், கல்விச் சேவைகள், கல்வி மறுசீரமைப்பு, பல்கலைக்கழக மற்றும் தொலைநோக்கு கல்வி மேம்பாடு,திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம், அறநெறி பாடசாலைகள், பிக்கு கல்வி, பிரிவெனா மற்றும் பௌத்த பல்கலைக்கழகங்கள்.

9.சுகாதார அமைச்சு - மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் கட்டுப்பாடு, உள்நாட்டு மருத்துவ மேம்பாடு கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்தி, பிரஜைகள் சுகாதாரம்.

10. தொழில் அமைச்சு - வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு, சந்தை பன்முகத்தன்மை.

11. சுற்றாடல் அமைச்சு.

12. வனஜீவிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு - வன விலங்குகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அரண்கள் நிர்மாணம் உட்பட காடுகள் வளர்ப்பு மற்றும் வனவள அபிவிருத்தி.

13. விவசாய அமைச்சு - நெல், தானியங்கள், மரக்கறி பழங்கள், மிளகாய் வெங்காயம், உருளைக்கிழங்கு, பயிர்ச்செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப விவசாயம், உர உற்பத்தி மற்றும் விநியோகம், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை கட்டுப்பாடு, கால்நடை பண்ணைகள் மேம்பாடு மற்றும் பால், முட்டைகள் தொடர்பான கைத்தொழில்.

14. நீர்ப்பாசன அமைச்சு - மகாவலி வலய பொது உட்கட்டமைப்பு அபிவிருத்தி, கிராமிய நெற்காணிகள், குளங்கள், நீர்த்தேக்க மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி.

15. காணி அமைச்சு - காணி முகாமைத்துவம், அரச வர்த்தக காணிகள் மற்றும் சொத்து அபிவிருத்தி.

16. மீன்பிடித்துறை அமைச்சு - பல்வகை மீன்கள், நன்னீர் மீன், மற்றும் இறால் உற்பத்தி, மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி, மீன்பிடி நடவடிக்கைகள், கடல் உணவு ஏற்றுமதி.

17. பெருந்தோட்ட அமைச்சு - நிறுவன தோட்ட முகாமைத்துவம், தேயிலை தோட்ட உப பயிர்ச்செய்கை, தேயிலை தொழிற்சாலை மறுசீரமைப்பு, மற்றும் தேயிலை ஏற்றுமதி அபிவிருத்தி, தேங்காய்,கித்துள், பனை மற்றும் இறப்பர் அபிவிருத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய கைப்பணிப் பொருட்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி, கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கிராம்பு, வெற்றிலை உட்பட்ட பெருந்தோட்ட பயிர் அபிவிருத்தி மற்றும் மேம்பாடு.

18. நீர்வடிகாலமைப்பு அமைச்சு - கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் திட்டங்கள்.

19. மின்சக்தி அமைச்சு - சூரியசக்தி, காற்று மற்றும் நீர்மின் உற்பத்தி திட்ட அபிவிருத்தி.

20. எரிபொருள் அமைச்சு.

21. துறைமுக மற்றும் கப்பற்துறை அமைச்சு - களஞ்சிய வசதிகள், கொள்கலன் பிரிவுகள், துறைமுக விநியோகம், படகு மற்றும் கப்பல் கைத்தொழில் அபிவிருத்தி.

22. நெடுஞ்சாலைகள் அமைச்சு - கிராமிய பாதைகள் மற்றும் விசேட உட்கட்டமைப்பு.

23. போக்குவரத்து அமைச்சு - வாகன கட்டுப்பாடு, பஸ் போக்குவரத்து சேவைகள் மற்றும் புகையிரத மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில்.

24. இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு - கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதி மேம்பாடு

25. சுற்றுலாத்துறை அமைச்சு - விமான சேவைகள் மற்றம் ஏற்றுமதி வலய அபிவிருத்தி.

26 - வர்த்தக அமைச்சு - கூட்டுறவு சேவைகள், விற்பனை அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு.

27. கைத்தொழில் அமைச்சு - கைத்தொழில், பட்டிக், கைத்தறி நெசவு மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி , மாணிக்க மற்றும் இரத்தினக்கல் கைத்தொழில், பிரம்பு,பித்தளை, மட்பாண்டம், மரத்தொழில் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாடு.

28. ஊடகத்துறை அமைச்சு - தபால் மற்றும் ஊடகத் தொழில் அபிவிருத்தி.

## எதிர்வரும்...

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் மாத்திரமே இடம்பெறவிருக்கும் சகல தேர்தல்களிலும் தமது அணியினர் போட்டியிடுவார்கள் என்றும் தேவைப்படின், ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஒரு குழுவாக செயற்பட முடியுமென்றும் அந்தக் கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், ஐக்கிய மக்கள் சக்தியிலேயே நாங்கள் தொடர்ந்தும் போட்டியிடுவோம். ஐக்கிய தேசியக் கட்சிக்கு வேண்டுமானால் ஒரு குழுவாக எங்களுடன் இணைந்து செயற்பட முடியும்.

நாங்கள் தற்போது புதிய பயணமொன்றை ஆரம்பித்துள்ளோம்.

அதனை மாற்ற முடியாது. எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் நாங்கள் ஐக்கிய மக்கள் சக்தியிலேயே போட்டியிடுவோம். இந்தக் கட்சியை எதிர்காலத்தில் மக்களின் சக்தியாக மாற்றியமைப்போம்.

இரண்டு கட்சிகளின் ஐக்கியத்துக்காக ஒருசிலர் உத்தியோகபூர்வமற்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

## உறுதியான தலைமை...

உறுப்பினர்கள் தெரிவித்த சந்தர்ப்பத்தில், உறுதியான தலைமைத்துவமொன்று தெரிவானதும் கட்சியிலிருந்து விலகுவதாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், கட்சிக்காக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில் இடைக்கால தலைமைத்துவக் குழுவொன்றை நியமிப்பதற்கு இதன்போது யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த யோசனைக்கு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய இரண்டு பிரதான ஒப்பந்தங்களின் அடிப்படையில் தனது விருப்பத்தை வெளியிட்டுள்ளார். அதாவது, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறியவர்களை மீண்டும் இணைத்துக்கொள்ளல் மற்றும் கட்சி தலைமைத்துவத்துக்கான சகல அதிகாரங்கள் கிடைக்கப்பெற்றால் மாத்திரமே தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்வேன் என்று தனது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்கப்பெற்றுள்ள தேசியப்பட்டியலுக்கு தோல்வியடைந்த ஒருவரை நியமிக்க முடியாதென்றும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. புதிய ஒருவரை தேசியப்பட்டியல் உறுப்பினராக தெரிவுசெய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதுஎவ்வாறாயினும், இந்தச் செயற்குழு ஒன்றுகூடியபோது அகில விராஜ் காரியவசம், அர்ஜுன ரணதுங்க, தயா கமகே, வஜிர அபேவர்தன, ரவி கருணாநாயக்க ஆகியோர் தலைமைத்துவத்துக்கு தகுதியானவர்கள் என்றும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தல் முடிவுகளுக்கமைய கட்சியின் சிங்கள பௌத்த ஆதரவு வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் அது கிடைக்கப்பெறவில்லை என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாக சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளை பாதுகாத்துக்கொள்வது தொடர்பாக செயற்குழுவில் தீர்க்கமாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்நிலையில், அடுத்த செயற்குழு எதிர்வரும் வெள்ளிக்கிழமை (14ஆம் திகதி) கூடவுள்ளது. இதற்கிடையில் இம்முறை பொதுத் தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட சகல வேட்பாளர்களையும் இன்றிலிருந்து (11ஆம் திகதி) சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளார்.

## ஒன்லைன்...

என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க அறிவித்தல் விடுத்துள்ளார். இந்த தகவல் வழங்கும் நடவடிக்கைகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக தற்பொழுது நாடாளுமன்றத்தினுள் காணப்படும் தகவல் தொழிநுட்ப முறைமைகளை பயன்படுத்தி ஒன்லைன் மூலம் தகவல்களை திரட்டுவதாகவும் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அதேபோன்று உறுப்பினர்களின் வசதி கருதி இந்த முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் நாடாளுமன்றத்துக்கு வருகை தராமல் தேர்தல் தொகுதிகளில் இருந்தே இந்த நடவடிக்கையை மேற்கொள்ளமுடியும் என தம்மிக தஸநாயக்க மேலும் தெரிவித்தார்.

அதற்கமைய, ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் https://registration.parliament.lk எனும் இணைய பக்கத்திற்கு பிரவேசித்து உரிய கடவுச்சொல்லை பயன்படுத்தி இந்த விண்ணப்ப படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த கடவுச்சொல் தொடர்பில் அறிவுறுத்துவதற்கு நாடாளுமன்ற பணியாட்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரை செய்வதற்கும் ஏனைய நடவடிக்கைகளுக்கும் உறுப்பினர்களின் தரவுகள் கட்டாயம் தேவைப்படுவதுடன் முடிந்தளவு விரைவில் அவற்றை வழங்குமாறு நாடாளுமன்ற செயலகம் தெரிவித்துள்ளது.

## தேசிய மக்கள் ....

அநுரகுமார திஸாநாயக்க இதற்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இந்தச் சூழ்நிலையில், தேசிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் உறுப்புரிமையை மக்கள் விடுதலை முன்னணி அரசியல் சபையின் உறுப்பினர் பிமல் ரத்நாயக்கவுக்கு வழங்கப்படும் என்று அநேகமானோர் எதிர்பார்த்தாலும், தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்துள்ள ஒரேயொரு தேசியப்பட்டியலை பெண்ணொருவருக்கு பெற்றுக்கொடுக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது.

புகழ்பெற்ற அறிஞரான, கலாநிதி ஹரினி அமரசூரிய 2011ஆம் ஆண்டு பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்துடன் தனது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்ததோடு கடந்தகாலங்களில் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளராகவும் பாரிய பணிகளை முன்னெடுத்துள்ளார்.

ஐக்கிய ராஜ்யத்திலுள்ள எடின்பேர்க் பல்கலைக்கழகத்தின் சமூக மானிடவியல் தொடர்பான விரிவுரை பட்டதாரியான அவர், இலங்கை திறந்த பல்கலைகழகத்தின் மூத்த விரிவுரையாளராகவும் ஆராய்ச்சியாளராகவும் உள்ளார். மேலும் அவர் சமூக - உளவியல் மற்றும் மன ஆரோக்கிய துறையிலும் சிறுவர் பாதுகாப்புதுறையில் சிறந்த அனுபவம் கொண்டவருமாவார்.

2011ஆம் ஆண்டு பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கம் கல்விக்காக மொத்த தேசிய உற்பத்தியில் 6 சதவீதத்தை ஒதுக்குவது தொடர்பாக தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுத்திருந்ததோடு அதன்போது கலாநிதி ஹரினி அமரசூரிய முக்கியஸ்தராக செயற்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சமித தேரர்...

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் சார்பில் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட்டிருந்த வாசுதேவ நாணயக்கார மற்றும் அந்த முன்னணியின் சார்பில் மொனராகலை மாவட்டத்தில் போட்டியிட்டிருந்த கயாஷான் நவநந்தன ஆகியோர் வெற்றியடைந்துள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசியப்பட்டியலில் லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, கொமியுனிஸ்ட் கட்சியின் கலாநிதி காமினி வீரசிங்க மற்றும் ஜனநாயக இடதுசாரி முன்னணியில் நிமல் ரணவக்க ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அவர்களில் திஸ்ஸ விதாரணவின் பெயர் மாத்திரமே நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

## ஐ.தே.க.வின்...

இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சிங்கள - பௌத்த மக்களின் ஆதரவைப்பெற்ற உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் வரவேற்பை பெற்றுள்ள ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை உடனடியாக பொறுப்பேற்க வேண்டியதன் அவசியம் குறித்து அந்தக் கட்சியின் ஆர்வலர்கள் கவனம் செலுத்தியுள்ளதோடு கரு ஜயசூரியவே அதற்கு மிகவும் பொருத்தமானவர் என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

ரணில் விக்ரமசிங்க, தான் கட்சி தலைமைத்துவத்திலிருந்து நீங்கப் போவதாகவும் அதற்கு முன்னர் கட்சியின் தலைமைத்துவத்துக்கு பொருத்தமான ஒருவரை நியமிக்குமாறும் கட்சியின் இரண்டாம் தரப்பு தலைமைத்துவத்துக்கு அறிவித்திருந்ததை தொடர்ந்து தற்போது கட்சிக்குள் அநேகமானவர்களுக்கிடையில் தலைமைத்துவத்துக்கான போட்டி ஏற்பட்டுள்ளது.

ரவி கருணாநாயக்க, வஜிர அபேவர்தன, நவின் திஸாநாயக்க, தயா கமகே, அகிலவிராஜ் காரியவசம், ருவான் விஜேவர்தன ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்துக்கு தாங்கள் தகுதியானவர்கள் என்பதை ஊடகங்களினூடாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில், கட்சிக்குள் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலையை சீர்செய்து கட்சியை மீண்டும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைத்து செயற்படக்கூடிய தகுதி கரு ஜயசூரியவுக்கே இருப்பதாக ஒரு சிலரின் நிலைப்பாடாக இருக்கிறது.

இந்நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை தனக்கு பெற்றுத்தருமாறு அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன ரணில் விக்ரமசிங்விடம் கேட்டுள்ளதாக தெரிகிறது.

## கட்சித்தலைமை...

பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் வரலாற்று ரீதியான பின்னடைவுக்கு பொறுப்பேற்று கட்சித் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவசம், கட்சியின் செயற்குழு வரும் வெள்ளிக்கிழமை கூடுமென தெரிவித்தார்.

ரணிலின் இராஜினாமா குறித்து கட்சிக்குள் பேசப்பட்டதாகவும், அதன்படி ரவி கருணாநாயக்க, தயா கமகே, வஜிர அபேவர்தனவுடன் தமது பெயரும் தலைமைப்பதவிக்கு கட்சிக்குள் சிபாரிசு செய்யப்பட்டதாகவும் அகில விராஜ் குறிப்பிட்டார்.

சுமார் 43 வருட காலம் தொடர்ச்சியாக நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், இம்முறை தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் தேசிய பட்டியலிலும் நாடாளுமன்றம் செல்வதற்கு மறுப்பைத் தெரிவித்திருந்தார்.

இந்த தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்வதற்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்கள் முண்டியடித்துவரும் நிலையில் கட்சித்தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்ய ரணில் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கட்சித் தலைமைப் பதவியிலிருந்து விலகுமாறு கடந்த காலங்களில் விடுக்கப்பட்ட கோரிக்கையை ரணில் நிராகரித்திருந்தார். தேர்தல் படுதோல்வியையடுத்தே அவர் ராஜினாமா செய்யும் நிலை ஏற்பட்டது.




இந்தோனேஷியாவில்...

# வெடித்துச் சிதறிய சினாபங்: 30 ஆயிரம் பேர் வெளியேற்றம்!

இந்தோனேஷியாவில் குமுறிக்கொண்டிருந்த சினாபங் எரிமலை நேற்று வெடித்துச் சிதறியதில் சுமார் 20 கிலோமீற்றர் தூரம் வரை இந்தச் சாம்பல் துகள்கள் பரவியுள்ளன. 16,400 அடி உயரத்துக்கு சாம்பல் துகள்கள் பறந்தன.

சினாபங் கடந்த சில நாட்களாக குமுறிக் கொண்டிருந்தது. இதனால் எந்த நேரத்திலும் வெடித்து எரிகுழம்பை கக்கலாம் என்பதால் 5 கிலோமீற்றர் சுற்றளவிலுள்ள சுமார் 30,000 மக்கள் முன்னெச்சரிக்கையாக அப்புறப்படுத்தப்பட்டனர். இந்நிலையில், நேற்று திடீரென வெடித்து எரிகுழம்பை கக்கியது.

இந்தோனேஷியாவில் எந்நேரத்திலும் வெடிக்கக்கூடிய வகையில் 120 எரிமலைகள் உள்ளன. இதில் சினாபங் என்ற எரிமலை அவ்வப்போது வெடித்து அச்சுறுத்தி வருகிறது. சுமார் 400 ஆண்டுகள் பழைமையானது இந்த எரிமலை. கடந்த 2010இல் வெடித்து சாம்பலை கக்கியது. அதில் இரண்டு பேர் உயிரிழந்தனர். அதன்பின் எரிமலை வெடித்ததில் 2014இல் 16 பேர், 2016இல் 7 பேர் உயிரிழந்தனர்.

முன்னதாக ஜாவா மற்றும் யோக்யகர்த்தா மாகாணத்துக்கிடையே அமைந்துள்ள மவுண்ட் மெரபி எரிமலை சீற்றத்துடன் வெடித்தது. இதன் காரணமாக வானில் புகைமூட்டங்கள் சூழ்ந்தன. இதனைத் தொடர்ந்து அங்கு சிவப்பு எச்சரிக்கை விடப்பட்டது

## பிரணாப் முகர்ஜிக்கு கொரோனா உறுதி



இந்திய முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு (வயது 84) கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து பிரணாப் முகர்ஜி தனது டுவிட்டர் பக்கத்தில்:

“வேறு சில உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனைக்குச் சென்றிருந்தபோது, அங்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் கொரோனா தொற்றிருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


எனவே, கடந்த ஒரு வாரகாலத்தில் என்னுடன் தொடர்பிலிருந்த அனைவரும் தங்களை தனிமைப்படுத்திக்கொள்ளுங்கள். மற்றும் கொரோனா பரிசோதனைசெய்து கொள்ளுமாறு வலியுறுத்திக்கொள்கிறேன்” – இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

உலகச் செய்திகள்

## மொரீஷியஸ் கடற்பரப்பில் பாறை மீது மோதிய கப்பலிலிருந்து 1,000 தொன் பெற்றோல் கசிவு

### கடல் வளம் பாதிக்கப்படும் அபாயம்; சுற்றுச்சூழல் அவசரநிலை பிரகடனம்!





மொரீஷியஸ் அருகே சரக்குக் கப்பலொன்று பாறைமீது மோதி சேதமடைந்துள்ளது. கப்பலிலிருந்து 1,000 தொன் பெற்றோல் கசிந்ததால் கடல் வளம் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் வல்லுநர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஜப்பான் நிறுவனத்துக்குச் சொந்தமான எம்.வி.வகாஷியோ எனும் கப்பல் 3,800 தொன் எரிபொருளுடன் எம்.வி.வகாஷியோ, ஜுலை 25 அன்று இந்தியப் பெருங்கடல் தீவுக்கு வெளியே பயணித்துக்கொண்டிருந்தது. இந்துக் கப்பல் கடந்த மாதம் 15ஆம் திகதி சர்வதேச அளவிலான பாதுகாப்புத் தளமாக அறியப்படும் பொயிண்ட் டி எஸ்னி பகுதியில் எதிர்பாராதவிதமாக ஒரு பாறையில் மோதி நின்றது. சேதமடைந்த கப்பலிலிருந்த குழுவினர் பத்திரமாக மீட்கப்பட்டனர். ஆனால், பாறையில் மோதியதால் கப்பலிலிருந்த பெற்றோல் கடலில் கசியத் தொடங்கியது.

அதனைத் தடுக்கும் மொரீஷியஸ் அரசின் முயற்சிக்கு பெரிதாக பலன் கிடைக்கவில்லை. தற்போதுவரை 1,000 தொன் பெற்றோல் கடலில் கசிந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் நாட்களில் கப்பல் முழுவதுமாக உடைந்து ஒட்டுமொத்த பெற்றோலும் கடலில் கலந்துவிடும் அபாயம் உள்ளதாக சுற்றுச்சூழல் வல்லுநர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பெற்றோலை அகற்றுவதற்கான தொழில்நுட்ப வசதிகள் இல்லாததால் பிரான்ஸிடம் மொரீஷியஸ் அரசு உதவி கோரியுள்ளது. எனினும், எண்ணெய்க் கசிவு நெருக்கடி மோசமடைவதால் மொரீஷியஸ் அரசு அவசர நிலையை அறிவித்துள்ளது.

“சுற்றுச்சூழல் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது” என்று பிரதமர் பிரவிந்த் ஜுக்னாத் தனது சுட்டுரையில் பதிவிட்டிருந்தார். மேலும் வான்வழியிலிருந்து எடுக்கப்பட்ட படங்கள் பெரியளவிலான நீலக்கடல்கள் கசிவு மூலம் கறுப்பு நிறத்தில் மாறியிருந்ததை பதிவுசெய்துள்ளன.

## இன்று நள்ளிரவு வானில்....



பெர்சீட் என்று அழைக்கப்படும் விண்கற்கள் பொழிவை இன்று நள்ளிரவு அல்லது அதிகாலை (12ஆம் திகதி) நேரத்தில் வானில் காணலாம் என்றும் நாசா தெரிவித்துள்ளது.

ஸ்விஃப்ட்–டட்டில் என்ற வால் நட்சத்திரம் விட்டுச்சென்ற குப்பைகள் காரணமாக கடந்த மாத பிற்பகுதியிலிருந்து பெர்சீட் விண்கற்கள் வானில் தென்படுகின்றன. அதன் அளவு அதிகரித்துள்ளதால் தட்பவெப்பநிலையை பொருத்தும் எந்த சிறப்பு உபகரணங்களுமின்றி வெறும் கண்களால் பெர்சீட் விண்கற்கள் பொழிவை இன்று காணமுடியும் என்று நாசா குறிப்பிட்டுள்ளது.

விண்கற்கள் பொழிவை அதிகாலை 2 மணி முதல் விடியல் வரை பொதுமக்கள் தெளிவாக வானில் பார்க்க முடியும் என்றும் தெரிவித்துள்ளது. பிரகாசமான திரைகளைக் கொண்ட சாதனங்கள் வழியே பார்ப்பது பார்வையை பாதிக்கும் என்பதால் மொபைல் போன்களை பயன்படுத்த வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## கோயிலில் வழிபாடு நடத்திய ஜெசிந்தா!




நியூஸிலாந்தில் தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு இந்து கோயிலுக்கு சென்று அந்த நாட்டு பிரதமர் ஜெசிந்தா வழிபாடு நடத்தியுள்ளார்.

நியூஸிலாந்தில் கொரோனா பரவலை திறமையாக செயற்பட்டு கட்டுப்படுத்தியதாக ஜெசிந்தாவை மக்கள் கொண்டாடி வருகின்றனர். கடந்த 100 நாட்களாக நியூஸிலாந்தில் ஒருவருக்கு கூட கொரோனா தொற்று ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் நியூஸிலாந்தில் பிரதமர் பதவிக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. இதைத் தொடர்ந்து, இராதாகிருஷ்ணா மந்திருக்கு சென்று ஜெசிந்தா வழிபாடு நடத்தியுள்ளார்.

கடந்த 2017ஆம் ஆண்டுமுதல் நியூஸிலாந்தின் தொழிலாளர் கட்சித் தலைவராக உள்ள ஜெசிந்தா 40 வயதே நிரம்பிய இளம் அரசியல் தலைவராவார்.

## பெய்ரூட் துறைமுக வெடிப்பு: அமைச்சர் மூவர் இராஜினாமா




லெபனான் பெய்ரூட் துறைமுகத்தில் அமோனியம் நைட்ரேட் வெடிப்புக்கு பொறுப்பேற்று அந்நாட்டு தகவல் தொடர்பு அமைச்சர் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சர் ஆகியோர் தமது பதவியை இராஜினாமா செய்த நிலையில், தற்போது அந்நாட்டின் நீதியமைச்சர் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

லெபனானின் துறைமுக நகரும், தலைநகருமான பெய்ரூட் துறைமுகத்தில் கடந்த 4ஆம் திகதி நிகழ்ந்த பயங்கரமான அமோனியம் நைட்ரேட் வெடிப்பில் இதுவரை 160 உயிரிழந்துள்ளதுடன், 6,000இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். அதோடு கட்டட இடிபாடுகளில் சிக்கியுள்ள பலரை தேடும் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இதுவரை இல்லாதளவுக்கு பெரும் சேதத்தை பெய்ரூட் நகரம் சந்தித்துள்ளது. நீண்ட நாட்களாக துறைமுகத்தில் தொன் கணக்கில் இருப்பு வைக்கப்பட்டிருந்த அமோனியம் நைட்ரேட் என்ற வேதிப்பொருள் தீப்பிடித்து வெடித்ததன் விளைவே இன்று பெய்ரூட் அலங்கோலமாக காட்சியளிக்கிறது.

இந்த விபதத்துக்கு எதிராக மக்கள் போராட்டம் வெடித்துள்ளது. போராட்டக்காரர்கள் அந்நாட்டு ஜனாதிபதி மைக்கேல் அவுன் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். போராட்டம் தொடங்கிய நிலையில் தகவல் தொடர்பு அமைச்சர் மனால் அப்தெல் சமாத், சுற்றுச்சூழல் அமைச்சர் டமியானோஸ் கட்டார் ஆகியோர் தங்களது பதவியிலிருந்து விலகினர். மேலும், 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தை முற்றுகையிட்ட போராட்டக்காரர்கள் அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது கற்களைவீசி தாக்கினர். இதன்போது போராட்டக்காரர்களை அப்புறப்படுத்துவதற்காக பொலிஸார் கண்ணீரப்புகை குண்டு வீசி போராட்டக்காரர்களை அப்புறப்படுத்தினர். இதனால் அப்பகுதி போர்க்களம்போல காட்சியளிக்கிறது.

இந்நிலையில், நீதியமைச்சர் மரி கிளாட் நஜ்ம் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். இவருடன் இதுவரை மூன்று அமைச்சர்கள் தங்களது பதவியை இராஜினாமா செய்துள்ளனர்.

## கேரளா உட்பட 16 மாநிலங்களில் வெள்ளம் - மண்சரிவு: 900 பேர் பலி!



கடந்த சில வாரங்களாக பெய்துவரும் கடும் மழையால் கேரளா உட்பட 16 மாநிலங்களில் வெள்ளம் மற்றும் மண்சரிவில் சிக்கி 900 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கைக்கு மத்தியில் தொடரும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் வெள்ளம் மற்றும் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

நாடு முழுவதும் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களில் பீகாரில் சுமார் 69 இலட்சம் பேரும், அசாமில் 57 இலட்சமும் பேரும் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தியா முழுவதும் 16 மாநிலங்களில் மழை, வெள்ளம், மண்சரிவில் சிக்கி சுமார் 900 பேர் உயிரிழந்துள்ளனர்.

கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் ஒரே நாளில் 48இற்கும் மேற்பட்டோர் மண்சரிவில் சிக்கி உயிரிழந்துள்ளதுடன், 40இற்கும் மேற்பட்டோர் காணாமல்போயுள்ளனர்.

## தங்கம் -வைரத்தாலான மாஸ்க்



இஸ்ரேல் தலைநகர் ஜெருசேலத்திலுள்ள லீவி தங்கநகை நிறுவனம் சுமார் 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள தங்கம் மற்றும் வைர கற்களாலான முகக்கவசத்தை தயாரித்துள்ளது. இது உலகின் மிக விலை உயர்ந்த முகக்கவசமாக கருதப்படுகிறது.

18 கரட் தங்கத்தில 270 கிராம் எடையிலான இந்த முகக்கவசத்தில், 3,600 வெள்ளை மற்றும் கறுப்பு வைரங்கள் பதிக்கப்பட்டுள்ளன. இந்த முகக்கவசத்தில் ‘என்99’ பில்டர் உள்ளது.

வாடிக்கையாளர்களின் கோரிக்கைக்கிணங்க இந்த பில்டர் இந்த முகக்கவசத்தில் பாதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் வசிக்கும் சீன தொழிலதிபரொருவர் இந்த முகக்கவசத்தை விலை கொடுத்து வாங்கவுள்ளார்.

## 2 கோடியைத் தாண்டியது கொரோனா பாதிப்பு



உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 2 கோடியை தாண்டியுள்ளதுடன், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7.34 இலட்சத்தை தாண்டியுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் சீனாவில் முதன்முதலாக கொரோனா அறிகுறி கண்டறியப்பட்டு தற்போது 209இற்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி பாதிப்பை ஏற்படுத்திவருகிறது. குறிப்பாக, அமெரிக்கா, ஈரான், ரஷ்யா, இத்தாலி, ஸ்பெயின் மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகள் கொரோனாவால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் (நேற்றைய நிலைவரப்படி) உலகம் முழுவதும் 7,34,481 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளதுடன், 2,00,43,943 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 1,29,14,117 பேர் குணமடைந்துள்ளனர். மேலும் 64,666 பேர் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

அமெரிக்காவில் கொரோனாவால் 51,99,524 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 1,65,617 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரேஸிலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 94,702 ஆக அதிகரித்துள்ளதுடன், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 27,51,665 ஆக அதிகரித்துள்ளது. இந்தியாவில் 22,17,645 பாதிக்கப்பட்டுள்ளதுடன், 44,466 பேர் உயிரிழந்துள்ளனர். ரஷ்யாவில் 14,931 பேர் உயிரிழந்துள்ளதுடன், 8.87,536 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரிட்டனில் 46,574 பேர் உயிரிழந்துள்ளதுடன், 3.10,825 பேர் உயிரிழந்துள்ளனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com

2020 ஓகஸ்ட் 11ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# கூட்டமைப்புக்கு காத்திருக்கும் பாடம்!

தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவியை அம்பாறை மாவட்டத்துக்கு வழங்கிவிட்டு திடீரென அதனை நிறுத்திவைத்திருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் கலையரசனை அழைத்து பேச்சு நடத்தி, அவரை வைத்து நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டையும் நடத்தி, பகிரங்கமாகவே அறிவித்த தமிழரசுக் கட்சி இரவோடிரவாக முடிவை மறுபரிசீலனை செய்து நேற்றுக்காலை அந்தர்பல்டி அடித்திருக்கிறது.

தங்களுக்குத் தெரியாமல் கூட்டமைப்பின் தலைமை ஒரு முடிவை எடுத்திருப்பதாக பங்காளிக்கட்சிகளான ரெலோவும், புளொட்டும் போர்க்கொடி தூக்கியுள்ளன. மறுபக்கம் தமிழரசுக் கட்சியின் சீனியர்கள் மாவைக்கு இதனை வழங்கவேண்டுமென நிற்கின்றனர். அதைவிட மக்கள் நிராகரித்ததால் தேசியப்பட்டியலில் நாடாளுமன்றம் செல்லமாட்டேனென ஆரம்பத்தில் கூறிய மாவையர், பலரும் கேட்கிறார்கள் என்று சப்பைக்கட்டை கட்டிவிட்டு தேசியப்பட்டியல் தருமாறு மடிப்பிச்சை கேட்கிறார்.

கிடைத்த தேசியப்பட்டியல் ஒன்றை சரியாக பகிர முடியாமல் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற தேசியக் கட்சிகள் தடுமாறுவதை பார்த்து சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை.

தேசியப்பட்டியலை அம்பாறைக்கு வழங்க சம்பந்தன், சுமந்திரன் உட்பட்டோர் மட்டும் எடுத்த முடிவு குறித்து விமர்சனங்கள் உள்ளன. அது வாஸ்தவம்தான். அவர்கள் மற்றவர்களுடன் கலந்து பேசியிருக்கவேண்டும். ஆனாலும் அம்பாறைக்கு அதனை வழங்குவதென்ற அவர்களின் தீர்மானம் நியாயமானது.

கடந்த தேர்தலில் கருணா அம்மான் அம்பாறையில் போட்டியிட்டு வீரவசனங்களைப் பேசியமை குறித்து ஏற்கனவே நாம் ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியிருந் தோம். அந்த வீரவசனங்கள் மக்களிடம் எடுபடாது என்றும் கூறியிருந்தோம். அதன்படி மக்களின் வாக்குகளைப் பிரித்த கைங்கர்யத்தில் கருணா ஈடுபட்டதால் இன்று நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறது அம்பாறை மாவட்ட தமிழ்ச் சமூகம்.

ஏற்கனவே கடந்த காலங்களில் கிழக்கு மாகாணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேல்மட்டத்தில் புறக்கணிக்கப் படுவதாக விமர்சனங்கள் இருந்த நிலையில், தேசியப்பட்டியலை அம்பாறைக்கு வழங்குவதாக அக்கட்சி எடுத்த முடிவு அந்த மாவட்டத்தின் தமிழர்களுக்கு சற்று ஆறுதலை வழங்கியிருந்தது. ஆனால், ஒரே இரவில் அது விடயத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றம் அந்த மக்களுக்கு எரிச்சலையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

திருகோணமலையில் இரண்டு தமிழ் எம்.பி.க்களை பெறலாமென்றாலும் அங்கு சம்பந்தனே சிரமப்பட்டு கரை சேர்ந்திருக்கிறார். அம்பாறையில் எவரும் இல்லை. கருணாவால் தமிழர் வாக்குகள் சிதறின. மட்டக்களப்பில் பழைய முகங்கள் ஓரங்கட்டப்பட்டன. யாழ்ப்பாணத்திலும் சிரேஷ்ட உறுப்பினர்கள் கட்டாய ஓய்வில் மக்களால் அனுப்பப்பட்டுள்ளனர். இவ்வளவு நடந்த பிறகும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது அதன் பங்காளிகளோ மக்கள் கூறிய செய்தியை விளங்கிக்கொள்ளவில்லை. அல்லது விளங்காததுபோல நடிக்கின்றனர் என்றே பொருள்.

அம்பாறை மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் மாவை சேனாதிராஜாவை நியமிப்போம் என்று எவரும் கூறுவாராயின், அது ஏற்றுக்கொள்ளப்படவேண்டியதா? கலையரசன் என்ற ஒரு கட்சிப் போராளியை தமிழரசு நியமித்தால் சரி. தமிழர் ஒருவரது நியமனம்தானே என்று இதர பங்காளிக்கட்சிகள் அதற்கு சம்மதம் தெரிவிக்கமுடியாதா? தேர்தலுக்குப் பின்னர் கட்சியின் மறுசீரமைப்பை விரும்பிய கட்சிப் பிரமுகர்கள் இந்த நியமனத்துக்கு போர்க்கொடி தூக்குவதேன்?

கட்சி அரசியலும் சுயலாப சிந்தனையும் தமிழர் அரசியலை சிதைத்து சின்னாபின்னமாக்கிவிட்டுள்ளன. தமிழர் நலனோ அல்லது கூட்டு ஒற்றுமையோ எழுத்தளவிலும் பேச்சளவிலும்தான். நடைமுறையில் அவை ஒன்றும் இல்லை என்பதையே தேசியப்பட்டியல் விவகாரம் எடுத்துக்காட்டுகிறது.

இதன்படி, அம்பாறைக்கு தேசியப்பட்டியலை வழங்குவதாக உறுதியளித்துவிட்டு இரவோடிரவாக பின்வாங்கிய கூட்டமைப்பு, கிழக்கு மாகாணத்தை இப்படி புறந்தள்ளுமாயின் அடுத்த தேர்தலில் முற்றாக மாகாணத் திலிருந்தே அகற்றப்பட்டுவிடும். கூட்டமைப்பு இப்படிச் செய்யுமென்பதால்தான் தாம் தனித்துப் போட்டியிட்டதாக இம்முறை வாக்குகளைப் பிரித்த கருணாவே அடுத்த தேர்தலில் சொல்லும் நிலையும் ஏற்படலாம்.

அம்பாறையை புறக்கணித்து, அங்கு தமிழரை நட்டாற்றில்விட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரலாற்று ரீதியான பாடத்தைக் கற்கும். அதனை முற்கூட்டியே சொல்லிவைக்க விரும்புகிறான் 'தமிழன்'.

**"தமிழன்" பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை news@liberty.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**

# பொதுஜன முன்னணியின் வெற்றி

## தொழிலாளர் போராட்டங்கள் வெடிப்பதற்கான கட்டியமே!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (ஸ்ரீல.பொ.பெ.) புதன்கிழமை நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று கணிசமான பெரும்பான்மையுடன் அடுத்த அரசாங்கத்தை அமைக்கவுள்ளது. 225 உறுப்பினர்களைக்கொண்ட நாடாளுமன்றத்தில் கட்சி 145 ஆசனங்களைப் பெற்று, 54 நாடாளுமன்ற உறுப்பினர்களை அதிகரித்துக்கொண்டுள்ளது.

வலதுசாரி பழைமைவாத ஐக்கிய தேசியக் கட்சியில் (ஐ.தே.க.) இருந்து பிரிந்துசென்று இந்த ஆண்டு தொடக்கத்தில் ஸ்தாபிக்கப்பட்ட எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி (ஐ.ம.ச.), 47 ஆசனங்களை வென்றது. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க. 58 ஆசனங்களையும் இழந்தது. அதற்கு அடுத்த நாடாளுமன்றத்தில் ஒரு உறுப்பினர்கூட கிடையாது.

பல கல்விமான்கள் மற்றும் நிபுணர்களின் ஆதரவோடு, சிங்களப் பேரினவாத மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஸ்தாபித்துக்கொண்ட ஒரு புதிய அமைப்பான தேசிய மக்கள் சக்தி (தே.ம.ச.) இரண்டு ஆசனங்களை மட்டுமே வென்றது. ஜே.வி.பி. முதல் நாடாளுமன்றத்தில் அதற்கு இருந்தவற்றில் நான்கு ஆசனங்களை இழந்துவிட்டது. போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கை தளமாகக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முந்தைய நாடாளுமன்றத்தில் 16 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. இம்முறை பத்து ஆசனங்களை மட்டுமே வென்றது.

தேர்தல் ஆணையத்தின் ஆரம்ப மதிப்பீடுகளின்படி, 71 சதவீத வாக்காளர்கள் மட்டுமே வாக்களித்தனர். இது 10 மாதங்களுக்கு முன்பு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கையில் 12 சதவீத வீழ்ச்சியாகும் மற்றும் 2015 ஓகஸ்ட்டில் நடந்த பொதுத் தேர்தலை விட 6 சதவீத வீழ்ச்சியாகும்.



கடந்த புதன்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்ட ஜனாதிபதி ராஜபக்ஷ, அவர் 70 சதவீத வாக்குகளைப் பெற்றிருப்பதாகவும், இது கொரோனா வைரஸ் தொற்றுநோயை அரசாங்கம் கையாண்டமை சம்பந்தமான "நம்பிக்கையின் வெளிப்பாடு" என்றும் பொய்யாகக் கூறிக்கொண்டார்.

எவ்வாறாயினும், வாக்காளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட கூர்மையான வீழ்ச்சி, ராஜபக்ஷவின் பெருகிவரும் சர்வாதிகார வழிமுறைகளுக்கு எதிராகவும் வேலைகள், ஊதியங்கள் மற்றும் பாதுகாப்பற்ற வேலை நிலைமைகள் மீதான பெரும் வணிகர்களின் தாக்குதலுக்கு அவர் ஆதரவு கொடுப்பதற்கும் எதிரான விரோதத்தை குறிக்கிறது. அவரது அரசாங்கம் வெகுஜன சோதனைகளை மேற்கொள்ள மறுத்துவருவதால், இலங்கையில் கொவிட்–19 நோய்த்தொற்று விகிதம் குறைவாக இருப்பதாக ராஜபக்ஷவால் கூறிக்கொள்ள முடிகின்றது.

ஸ்ரீல.பொ.பெ. தேர்தலின்போது மூன்றில் இரண்டு நாடாளுமன்ற பெரும்பான்மைக்காக பிரசாரம் செய்தது. அப்போது அதனால் அரசியலமைப்பை திருத்தி எழுதிய ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் மீதான தற்போதைய அனைத்துக் கட்டுப்பாடுகளையும் அகற்றிக்கொள்ள முடியும். கட்சியின் பகட்டான தேர்தல் பிரசாரத்திற்கு சுமார் 1,202 மில்லியன் ரூபா (6.5 மில்லியன் டொலர்) செலவாகியதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது மற்ற முதலாளித்துவ கட்சிகள் தங்கள் பிரசாரத்துக்காக செலவிட்டதைவிட மிக அதிகமாகும்.

ஜனாதிபதி ராஜபக்ஷ, உத்தியோகபூர்வ தொற்றுநோய்த் தடுப்பு சுகாதார விதிமுறைகளை மீறி மக்களை அணிதிரட்டி, டசின்கணக்கான கூட்டங்களில் உரையாற்றினார். தேர்தல் கண்காணிப்புக் குழுவின் கூற்றுப்படி, ராஜபக்ஷ பங்கேற்ற ஒவ்வொரு கூட்டமும், அரசுக்கு 27 மில்லியன் ரூபா செலவு வைத்துள்ளது.

புதன்கிழமை வாக்களித்த பின்னர், ஜனாதிபதியின் சகோதரர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஊடகங்களுக்கு பேசும்போது, தேர்தலில் மூன்றில் இரண்டு நாடாளுமன்ற பெரும்பான்மையை ஸ்ரீல.பொ.பெ. பெறத் தவறினால், அது தேவையான உறுப்பினர்களைப் பெறுவதற்கான 'ஏற்பாடுகளை' செய்யும் என்றார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளை கொள்வனவு செய்வதாகும்.

இலங்கை ஜனாதிபதியும் அவரது சகோதரரும் இராணுவ உயர்மட்டத்தினரும் சேர்ந்து ஒரு சர்வாதிகாரத்தை விரும்புகிறார்கள். உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு அரசாங்கத்தையும் போலவே, ஜனாதிபதி ராஜபக்ஷவும் கொரோனா வைரஸ் தொற்றுநோயால் துரிதப்படுத்தப்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் சுமையை மக்கள் மீது சுமத்துவதில் உறுதியாக இருக்கிறார். இது தீவிர வர்க்கப் போராட்டங்கள் மற்றும் புரட்சிகர எழுச்சிகளின் வெடிப்புக்கு களம் அமைக்கும்.

தேர்தலுக்கு முன்னர் சமூக பதற்றங்களைத் திசைதிருப்பவும், சிங்கள வாக்காளர்களை துருவப்படுத்தவும் ஸ்ரீல.பொ.பெ. தனது முஸ்லிம் விரோத மற்றும் தமிழர் விரோத பேரினவாதத்தை முடுக்கிவிட்டது. ஐ.எஸ்.ஐ.எஸ். ஆதரவுடைய இஸ்லாமிய பயங்கரவாதக் குழு கடந்த ஆண்டு உயிர்த்த ஞாயிறன்று நடத்திய குண்டுவெடிப்பு தொடர்பான உத்தியோகபூர்வ விசாரணையின் முடிவுகளை அது முஸ்லிம் விரோத பிரசார அலைகளை கட்டவிழ்த்துவிட பயன்படுத்திக்கொண்டது.

அதேநேரம், பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் தலைதூக்கி வருவதாகவும் அது வலியுறுத்தியது. ஆதாரமற்ற இந்தக் கூற்றுகளுக்கு, வடக்கில் பல இடங்களில் ஆயுதங்களைக் கண்டுபிடித்ததாகக் கூறி, பொலிஸ் இந்த பிரசாரத்திற்கு எண்ணெய் வார்த்தது.

கடந்த ஆறு மாதங்களில், ஐ.ம.ச., ஐ.தே.க. ஜே.வி.பி, தமிழ்க் கூட்டமைப்பு, முஸ்லிம் கட்சிகள் மற்றும் பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட எதிர்க் கட்சிகள், ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீல.பொ.பெ. சிறுபான்மை நிர்வாகத்திற்கும் பகிரங்கமாக ஆதரவளித்துள்ளன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அப்போதைய ஸ்ரீல.பொ.பெ. சிறுபான்மை நிர்வாகம் கூட்டிய இரண்டு அனைத்து கட்சிக் கூட்டங்களில் இந்தக் கட்சிகள் கலந்துகொண்டதோடு, 'தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கான' ஜனாதிபதியின் நடவடிக்கைகளை ஆதரித்தன.

ஏப்ரல் 27 அன்று, அதே அமைப்புகள் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டினால் ஜனாதிபதிக்கு 'நிபந்தனையற்ற ஆதரவை' அளிப்பதாக உறுதியளித்தன. ஐ.ம.ச. மற்றும் ஐ.தே.க. தனித்தனியாக இரண்டு முறை அவரைச் சந்தித்த அதேவேளை, தமிழ்க் கூட்டமைப்பு தனிப்பட்ட முறையில் பிரதமரை சந்தித்து அதன் ஆதரவை உறுதிப்படுத்தியது.

மே 4 அன்று, ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தனது கட்சி "அரசாங்கத்திற்கு உதவ தயாராக உள்ளது" என்றும், இது "விரோத அரசியலை விளையாடுவதற்கான நேரம் அல்ல" என்றும் 'டெய்லி மிரர்' பத்திரிகைக்குத் தெரிவித்திருந்தார்.

இந்தக் கட்சிகள் எதுவும் இலங்கையின் அரசாங்க நிர்வாகம் விரைவான மற்றும் தொடர்ச்சியான இராணுவமயமாக்கலை சவால் செய்யவில்லை. அவை அனைத்தும் அரசாங்கம் பாதுகாப்பின்றி 'பொருளாதாரத்தை மீண்டும் திறப்பதற்கும்' மற்றும் வேலைகள், ஊதியங்கள் மற்றும் சமூக உரிமைகள் மீதான பாரிய தாக்குதல்களுக்கும் ஆதரவளிக்கின்றன. ராஜபக்ஷவை போலவே, இந்தக் கட்சிகளும் தொழிலாளர்கள், இளைஞர்கள் மற்றும் கிராமப்புற மக்களின் எதிர்ப்பு மற்றும் வேலைநிறுத்தங்கள் வெடிக்கும் என்று அஞ்சுகின்றன.

தொழிலாள வர்க்கம் அரசாங்கத்திற்கு சவால் விடுவதைத் தடுப்பதில் போலி–இடதுகள் முக்கிய பங்கு வகித்தன. முன்னாள் சிறிசேன – விக்கிரமசிங்க அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கைகளுக்கு எதிரான தொழிலாளர்களின் போராட்டங்களை நவ சமசமாஜ கட்சி (ந.ச.ச.க.), முன்நிலை சோஷலிசக் கட்சி (மு.சோ.க.) மற்றும் ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சியும் தடம்புரளச் செய்தன. இது கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது ஒரே எதிர்க்கட்சியாக தன்னைக் காட்டிக்கொள்வதற்கு கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாய்ப்பளித்தது.

நவ சமசமாஜ கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன, இந்த மாதத் தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளர் பட்டியலில் போட்டியிட்டார். 'கொள்கை முரண்பாடுகள்' இருந்தபோதிலும், தொற்றுநோய்க்கு எடுத்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஆதரிப்பதாக கூறி பிரதமருக்கு மு.சோ.க. இரண்டு முறை கடிதம் எழுதியது.

மு.சோ.க. தொழிற்சங்கத் தலைவர் துமிந்த நாகமுவ, இலங்கை தொழில் அமைச்சர் தினேஷ் குணவர்தனவைச் சந்தித்த பின்னர், தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாக அமைச்சர் உறுதியளித்ததாகக் கூறினார். யு.என்.பி மற்றும் அதன் தொழிற்சங்கங்களும் குணவர்தனவையும் பெருவணிகத் தலைவர்களையும் சந்தித்து, அவர்களின் ஊதியம் மற்றும் வேலை குறைப்புத் திட்டங்களுக்கு ஆதரவளித்து, தொழிலாளர்களின் போராட்டங்கள் வெடிப்பதைத் தடுத்தன.

இந்தத் துரோகங்களை சுரண்டிக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி ராஜபக்ஷவின் புதிய அரசாங்கம், இப்போது வர்க்கப் போருக்குத் தயாராகி வருகிறது.

புதன்கிழமை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ "நாங்கள் பொருளாதார சவால்களை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இவற்றைவிட கடுமையான சவால்களை நாங்கள் ஏற்கனவே எதிர்கொண்டிருக்கின்றோம்" என அச்சுறுத்தலாக அறிவித்தார்.

இது, இந்த ஆண்டு எதிர்மறையாக 1.3 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் கூர்மையான வீழ்ச்சியை சுட்டிக்காட்டுவதாகும். கொவிட்–19 தொற்றுநோய் இலங்கை ஏற்றுமதியை கடுமையாக பாதித்துள்ளதுடன், வெளிநாட்டு வருவாய் வெகுவாகக் குறைந்துள்ளதோடு சுற்றுலாத்துறை சரிந்துள்ளது. கொழும்பு அடுத்த மூன்று ஆண்டுகளில் வெளிநாட்டுக் கடன்களுக்காக 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தவேண்டும்.

முந்தைய அரசாங்கங்கள் 'இதைவிட கடுமையான சவாலை எதிர்கொண்டன' என்ற ராஜபக்ஷவின் கருத்து, 2009 மே மாதம் முடிவடைந்த விடுதலைப் புலிகளுக்கு எதிரான கொழும்பின் இனவாதப் போரைக் குறிக்கிறது.

அந்தக் காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகவும், அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராகவும் இருந்தனர். ஐக்கிய நாடுகள் சபையின் மதிப்பீடுகளின்படி, போரின் இறுதி வாரங்களில் நாற்பதாயிரம் தமிழ் பொதுமக்கள் கொல்லப் பட்டதுடன், நூற்றுக்கணக்கான சரணடைந்த போராளிகள் 'காணாமல் போயினர்'. போரின்போதும் அதற்குப் பின்னரும், ராஜபக்ஷ நிர்வாகம் தொழிலாளர்கள் மற்றும் ஏழைகளின் போராட்டங்களை ஈவிரக்கமின்றி அடக்கியது.

கடந்த வாரம் ஒரு தேர்தல் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ராஜபக்ஷ, ஒரு துறைமுக முனையத்தை இந்திய நிறுவனமொன்றுக்கு விற்பனைசெய்வதற்கு எதிரான 10,000 கொழும்பு துறைமுக தொழிலாளர்களின் போராட்டத்தை கண்டனம் செய்தார்.

"துறைமுகம் மூடப்பட்டிருப்பது நமது பொருளாதாரத்தை இடித்து விழுத்துவதற்கே தவிர, வேறெந்த காரணத்திற்காகவும் அல்ல. நான் இதைக் கண்டு பயந்துவிடவில்லை" என்று அவர் அறிவித்தார். "நாட்டைப் பற்றி அக்கறைகொண்ட ஒரு தலைவர் அதிகாரத்திற்கு வரும்போதெல்லாம் தீவிரவாத குழுக்கள் (அவரை) நாசமாக்குவதற்கு வேலை செய்கின்றன" என அவர் மேலும் தெரிவித்தார்.

ஒரு முழுமையான நாடாளுமன்ற பெரு ம்பான்மையும் புதிய சர்வாதிகார நடவடிக்கைகளும் தொழிலாள வர்க்கத்தின் மீது பாய்வதற்கு தன்னை அனுமதிக்கும் என்று ராஜபக்ஷ நம்பும் அதேவேளை, வெடிக்கவுள்ள போர்க்குணமிக்க போராட்டங்கள் புரட்சிகர குணாம்சத்தை எடுத்துக்கொள்ளும். இந்த ஊழல் நிறைந்த அரசியல் சமூக ஒழுங்குக்கும் மற்றும் 30 ஆண்டுகால யுத்தத்தின்போது நடந்தவை உட்பட வேலைகள், வாழ்க்கை நிலைமைகள் மற்றும் ஜனநாயக உரிமைகள் மீதான அதன் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களின் வளர்ந்துவரும் சீற்றம் ஒரு வெடிப்பு நிலையை எட்டுகின்றது.


ஆழமடைந்துவரும் நெருக்கடியையும் தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் முதலாளித்துவத்தின் ஒவ்வொரு பிரிவுகளிலிருந்தும் பிரிந்து, புரட்சிகர சவால்களுக்குத் தேவையான அரசியல் தயாரிப்புகளைச் செய்யவேண்டியதன் அவசியத்தையும் விளக்கிய ஒரே அமைப்பு, சோஷலிச சமத்துவக் கட்சி (சோ.ச.க.) மட்டுமே.

ஏகாதிபத்திய யுத்த அபாயத்துடன் சேர்த்து, தொற்றுநோய் பேரழிவு மற்றும் ஊதியங்கள், வேலை மற்றும் ஜனநாயக உரிமைகள் மீதான அரசாங்கத்தின் தாக்குதல்களையும் எதிர்கொள்ள ஒவ்வொரு வேலைத்தளத்திலும் தொழிலாள வர்க்க சுற்றுப்புறங்களிலும் நடவடிக்கைக் குழுக்களை அமைக்குமாறு சோ.ச.க. தொழிலாளர்களுக்கு அழைப்பு விடுத்தது. சோஷலிச வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய தொழிலாளர் மற்றும் விவசாயிகள் அரசாங்கத்துக்கான போராட்டமே தொழிலாள வர்க்கத்துக்கான ஒரே வழி என்று சோ.ச.க. தெளிவுபடுத்துகின்றது.

சோ.ச.க. போட்டியிட்ட மூன்று மாவட்டங்களில் மொத்தம் 780 வாக்குகளை வென்றுள்ளது. யாழ்ப்பாணம் – 146, கொழும்பு – 303 மற்றும் நுவரெலியா – 331. இந்த எண்ணிக்கை சிறியதாக இருந்தாலும், அவை சோஷலிசத்துக்கான வர்க்க உணர்வுள்ள வாக்குகளாகும். அவை சோ.ச.க.வுக்கு ஆதரவு பெருகிவருவதற்கான அறிகுறியாகும்.

வரவிருக்கும் காலகட்டத்தில், சோ.ச.க. தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களின் பரந்த அடுக்குகளை சோஷலிச சர்வதேசவாதத்திற்கு வென்றெடுப்பதற்கான அதன் அரசியல் போராட்டத்தை தீவிரப்படுத்தும் மற்றும் தொழிலாள வர்க்கத்தை அதிகாரத்திற்கு இட்டுச்செல்ல ஒரு வெகுஜன கட்சியாக அதை கட்டியெழுப்பும். ***நன்றி - சோஷலிச இணையம்***

## கண்டதும்... கேட்டதும்... பார்த்ததும்...!



*தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த ஒரு தேசியப்பட்டியல்... ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த ஒரு தேசியப்பட்டியல்...*

*இதில் ஐக்கிய கட்சியின் தலைவர் ரணில் கனவான் போல நடந்து, தேசியப்பட்டியல் வேண்டாம் என்று சொல்லியுள்ளார்... ஆனால், கூட்டமைப்பின் நிலைமையை பார்த்தீர்களா? இளவயது ஆட்களுக்கு முன்னுரிமை கொடுக்காமல் மக்களை சந்தித்து சேவையாற்ற முடியாத முதிய ஆட்கள் பட்டியலுக்கு அடித்து சண்டையிட்டுக்கொள்கின்றனர்.*

*ஆயிரம் பிரபாகரன்கள் வந்தாலும் இவர்களை திருத்தமுடியாது என்கிறார் அலுவலக நண்பர் ஒருவர்... உண்மைதான் போலும்...!*

**- சிவா -**
siva@liberty.lk

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# அங்கொட லொக்கா ஏன் கொல்லப்பட்டார்? தமிழ் காதலியின் கைவரிசையா?

## சினிமாவை மிஞ்சிய திகில் சம்பவங்கள்

த்ரில்லர் திரைப்படங்களின் பரபரப்புக்கு கொஞ்சமும் குறைவில்லாமல், அங்கொட லொக்கா பற்றிய பல்வேறு பரபரப்புத் தகவல்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இந்தியாவில் உயிரிழந்த லொக்கா எப்படி வாழ்ந்தார், மரணத்தின் பின்னணி என்ன என்பது பற்றிய பல பரபரப்புத் தகவல்கள் வெளியாகின்றன.

இலங்கை பாதாள உலகக்குழுத் தலைவனாக செயற்பட்ட அங்கொட லொக்கா, திடீரென இலங்கையில் முன்னணி பாதாள உலகக்குழுத் தலைவனாக மாறியவர். பல கொலை, கப்பம், போதைப்பொருள் கடத்தல், அடிதடி விவகாரத்தில் தொடர்புடையவர் லொக்கா.

இந்தியாவின் கோயம்புத்தூர் பகுதியில் உயிரிழந்த அங்கொட லொக்காவின் பின்னணி என்ன?

2017 ஜனவரி 6ஆம் திகதி, ரத்தரன் கொலையுடன் அங்கொட லொக்கா கவனத்தை ஈர்த்தார்.

அங்கொட பகுதியில் சதுப்பு நிலங்களை நிரப்பி விற்பனைசெய்து வந்தவர் ரத்தரன். அந்தப் பகுதி வர்த்தகர்களிடம் கப்பம் வாங்கியும் வந்தவர். நிலங்களை நிரப்பி, அதிக விலைக்கு விற்பனைசெய்த அவரது சட்டவிரோத வர்த்தகத்திற்கு பாதாள உலகக்குழுவின் துணை தேவைப்பட்டது. இதற்காக அவர் தொடர்பில் வைத்திருந்தவரே அங்கொட லொக்கா.

ரத்தரனுக்காக மிரட்டல், கொலை, கடத்தல் போன்றவற்றை லொக்கா செய்துவந்தார்.

ரத்தரனின் மனைவி இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெண். அவரது தந்தை இந்தியர். அவரது தாய் சிங்களவர்.

ரத்தரனும், லொக்காவும் நெருங்கிய நண்பர்களாக மாறினர். லொக்காவின் குடும்ப உறுப்பினர்களும், ரத்தரனின் குடும்ப உறுப்பினர்களும் நெருங்கிய உறவினர்களாக இருந்தனர். ரத்தரன் சிக்கலில் இருக்கும்போது, அவருக்கு உதவும் முதலாவது நண்பராக லொக்கா இருந்தார். லொக்காவுக்கு ஒரு பிரச்சனை என்றால், ரத்தரன் முதலில் வருவார்

பல்வேறு குற்றங்களுக்காக தேடப்பட்டு வந்த அங்கொட லொக்கா பொலிஸாரிடம் சிக்கி, சிறையில் அடைக்கப்பட்டபோது, அவரை பார்ப்பதற்காக ரத்தரன் சிறைக்கு கிரமமாக சென்றார்.

இந்தநேரத்தில், இன்னொரு பாதாள உலகக்குழுத் தலைவனான ரனலே சமயங் என்பவனுக்கும், லொக்காவுக்கும் முரண்பாடு ஏற்பட்டது. ஹெரோயின் வர்த்தகத்தின் பிரதான புள்ளி யார் என்ற மோதலே அது. இதனால், இரு தரப்பு ரௌடிகளும் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டுவந்தனர். சாதாரண மோதலில் ஆரம்பித்து, கொலைகள் விழும் கட்டத்திற்கு அந்த மோதல் வந்தது.

ஜனவரி 6, 2017 காலை, அங்கொட நகரில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமொன்று நடந்தது. நகரில் அடையாளம் தெரியாத இரண்டு துப்பாக்கிதாரிகள், தொழிலதிபர் ரத்தரனை சுட்டுக்கொன்றனர்.

தனது மனைவி நளினியின் அழகு நிலையத்துக்குச் சென்று, மனைவியை இறக்கிவிட்டு திரும்பிவரும் வழியில் கொலை நடந்தது.

கொலைச் செய்தியை அறிந்த நளினி பேரதிர்ச்சியடைந்தார். உடனடியாக ரத்தரனின் வீட்டுக்கு லொக்காவும் வந்தார். தன்னுடனான முரண்பாட்டினாலேயே சமயங் இந்தக் கொலையைச் செய்தார், அவரை பழிவாங்குவேன் என நளினி முன்னிலையிலேயே சபதம் செய்தார்.

அத்துடன், எந்தச் சூழ்நிலையிலும் அவருக்கு உதவியாக இருப்பேன் என்றும் ஆறுதல் கூறினார். ரத்தரன் கொலையைத் தொடர்ந்து, நளினிக்கு பாதாள உலகக்குழுக்களால் அச்சுறுத்தல் இருந்த நிலையில், லொக்காவே அவரை காப்பாற்றினார்.

ரத்தரன் கொலை தொடர்பாக நுகேகொட பிரதேச குற்றப் பிரிவு விசாரணை நடத்தியது. சில நாட்களுக்குப் பிறகு, கொலைக்கான மூல காரணத்தை பொலிஸாரால் கண்டுபிடிக்க முடிந்தது.

ரணாலே சமயங் கும்பல் இந்தக் கொலை நடத்தியதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்தக் கொலை தொடர்பாக சமயங்கின் நெருங்கிய கூட்டாளியான கோதா அசங்க கைது செய்யப்பட்டார்.

கோதா அசங்கவின் வாக்குமூலம் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரே துப்பாக்கிச்சூட்டை நடத்தியதாக குறிப்பிட்டார்.

ரத்தரனின் மரணத்துக்குப் பிறகு, அங்கொட லொக்கா அடிக்கடி அவர்களது வீட்டுக்குச் செல்லத் தொடங்கினார். அவர் நளினியின் நிலையை கவனித்து, தனது குடும்ப உறுப்பினர்களின் தேவைகளையும் பூர்த்திசெய்ய முன்வந்தார்.

"என் சகோதரிக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்பட நான் அனுமதிக்கமாட்டேன். பயப்படாதே. இன்னும் சில நாட்களில் சமயங்கின் கதை முடிவடையும். நீங்கள் பயப்படவேண்டியதில்லை" என நளினியை ஆசுவாசப்படுத்தி வந்தார்.

அந்தநேரத்தில் அங்கொட லொக்கா ஒரு பெரிய பாதாள உலக சக்தியைக் கட்டியெழுப்பிக் கொண்டிருந்தார். பாதாள உலகக்குழுக்களின் கோட்பாதர் என்று அழைக்கப்படும் மாகந்துரே மதுஷுடன் நெருங்கிய உறவைக்கொண்டிருந்த அங்கொட லொக்கா, அதன்மூலம் தனது பாதாள உலக சக்தியை விரிவுபடுத்திக்கொண்டிருந்தார்.

சாமியா, லாசியா உள்ளிட்ட பிற பிரபல ரௌடிகளுடன் ஒன்றாக இணைந்து செயற்பட்டு வந்த அங்கொட லொக்கா, அவர்களை கைவிட்டு, தனி பயணத்தைத் தொடங்கினார்.


அங்கொட லொக்கா அதிகாரம் செலுத்துவதற்கு முன்னர், அத்துருகிரியவின் முல்லேரியா, அங்கொட பகுதியில் ஆதிக்கம் செலுத்தியவர் சாமியா. ஆனால், மதுஷ் எழுச்சிபெற்ற பின்னர், அவருடனிருந்த அங்கொட லொக்கா அந்த ஏரியா தாதாவானார். இதையடுத்து சாமியா உள்ளிட்டவர்கள், அரங்கிலிருந்து ஒதுங்கி, லொக்காவுக்கு வழிவிட்டனர்.

அந்தநேரத்தில் ரத்தரனின் கொலை குறித்த பல்வேறு கதைகள் பாதாள உலகம் முழுவதும் பரவிவந்தன. ரத்தரன் கொலைக்கு அவரது கும்பல் சம்பந்தப்படவில்லை என ரணலே சமயங் கூறிவந்தார். அங்கொட லொக்கா தொலைபேசியில் அழைத்து வினவியபோதும், சமயங் இதை தெரிவித்தார்.










லொக்காவிடமிருந்து ஒதுங்கியிருந்த லாசியா, சாமியா ஆகியோருக்கு தொடர்பிருக் கலாமென அவர் கூறினார். ரத்தரன் கொலை யின் சூத்திரதாரி யார் என்பதை தேடி, பாதாள உலகக்குழுக்கள் தீவிர தேடுதலில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த சமயத்தில் 2017 பெப்ரவரியில் ஒரு அதிர்ச்சி சம்பவம் நடந்தது.

களுத்துறையில் சிறைக்கைதிகளை ஏற்றிச்சென்ற பஸ் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சமயங் உள்ளிட்ட பலர் கொல்லப்பட்டனர்.

அப்போது டுபாயில் பதுங்கியிருந்த மாகந்துரே மதுஷ் மற்றும் கஞ்சிபானை இம்ரான் ஆகியோர் இந்தத் தாக்குதலை வழிநடத்தினர். தாக்குதலை தலைமைதாங்கி நடத்தியவர் அங்கொட லொக்கா.

பொலிஸாரின் சீருடை அணிந்தபடி நின்ற லொக்கா தலைமையிலான குழு தாக்குதல் நடத்தியது. 2 சிறைக்காவலர்கள் கொல்லப் பட்டனர். சமயங் உள்ளிட்ட 7 கைதிகளும் கொல்லப்பட்டனர்.

தாக்குதலை தலைமைதாங்கியது அங்கொட லொக்கா என்பதை அறிந்த பொலிஸார், அவரை பின்தொடரத் தொடங்கினர். அங்கொட லொக்கா தப்பியோடினார். பொலிஸாரிடமிருந்து தப்பிக்க சிலாபத்துக்குச் சென்றார் லொக்கா.

கொழும்பு ஜம்பட்டா வீதியின் பாதாள உலகக் குழுத் தலைவன் புக்குடுகண்ணா, அங்கொட லொக்காவின் நெருங்கிய நண்பர். லொக்கா நாட்டைவிட்டு வெளியேற புக்குடுகண்ணா ஒரு படகு தயார் செய்திருந்தார்.

லொக்காவும், லாபயாவும் சிலாபத்திலிருந்து கடல்வழியாக இந்தியாவுக்கு தப்பிச்சென்றனர். இந்தியாவின் தமிழ்நாட்டின் கோயம்புத்தூரில், இந்திய நாட்டவர் போன்று பெயரை மாற்றி பாஸ்போர்ட் பெற்றார்.

அங்கொட லொக்கா, ஆர்.பன்ரதீப் சிங் என மாறி, போலி ஆதார் அட்டை, பாஸ்போர்ட் பெற்றார்.

பின்னர், பாதாள உலகத் தலைவன் மாகந்துரே மதுஷைத் தேடி துபாய் சென்றார்.

சமயங்கைக் கொன்று நாடு முழுவதையும் உலுக்கிய தாக்குதலை வழிநடத்திய தனக்கு, மதுஷ் பெரு வரவேற்பைத் தருவார் என லொக்கா நினைத்தார். ஆனால், அது நடக்கவில்லை. அவருக்கு எந்த அங்கீகாரமும் மதுஷிடமிருந்து கிடைக்கவில்லை.

இதனால் லொக்கா மிகுந்த ஏமாற்றமடைந்தார். மாகந்துரே மதுஷ் தனது பாதாள உலகக் கூட்டாளியான கஞ்சிபானை இம்ரானுடன் நெருக்கமாக இருந்தார். மதுஷ் எப்போதும் கஞ்சிபானையின் ஆலோசனையின்பேரில் செயற்பட்டார். அங்கொட லொக்கா இருவரி டமும் கோபப்படவில்லை. டுபாயில் சிறிதுநேரம் கழித்த பிறகு, அங்கொட முதலாளி சொந்தமாக வியாபாரம் செய்வதில் ஆர்வம் காட்டினார்.

இதற்கிடையில், அவர் போலி பாஸ்போர்ட்டைப் பயன்படுத்தி சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளுக்குச் சென்றார்.

மதுஷ் தனக்காக பணியாற்றியவர்கள் சுயமாக வாழ உதவி செய்யவில்லை. அதனால் நான் எப்படியோ தனியாக எழுந்திருக்கிறேன் என லொக்கா தனது நெருங்கிய நண்பர்களிடம் தெரிவித்திருந்தார். அவர் ஹெரோயின் வியாபாரத்தை சொந்தமாக நடத்த முயன்றார், ஹெரோயின் கடத்தல்காரர்களுடன் நெருங்கிய உறவைப் பேணி வந்தார். இதற்கிடையில், அங்கொட லொக்கா அடிக்கடி இந்தியாவுக்கு வரத் தொடங்கினார். அந்த நேரத்தில் ரத்தரனின் மனைவி நளினி, லொக்காவின் கள்ளக்காதலியானார்.

'நீங்கள் இலங்கையில் இருப்பது பாதுகாப்பானது அல்ல. நீங்கள் இந்தியாவுக்கு வரும்போது நான் உங்களை கவனித்துக்கொள்வேன், நாங்கள் அங்கு மகிழ்ச்சியுடன் வாழமுடியும்.' - இது லொக்காவால் அவருக்கு சொல்லப்பட்டது.

நளினி, காதல் அரவணைப்பைத் தேடி இந்தியா வந்தார்.

இவர்களது வீடு இந்தியாவின் கோயம்புத்தூரின் புறநகரில் இருந்தது. லொக்கா ஹெரோயின் வியாபாரத்தில் பல வாரங்களாக டுபாயில் இருந்தபோதிலும், இந்தியாவின் கோயம்புத்தூரிலுள்ள தனது வீட்டுக்குச் சென்று நளினியுடன் நெருக்கமாக இருந்தார்.

அங்கொட லொக்காவுக்கு நிறைய பணம் வந்தது. இதனால், அழகான காதலிகளை தொடர்ந்து தேடிக்கொண்டிருந்தார்.

இதற்கிடையில், மாகந்துரே மதுஷ், கஞ்சிபானை இம்ரான் உள்ளிட்ட பாதாள உலகக் குண்டர்கள் கும்பலை டுபாய் பொலிஸார் கைதுசெய்தனர். இவர்கள் கைதுசெய்யப்பட்டதில் லொக்கா மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

மதுஷ், கஞ்சிபானை இம்ரான் மற்றும் பலர் டுபாயிலிருந்து நாடு கடத்தப்பட்ட பின்னர், ஹெரோயின் பாதாள உலக சக்தி அங்கொட முதலாளிக்கு முழுமையாக மாற்றப்பட்டது.

அப்போது மதுஷின் மனைவியும் கஞ்சிபானை இம்ரானின் மனைவியும் டுபாயில் இருந்தனர். ஹெரோயின் கடத்தல்காரர்களுடன் தொடர்பில் இருப்பதற்கும், வியாபாரத்தை நடத்துவதற்கும் அவர்களுக்கு வலிமை இருந்தபோதிலும், இந்த இரண்டு பெண்களாலும் இலங்கையில் ஹெரோயின் விநியோகிக்கும் பலம் இருக்கவில்லை.

அப்போதுதான் இருவரும் ஹெரோயின் தொழிலைத் தொடர அங்கொட லொக்காவின் உதவியை நாடினர். அந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டு, மாகந்துரே மதுஷின் அழகான இளம் மனைவியையும், தனது காதலியையும் பயன்படுத்தி ஹெரோயின் வலையமைப்ப இயக்கத் தொடங்கினார்.

டுபாய் மற்றும் இந்தியாவில் மாறிமாறி தங்கியிருந்தபடி ஹெரோயின் வர்த்தகத்தில் அவர் ஈடுபட்டிருந்தார். வர்த்தகத்தில் பெரும் பணம் ஈட்டிக் கொண்டிருந்தார். வாழ்க்கை சுகமாக நகர்ந்துகொண்டிருந்தது.

அப்போது, அவருக்கு எதிராக இலங்கையில் ஒரு பாதாள உலக நடவடிக்கை தொடங்கப்பட்டது.

அங்கொட லொக்காவுக்கு நெருக்கமாக இருந்து பின்னர் விலகிச்சென்ற சாமியா, ரத்தரனின் கொலை குறித்த அனைத்துத் தகவல்களையும் ஆதாரங்களையும் பெற்றுக்கொண்டார்.

அதாவது, ரத்தரன் கொலையில் தொடர்புபட்டிருந்தது சமயங் அல்ல. அங்கொட லொக்காவே அதைச் செய்தார்!

ரத்தரனின் மனைவியை அடைவதற்காகவே லொக்கா இந்தக் கொலையை செய்தார், ஆனால், அது தெரியாமல் நளினி லொக்காவுடன் வாழ்கிறார் என பாதாள உலகக்குழுக்கள் அறிந்து கொண்டன.

இந்தத் தகவல்களை சாமியா, தனது நெருங்கிய சகாக்களுடன் பகிர்ந்துகொண்டார். சாமியாவும் அவரது பாதாள உலகத் தோழர்களும் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்டிருந்தாலும் கொல்லப்படவில்லை. கொலை செய்ய யாரும் அனுமதிக்கப்படவில்லை.

இருப்பினும், அங்கொட லொக்கா, மாகந்துரே மதுஷ் எந்தவிதமான கட்டுப்பாடுமின்றி கொலைகளைச் செய்தார்கள்.

சாமியாவும் அவரது குழுவும் இந்தக் கொலைக்கான மூலகாரணத்தை கண்டுபிடித்திருப்பது அங்கொட லொக்காவுக்குத் தெரியாது. அவர் நளினியை தனது காதலியாக வைத்திருந்து, அன்பை அனுபவித்து ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தார்.

நளினியின் சகோதரர் இத்தாலியில் இருந்தார். அங்கொட லொக்கா செய்த கிரிமினல் செயல் குறித்து நளினியின் சகோதரருக்கு தெரிவிக்க வேண்டும், இதை இனி ஒரு இரகசியமாக வைக்கக்கூடாது என்று சாமியா முடிவுசெய்தார்.

சாமியா தொலைபேசி அழைப்பேற்படுத்தி, ரத்தரனின் கொலைக்கான மூலகாரணத்தை நளினியின் சகோதரருக்கு கூறினார்.

அங்கொடா முதலாளி ஒரு மிருகம். நளினியைக் கைப்பற்ற ரத்தரனை கொன்றார். அந்தப் பெண்ணுக்கு இது எதுவும் தெரியாது. லொக்கா நீண்டகாலமாக நளினியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ரத்தரன், நளினியை மிகவும் காதலித்து வருகிறார். ரத்தரனை மீறி நளினியை ஒருபோதும் அடையமுடியாது என்பதை அங்கொட லொக்கா உணர்ந்துள்ளார். அதனால்தான் அவர் ரத்தரனை கொல்ல திட்டமிட்டார்.

சமயங்கின் அடியாட்கள் இருவருக்கு, ரத்தரனை கொல்ல பணம் கொடுத்துள்ளார். சிறந்த துப்பாக்கி சுடும் வீரர் கோதா அசங்கவும் இன்னொருவரும் அந்தக் கொலையை செய்தனர் என்ற தகவல்களை நளினியின் சகோதரனிடம் தெரிவித்தார்.

ரத்தரன் கொலையின் உண்மையான நிலைமையை விளக்கும்போது நளினியின் சகோதரர் அதிர்ச்சியடைந்தார்.

கொலை பழியை சமயங் குழுவினர் மீது சுமத்துவதற்காக, சமயங்கின் அடியாட்களை பணம் கொடுத்து இந்தக் கொலையில் ஈடுபடுத்தியதை நளினியின் சகோதரன் தெரிந்தார்

இத்தாலியில் இருந்த சகோதரர், இந்த நிகழ்வுகள் அனைத்தையும் நளினியிடம் கூறினார். கணவரின் உயிரைப் பறித்த குற்றவாளியுடன் வசிக்கிறீர்களா என்று கேட்கப்பட்டபோது நளினி மிகுந்த அதிர்ச்சியையும் கோபத்தையும் அடைந்தார்.

எனினும், சகோதரியை அமைதிப்படுத்தி, பொறுத்துக்கொள்ளும்படி சகோதரன் கேட்டுக் கொண்டார்.

இதை அறியாத அங்கொட லொக்கா கோயம்புத்தூரில் ஓர் ஆடம்பரமான வீட்டில் காதலியுடன் மகிழ்வாக வாழ்ந்து வந்தார்.

உடற்பயிற்சி என்பது அங்கொட லொக்காவின் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாகும். அங்கொட லொக்கா இலங்கையிலும் உடற்பயிற்சியை கிரமமாக செய்துவந்தார். லொக்கா கோவையில் ஒரு உடற்பயிற்சி கூடத்திற்கும் செல்வது வழக்கம்.

கொரோனா தொற்றுநோய் உலகம் முழுவதும் பரவியதால், லொக்காவின் போதைப்பொருள் வர்த்தகம் தடுமாறத் தொடங்கியது. அவர் கடந்த மார்ச் முதல் இந்தியாவின் கோயம்புத்தூரிலுள்ள தனது வீட்டில் தங்கவேண்டியிருந்தது. அந்த நேரத்தில் நளினியும் வீட்டில் இருந்தார். அவளும் இலங்கைக்கு வர முடியாததால், அவர் கோவைக்குச் சென்று லொக்காவை திருப்திப்படுத்தவேண்டியிருந்தது.

ஜூலை 3ஆம் திகதி காலையில், லொக்கா வழக்கம் போல் உடற்பயிற்சி செய்ய ஜிம்மிற்கு செல்லத் தயாரானார். உடற்பயிற்சி செய்வதற்கு முன் ஒரு தூண்டுதல் பானத்தைக் குடிப்பது அவரது பழக்கம். அதேநாளில், லொக்கா வழக்கம்போல் ஒரு தூண்டுதல் பானம் எடுத்துக் கொண்டார்.

சிறிதுநேரத்தில் அவர் மயக்கமடைந்தார். அப்போது நளினி வீட்டில் தங்கியிருந்தார்.

உடனடியாக அவர் கோயம்புத்தூர் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறிதுநேரத்தில், லொக்கா காலமானார். இந்தியர் ஒருவர், அவரது மனைவி மற்றும் நளினி ஆகியோர் லொக்காவின் உடலை பெற்று தகனம் செய்தனர். லொக்கா ஒரு இந்தியர் என குறிப்பிடப்பட்டே தகனம் செய்யப்பட்டது.

எனினும், இந்தத் தகவல்களை நளினியாலும் மற்றவர்களாலும் இரகசியமாக வைக்க முடியவில்லை.

ஜூலை 4ஆம் திகதி, கோயம்புத்தூரிலுள்ள ஒரு வீட்டின் உரிமையாளரையும், அவரது மனைவியையும், நளினியையும் இந்திய பொலிஸார் கைதுசெய்தனர்.

இவர்கள் மூவரும் தற்போது இந்திய சி.ஐ.டி.யின் காவலில் உள்ளனர். அண்மையில் இலங்கையின் தேசிய செய்தித்தாள்களில் செய்தி வெளியானதையடுத்து லொக்காவின் மர்மமான மரணம் குறித்து இந்திய சி.ஐ.டி. விரிவான விசாரணையைத் தொடங்கியது.

லொக்காவின் மரணம் குறித்து பல வதந்திகள் பரப்பப்படுகின்றன. அதன் உண்மை இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை.

கணவர் ரத்தரன் கொலை சூத்திரதாரி லொக்கா என கேள்விப்பட்டு ஆத்திரமடைந்த நளினி, அவரது சக்தி பானத்தில் நஞ்சு சேர்த்து அவரைக் கொன்றதாக வதந்தி பரவியுள்ளது.

ஆனால், அது இன்னும் உறுதிப்படுத்தப்பட வில்லை. அங்கொட லொக்காவின் மரணம் தொடர்பான பிரேத பரிசோதனை அறிக்கை விரைவில் வெளியிடப்படும். இந்த மரணத்திற்கு என்ன காரணம் என்பதை அப்போது அறியலாம்.

**நன்றி - தமிழ்ப்பக்கம்**

# 14 துப்பாக்கிகள்– 3 உலோகப்பரிசோதனை உபகரணங்களுடன் சந்தேகநபரொருவர் கைது!





துப்பாக்கிகள் மற்றும் உலோகப்பரிசோதனைக் குப் பயன்படுத்தக்கூடிய உபகரணங்களுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பிங்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போயகம பிரதேசத்தில் ஜயவர்தனபுர விசேட அதிரடிப்படை முகாமின் திட்ட மிடப்பட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சுற்றிவளைப்பின்போது சந்தேகநபரிடமி ருந்து பயன்படுத்தாத 12 குண்டுகள் போடக்கூடிய 10 துப்பாக்கிகளும் பயன்படுத்தாத 16 குண்டுகள் போடக்கூடிய 4 துப்பாகிகளும் மேலும், உலோகப் பரிசோதனைக்கு பயன்படுத்தும் 3 உபகரணங்களும் சந்தேகநபரிமிருந்து கைப்பற்றப்பட்டுள் ளன. கல்கமுவ பிரதேத்தைச் சேர்ந்த 58 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள் ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# யாருக்கு எந்தப் பதவியை வழங்கவேண்டுமென்பது எமக்குத் தெரியும்: ஜனநாயக மக்கள் முன்னணிக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பதிலடி

யாருக்கு எந்தப் பதவியை வழங்க வேண்டுமென்பதை தகுந்த நேரத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் அதன் தலைமை முடிவெடுக்கும். மாறாக, தேவையற்றோரின் கருத்துகளை கேட்கவேண்டிய அவசியம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு இல்லையென இ.தொ.கா.வின் பிரதேச சபை உறுப்பினர் ஜீவா தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொடர்பாக ஜனநாயக மக்கள் முன்னணியின் உடபளாத்த சபை உறுப்பினர் கனகரட்னம் தெரிவித்துள்ள கருத்துக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“எந்தநேரத்தில் எவ்வாறான முடிவுகளை எடுக்கவேண்டுமென்பது இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்குத் தெரியும். மாறாக, தேவையற்றோரின் கருத்துகளை கேட்கவேண்டிய அவசியம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கில்லை. இதேவேளை, கடந்த நல்லாட்சி அரசாங்கத்தால் ஏமாற்றமடைந்த கண்டி வாழ் மக்கள், இந்தத் தேர்தலினூடாக அரசாங்கத்துடன் இணைந்துள்ளனர். உங்களைப் போன்றவர்கள் மக்களுக்கு முறையாக சேவை வழங்காதமையினாலேயே கண்டியில் அரசாங்கத்தின் சார்பில் களமிறக்கப்பட்ட எமது வேட்பாளருக்கு 23 ஆயிரத்திற்கு அதிகமானோர் வாக்களித்துள்ளனர். இது தொடர்ந்து அதிகரிக்குமே தவிர, எக்காரணத்தைக்கொண்டும் குறையாது.

மக்களுக்காக நிலையான தீர்வைப்பெற்று கொடுப்பதற்கப்பால் தேவைக்கேற்றவாறு சலுகைகளை வழங்கும் அரசியல் செய்யும் கலாசாரம் எங்களிடமில்லை. குறைந்தளவாக தமிழ், முஸ்லிம் மக்களே உங்களுக்கு வாக்களித்துள்ளனர். அவர்களுக்கு முறையான சேவையை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுங்கள். எங்களுடைய செயற்பாட்டை நாங்கள் பார்த்துக்கொள்கின்றோம். நீங்கள் எல்லாம் வந்து எங்களுக்கு கருத்து சொல்லவேண்டிய தேவையில்லை.

நீங்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொடர்பாக பேசியுள்ளதாலேயே நாங்கள் இந்த அறிக்கையை வெளியிடவேண்டியுள்ளது. இதேவேளை, மதியுகராஜாவின் வாக்குகளே அதிகமெனக் கூறியிருந்தீர்கள். கடந்த பல வருடங்களாக கண்டியில் இ.தொ.கா. பெற்றுக் கொண்ட வாக்குகளைவிட எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் பெற்றுக்கொண்ட வாக்குகள் அதிகமாகும்.

நீங்கள் மக்கள் பக்கம் இருக்கின்றீர்கள் என்றால் உங்களுடைய சொந்த சின்னத்தில் நின்று வெற்றியீட்டியிருக்க வேண்டும். தமிழ் மக்கள் உங்களை நிராகரித்துள்ளதாலேயே இம் முறை தேர்தலில் முஸ்லிம் மக்களுடைய வாக்குகளை குறிவைத்து பிரசாரம் செய்தீர்கள் என்பதை மறந்துவிட வேண்டாம். உங்களுக்கு வாக்களித்து மக்களுக்கு சேவை செய்ய முற்படுங்கள். மாறாக, எங்களுக்கு கருத்து சொல்ல வரவேண்டாம் என்றார்.

## அரசியலமைப்பு – தேர்தல் முறைகளில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும்

### - வாசுதேவ நாணயக்கார

(இரத்தினபுரி)

நாட்டுமக்களால் கிடைக்கப்பெற்றுள்ள தேர்தல் வரத்தைக்கொண்டு நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பு மற்றும் தேர்தல் முறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்படல் வேண்டும் என இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் வெற்றியின்பின் எஹலியகொடை நகரில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தேர்தல் முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் மக்களின் விருப்பு வெறுப்புக்கிணங்க வாக்களித்து தமது எதிர்காலத்தை தெளிவாகத் தெரிவுசெய்யும் வாய்ப்பும் கட்சிகளுக்கிடையிலும் ஒரே கட்சியின் வேட்பாளர்களுக்கிடையிலும் பிணக்குகள் ஏற்படாதவாறு வாக்களிக்க நாட்டு மக்களுக்கும் வாய்ப்பு கிடைக்கிறது.

பொதுமக்களால் பொருத்தமான காலத்தில் பொருத்தமான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கிடைத்துள்ள ஆணையை பொது மக்களுக்கு பயனுள்ளதாக பயன்படுத்திக் கொள்வது நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். இதனால் மாகாணசபை உறுப்பினர் ஊடாக கிராமங்களில் நிலவும் பல்வேறு குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# இரண்டு தடவைகள் அடிக்கல் நாட்டியும் புனரமைக்கப்படாத வீதி!



மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட சாமிமலை மின்னா தோட்டத்துக்குச் செல்லும் சுமார் 2.5 கி.மீ. பாதையானது நீண்ட காலமாக குண்டும்குழியுமாக மக்கள் பாவனைக்குதவாத நிலையில் காணப்படுகின்றது.

இந்தப் பாதையை புனரமைத்து தருவதாக பல அரசியல் மேடைகளிலும் தேர்தல் காலங்களிலும் வாக்குறுதிகள் வழங்கியிருந்தாலும் இன்னும் எதுவும் நடைபெறவில்லை. கடந்த ஆட்சியின்போது இரண்டு தடவைகள் அடிக்கல் நாட்டப்பட்டிருந்தாலும் பாதை இதுவரையிலும் புனரமைக்கப்படவில்லை.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜாவால் கடந்த 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி முதன்முறையாக அடிக்கல் நாட்டப்பட்டது. எனினும், பணிகள் எதுவும் இடம்பெறவில்லை. இது தொடர்பில் ஊடகங்களிலும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனையடுத்து முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரத்தால் கடந்த 2019ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7ஆம் திகதி இரண்டாவது முறையாக அடிக்கல் நாட்டப்பட்டு ஆமை வேகத்தில் முன்னெடுக்கப்பட்ட பணிகள் சுமார் 100 மீற்றர் தூரம் வரை சீர்செய்யப்பட்டு இடைநிறுத்தப்பட்டது.

மழை காலங்களில் இப்பாதை சேற்றுநிலமாக காணப்படுவதாகவும் பாடசாலை மாணவர்கள் முதல் கர்ப்பிணித் தாய்மார் வரை இப்பாதையை பயன்படுத்திவருவதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் மூலமாகவும் தமக்குரிய தீர்வு கிடைக்கவில்லையெனவும் தற்போதைய அரசாங்கத்திலாவது தமக்கு தீர்வு கிடைக்கவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலை: நீர்வீழ்ச்சிகள் பெருக்கெடுப்பால் வான்கதவுகள் திறப்பு!



(நோட்டன்)

மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் அதிகரித்துள்ளமையால் மேல்கொத்மலை நீர்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகள் நேற்று அதிகாலை திறந்துவிடப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ந்து மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காணப்படுவதால் நீரேந்தும் பகுதிகளில் நீர்ட்டம் வெகுவாக அதிகரித்துள்ளதுடன், டெவன் மற்றும் சென்.கிளயர் நீர்வீழ்ச்சிகள் பெருக் கெடுத்துள்ளன.

எனவே, கரையோரப் பகுதியில் உள்ளவர்களை அவதானத்துடன் இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்,

நுவரெலியா - ஹட்டன், ஹட்டன் - கொழும்பு உள்ளிட்ட பிரதான வீதிகளில் பனிமூட்டம் அதிகரித்து காணப்படுகின்றது. எனவே, சாரதிகள் அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# மஸ்கெலியா – நல்லதண்ணி பிரதான நெடுஞ்சாலையில் மண்சரிவு

(மஸ்கெலியா)

கடந்த சில வாரங்களாக மத்திய மலைநாட்டில் பெய்த கடும் மழை காரணமாக மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட மஸ்கெலியா – நல்லதண்ணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லக்சிறி பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், சிறிய ரக பஸ்களை மஸ்கெலியா லக்ஸபான வாழைமலை



நல்லதண்ணி பிரதான நெடுஞ்சாலையில் மோகினி எல்ல பகுதியில் வீதி அதிகாரசபையால் வீதியை அகலப்படுத்தி செப்பனிடப்பட்ட பகுதியில் பாரிய மண்மேடு சரிந்துள்ளதுடன், பாரிய கற்களும் சரிந்துவருகின்றன.

இதனால் அவ்வீதியூடாக செல்லும் மஸ்கெலியா, நல்லதண்ணி, மறே செல்லும் வாகனங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வழியாக செல்ல அனுமதித்துள்ளதாகவும் ஏனைய பஸ்களை மஸ்கெலியா லக்ஸபான வரை செல்லுமாறும் பணித்துள்ளார். இந்த மண் பரப்பை அகற்ற குறைந்தது 2 நாட்களாகும் எனவும் இதற்கான ஆரம்பகட்ட பணிகளை தற்போது நோர்வூட் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் பாரிய இயந்திரங்களுடன் அகற்றி வருவதாகவும் அவர் கூறினார்.

# கொஸ்லந்தை பகுதியின் வீதியை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை



(பதுளை)

கொஸ்லந்தை பகுதியின் புனாகலை, பெட்டிகலை, கபரகலை, கல்போக், நாவுலை, மக்கள்தெனிய போன்ற பெருந்தோட்டப் பகுதிகளின் பாதை சீரற்ற நிலையில் காணப் படுவதால் மக்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

மேற்படி, ஆறு கிலோமீற்றர் கொண்ட இப்பாதை குண்டும்குழியுமாகவே காட்சி தருகின்றது. இச்சீரற்ற பாதை வழியாகச் செல்லும் பஸ் அடிக்கடி பழுதாகுவதால், பஸ் சேவைகளும் சீராக இடம்பெறுவதில்லை. இதனால் பாடசாலை செல்லும் மாணவர்களும், பல்வேறு காரணங்கள் கருதி கொஸ்லந்தை நகருக்குச் செல்லும் பெருந்தோட்ட மக்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

ஆகவே, இப்பாதையை சீரமைத்து கிரமமான பஸ் சேவையையும் முறையாக நடத்தும்படி, இப்பகுதி பெருந்தோட்ட மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.




# மறைந்த ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் 28ஆவது ஞாபகார்த்த நிகழ்வு!

(இரத்தினபுரி)

மறைந்த ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் 28ஆவது ஆண்டு ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு கடந்த 8ஆம் திகதி பாணந்துறை கோனதுவ விகாரையில் மத வழிபாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.





1992ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி ஜெனரல் டென்சில் கொப்பெகடுவ உட்பட பல இராணுவ வீரர்களும் பலியாகினர்.

மறைந்த ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ மற்றும் பலியான இராணுவ வீரர்களின் ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு வருடா வருடம் ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி மத வழிபாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பித்தக்கது.

இதனை முன்னிட்டு கடந்த 8ஆம் திகதி பாணந்துறை கோனதுவ விகாரையில் இடம்பெற்ற மத வழிபாட்டு நிகழ்வுகளில் மத குருமார்கள், ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மனைவி லீலி கொப்பேகடுவ, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மற்றும் குடும்ப உறுப்பினர்கள் உட்பட முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# 1,200 ஹெக்டேயர் நிலத்தில் பயிரிடப்பட்ட பெரியவெங்காயச் செய்கை மழையால் சேதம்

(மாத்தளை)

தற்பொழுது பெய்துகொண்டிருக்கும் அடைமழை காரணமாக மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளை – கலேவல, நாவுல ஆகிய பகுதிகளில் சுமார் 1,200 ஹெக்டேயர் நிலத்தில் பயிரிடப்பட்ட பெரியவெங்காய உற்பத்திகள் யாவும் மழையால் பாதிக்கப்பட்டு பெரிய வெங்காய உற்பத்தியாளர்கள் பெரும் நட்டத்திற்கு முகம்கொடுத்தது மட்டுமல்லாமல், பாரிய அசௌகரியங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர்.

கொரோனா வைரஸின் தாக்கத்துடன் விவசாயத் திணைக்கள அதிகாரிகளின் பூரண ஆலோசனைகள் மற்றும் பங்களிப்புடன் பாரிய பணச்செலவில் எதிர்பார்ப்புகளுடன் பெரியவெங்காயச் செய்கையை மேற்கொண்ட போதும் தற்பொழுது இம்மாவட்டத்தில் பெய்துகொண்டிருக்கும் கடும் மழை காரணமாக வெங்காய பயிர்ச்செய்கைகள் சேதமடைந்துள்ளதாகவும், இவ்வுற்பத்திக்காக முதலீடு செய்த பணத்தையாவது ஈடுசெய்துகொள்ள முடியுமோ என்பது சந்தேகத்திற்குரிய விடயம் எனவும் வெங்காய உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எந்த பயிர்ச்செய்கையை மேற்கொண்டாலும் ஒருசில காலங்களில் இயற்கை மழையினாலும், காட்டுயானைகளின் அட்டகாசங்களினாலும் எமது விவசாய உற்பத்திகள் பாதிக்கப்பட்டு வருகின்றன. எனவே, வங்கிகளில் கடன்களைப் பெற்று விவசாய உற்பத்திகளை மேற்கொள்ளும்போது ஏற்படும் நட்டத்தையும் பாதிப்பையும் நிவர்த்திசெய்திட அரசும் விவசாயத் திணைக்களமும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் மேற்படி விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கைத்தொலைபேசிக்குப் பதிலாக கடதாசிப் பொதி; குரியர் சேவைப் பிரதிநிதியின் மாயாஜாலம்!

(பலாங்கொடை)

குரியர் சேவை மூலம் பெண்மணி ஒருவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட கைத்தொலைபேசியை திருடிய அதே குரியர் சேவையை வழங்கிய நபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பலாங்கொடை நகரில் வியாபார நிலையம் நடத்தும் பெண்மணி ஒருவருக்கே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. சம்பவம் பற்றி தெரியவருவதாவது;

பலாங்கொடை நகரில் வியாபார நிலையம் நடத்தும் பெண்மணியொருவர் தான் விலை கொடுத்து வாங்கிய கைத்தொலைபேசி செயலிழந்தமையால் அதனை பழுதுபார்ப்பதற்காக தலைநகரிலுள்ள தொலைபேசி நிறுவனத்துக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இதனை பழுதுபார்த்த தொலைபேசி நிறுவனம் உரிய பெண்மணிக்கு அக் கைத்தொலைபேசியை குரியர் சேவை மூலம் அனுப்பிவைத்துள்ளது. தொலைபேசி குரியர் சேவை பிரதிநிதி மூலம் உரிய பெண்மணிக்கு பொதிசெய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. எனினும், அதை பரீட்சித்து பார்த்தபோது கைத்தொலைபேசிக்குப் பதிலாக கடதாசிப் பொதியே அதில் காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து குரியர் பொதியை விநியோகித்த பிரதிநிதி அச்சந்தர்ப்பத்தில் வெளியேறிச் சென்றதால் இவ்விடயமாக பொலிஸ் நிலையத்தில் அப்பெண் முறைப்பாடு செய்ததற்கிணங்க குரியர் சேவை நிறுவனத்தின் உதவியுடன் பொலிஸார் சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர். விசாரணை நடத்தியதில் பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த குரியர் பிரதிநிதி கைத்தொலைபேசியை 15 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனைசெய்துள்ளமை தெரியவந்துள்ளது.

# பூனாகலை பகுதியில் எரிக்கப்பட்ட நிலையில் சிசுவின் சடலம் மீட்பு!



பிரசவமாகி இரு நாட்கள் மதிக்கத்தக்க பெண் சிசுவொன்றின் சடலத்தை கொஸ்லந்தை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர். பூனாகலை பகுதியைச் சேர்ந்த ஆர்னோல்ட் பிரிவு பெருந்தோட்டக் குடியிருப்பொன்றின் பின்புற பற்றைக்குள் எரியூட்டப்பட்டிருந்த பெண் சிசுவே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

இது குறித்து பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து, தோட்டத்திற்கு விரைந்த பொலிஸார் குறிப்பிட்ட குடியிருப்புப் பகுதியைச் சூழ மேற்கொண்ட தேடுதலின்போதே, சிசுவின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணையை மேற்கொண்ட பண்டாரவளை நீதவான் நீதிபதி கீர்த்தி கும்புறுஹேன, சிசுவின் சடலத்தை பரிசோதனைக்காக பதுளை அரசினர் மருத்துவமனை சட்டவைத்தியப் பிரிவிடம் ஒப்படைத்து, அதற்கான அறிக்கையை சமர்ப்பிக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அத்துடன், சிசுவின் தாயென கருதப்படும் 28 வயது நிரம்பிய இளம் பெண்ணையும் கைது செய்யும்படி விடுக்கப்பட்ட உத்தரவையடுத்து, பொலிஸார் அப்பெண்ணை கைதுசெய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். அப்பெண்ணின் உடல்நிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சிசு இறந்த நிலையில் பிரசவமானதா அல்லது கொலைசெய்யப்பட்டதா என்று அறியும் வகையில் தீவிர புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.







ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் புதிய பிரதமராக பதவியேற்ற பின்னர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நாரஹேன்பிட்டி அபயராம, பெல்லன்வில ரஜ மஹா விகாரை மற்றும் பெபிலியான சுனேத்ராதேவி மஹா பிரிவேனா ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து மகா சங்கத்தினரின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டார்.

# முகப்புத்தகத்தினூடாக ஏற்பாடுசெய்யப்பட்ட போதைப்பொருள் களியாட்ட நிகழ்வு!

## 5 பெண்கள் உட்பட 20 சந்தேகநபர்கள் கைது



முகப்புத்தகத்தினூடாக ஏற்பாடுசெய்யப்பட்ட சட்டவிரோத போதைப்பொருள் களியாட்ட நிகழ்வொன்று பெல்லன்துடாவ பிரதேசத்திலுள்ள விடுதியொன்றில் இடம்பெற்றுள்ளது. இந்த நிகழ்வு தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்த விடுதியின் உரிமையாளர் உட்பட அந்த களியாட்ட நிகழ்வில் கலந்துகொண்ட 19 சந்தேகநபர்களும் மில்லனிய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் களுத்துறை குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த 20 சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விடுதியின் உரிமையாளர் உட்பட 14 சந்ததேகநபர்களுடன் 5 பெண்களும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 2 கிராம் 465 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள், 13 கிராம் நிறையுடைய கஞ்சா மற்றும் 5 போதை மாத்திரைகள் பொலிஸாரின் பொறுப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. சந்தேகநபர்களுடன் தொடர்புடைய வழக்குப்பொருட்கள் மில்லனிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் 60, 17, 18, 19, 20, 23 மற்றும் 32 வயதுடையவர்கள் என்றும் பண்டாரகம, மெல்லமுல்ல, தெஹிவளை, பாணந்துறை, தொடாங்கொட, வெல்லன்துடாவ, யடியன, கடுவெல, பொரலஸ்கமுவ மற்றும் ஹொரணை ஆகிய பிரதேசங்களை வதிவிடமாகக் கொண்டவர்களென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஹொரணை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்செய்யப்பட்டதோடு இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஐ.தே.க. முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கைது!

**ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் அநுர மஞ்சநாயக்க பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கலிகமுவ – பொயகொட பகுதியிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.**

**துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 14 ரவைகளுடன் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன், அவரது வீட்டை சோதனையிட்டபோது, நிலத்தை அகழும் அதிநவீன இயந்திரங்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

**மேலும், சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.**

# அமெரிக்க தூதரக பாதுகாப்பு இணைப்பதிகாரி – இராணுவத் தளபதிக்கிடையில் சந்திப்பு

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு இணைப்பதிகாரி லெப்டினன்ட் கேணல் ரைவிஸ் கொஸ் - பாதுகாப்பு பிரதானியும் இராணுவத் தளபதியும் கொவிட் - 19 பரவலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவருமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவுடனான சந்திப்பு ஜயவர்தனபுர இராணுவ தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்த நல்லுறவு கலந்துரையாடலில் இரு நாடுகளிடையே மேம்படுத்தவேண்டி முக்கியத்துவ விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது. அத்தோடு, இலங்கையில் கொவிட் - 19ஐ கட்டுப்படுத்துவதில் இலங்கை இராணுவம் மற்றும் பங்குதாரர்களின் பங்களிப்பை அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்பு இணைப்பதிகாரி பாராட்டினார்.



இந்நல்லெண்ண சந்திப்பின் நிறைவில் நினைவுச் சின்னங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

# நாட்டின் காலநிலை முன்னறிவிப்பு

**மழை நிலைமை:**

புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

**காற்று:**

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும். காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக கொழும்பு வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் மாத்தறையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

**கடல் நிலை:**

காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக கொழும்பு வரையான கடற்பரப்புகளும் மாத்தறையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

பேருவளையிலிருந்து காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் கடல் அலைகள் 2.0 – 2.5 மீற்றர் உயரம் வரை (இது கரைக்கு வரும் அலைகளின் உயரம் அல்ல) மேலெழும்பக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் பொதுமக்களும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுள்ளது.

# ராஜிதவை நீதிமன்றத்தில் முன்னிலையாக உத்தரவு!



முன்னாள் அமைச்சர் ராஜித சேனரத்ன மற்றும் அரச மருந்துக் கழகத்தின் முன்னாள் தலைவர் மொஹமட் ரூமி ஆகியோரை ஓகஸ்ட் 28ஆம் திகதி முன்னிலையாகுமாறு கொழும்பு உயர்நீதிமன்றம் நேற்று அழைப்பாணை அனுப்பியுள்ளது.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நடைபெற்ற சர்ச்சைக்குரிய வெள்ளை வாகன ஊடக சந்திப்பு தொடர்பாக இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டது.

இதே சம்பவம் தொடர்பாக ஜூலை 31ஆம் திகதி சட்டத்தரணி தப்புல டி லிவேரா கொழும்பு உயர் நீதிமன்றத்தில் இருவர் மீதும் குற்றச்சாட்டுகளை பதிவுசெய்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனரத்ன 2019 ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நொவம்பர் 10 ஆம் திகதி சர்ச்சைக்குரிய பத்திரிகையாளர் சந்திப்பை ஏற்பாடுசெய்திருந்தார்.

இதில், வெள்ளை வாகன கடத்தலில் ஈடுபட்டவர், கடத்தலில் ஈடுபட்டவர் என குறிப்பிட்ட இருவர் இந்தச் சந்திப்பில் பல தகவல்களை தெரிவித்தனர். இருவருக்கும் நிதியுதவி செய்ததாக மொஹமட் ரூமி மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ராஜிதவை கைது செய்ய 2019 டிசம்பரில் குற்றவியல் புலனாய்வுத் துறைக்கு (சிஐடி) சட்டமா அதிபர் திணைக்களம் அறிவுறுத்தியது. பின்னர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட ராஜித சேனரத்னவுக்கு கொழும்பு தலைமை நீதவான் 2019 டிசம்பரில் பிணை வழங்கினார்.

இருப்பினும், 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சட்டமா அதிபர், ராஜிதவிற்கு பிணை வழங்குவதற்கான நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக நீதிமன்றத்தில் திருத்தப்பட்ட விண்ணப்பத்தை தாக்கல் செய்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனரத்ன, பின்னர் மே 13 அன்று சிஐடியால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். 2020 ஜூன் 10 அன்று அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

# வவுனியா – மன்னார் வீதி செப்பனிடும் பணிகள் துரிதகதியில் முன்னெடுப்பு

(வவுனியா)

10 வருடங்களுக்கும் மேலாக குண்டும் குழியுமாக காணப்பட்ட வவுனியா - மன்னார் பிரதான வீதி செப்பனிடும் பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியுடன் இணைக்கப்பட்ட வீதிகள் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இவை புனரமைக்கப்படுகின்றன.

இவ்வீதிகளை செப்பனிடும் பணிகள் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப் பட்டிருந்தபோதிலும் கொவிட்-19 காரணமாக அவை முற்றாக தடைப்பட்டிருந்தன. தற்போது இலங்கையில் கொவிட் - 19 இன் தாக்கம் குறைவடைந்துள்ள நிலையில், துரிதகதியில் வீதி செப்பனிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

தற்போது வவுனியா - மன்னார் பிரதான வீதியில் காணப்படும் பாலங்கள் அமைக் கப்பட்டுவருவதுடன், கற்பகபுரம் - பம்மைமடு போன்ற பகுதி வரை கார்ப்பட் இடுவதற்குரிய முதற்கட்ட நடவடிக்கையும் இடம்பெற்று வருகின்றது.



கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கண்துடைப்புக்காக வீதிகளின் குழிகளை அடைக்கும் பணிகளே வருடாவருடம் இடம் பெறுகின்றபோதும் குழிகளும் முழுமையாக அடைக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ள மக்கள், பிரமணாலங்குளம் பகுதியில் வவுனியா - மன்னார் பிரதான வீதியின் நடுவே மன்னார் வீதி விவசாய நிலமாக மாற்றப்பட்டுள்ளது என்ற வாசகத்தை தாளில் எழுதி அதனை வாழைமரத்தில் கட்டி வாழைமரத்தை வீதியின் நடுவே காணப்பட்ட குழியினுள் நாட்டிய சம்பவங்களும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் சின்னாபின்னமாகியுள்ளது மாமனிதர் ரவிராஜின் சிலைப் பகுதி!



யாழ். சாவகச்சேரி பிரதேச செயலக முன்றலில் அமைந்துள்ள அமரர் ரவிராஜின் உருவச்சிலையை சுற்றி அலங்கரிங்கப்பட்டிருந்த பூச்சாடிகள் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 5 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அமரர் ரவிராஜின் உருவச்சிலையை மூடி சசிகலா ரவிராஜின் ஆதரவாளர்களால் கட்டப்பட்டிருந்த கறுப்பு, சிவப்புத் துணிகளும் அகற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள்

**11.08.2020 (செவ்வாய்க்கிழமை)**

**வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம்
சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்**

| | |
|---|---|
| மேஷம் - | நிறைவு |
| ரிஷபம் - | நட்பு |
| மிதுனம் - | சுகம் |
| கடகம் - | ஆதாயம் |
| சிம்மம் - | தாமதம் |
| கன்னி - | விருப்பம் |
| துலாம் - | தடங்கல் |
| விருச்சிகம் - | தேர்ச்சி |
| தனுசு - | வெற்றி |
| மகரம் - | நன்மை |
| கும்பம் - | மகிழ்ச்சி |
| மீனம் - | பக்தி |

**சுப நேரம்**
காலை: 07.05 -08.45
காலை: 04.15 - 05.45

**இராகு காலம்**
03.04
04.35

**எம கண்டம்**
09.04
10.34

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் ஆசனம் ஒதுக்கீடு

## தன்னிச்சையான முடிவுக்கு செல்வம் அடைக்கலநாதன் கண்டனம்



(மன்னார் நகர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கத்தின் (டெலோ) கருத்தையும் கேட்டு அந்தக் கருத்தின் பிரகாரம் முடிவுகளை எடுத்திருந்தால் மிகச் சிறப்பாக இருந்திருக்கும். தன்னிச்சையாக தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கின்றேன் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், டெலோ கட்சியின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் ஆசனம் பங்காளிக்கட்சிகளான புளொட் மற்றும் டெலோ ஆகிய இரு கட்சிகளுடன் எவ்வித ஆலோசனைகளும் நடத்தாமல் அம்பாறை மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்துக்கு குறித்த தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டமைக்கு டெலோ எவ்வித எதிர்ப்பும் இல்லை. ஏனைய மாவட்டங்களில் பிரதிநிதித்துவம் இருக்கின்றமையால் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் ஏனையவர்களில் மிகவும் மோசமான செயற்பாடுகளால் பாதிக்கப்படுகின்றனர்.

அடக்குமுறைக்குள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற எமது மக்களுக்கு ஒரு பிரதிநிதித்துவம் தேவை. அந்தப் பிரதிநிதித்துவத்தை அம்பாறை மாவட்டத்திற்கு வழங்குவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை. ஆனால், ஜனநாயக ரீதியில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்திலாவது கலந்தாலோசிக்கவேண்டிய நிலை உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான தமிழீழ விடுதலை இயக்கம் டெலோவின் கருத்தையும் கேட்டு அந்தக் கருத்தின் பிரகாரம் முடிவுகளை எடுத்திருந்தால் மிகச் சிறப்பாக இருந்திருக்கும்.

சம்பந்தன் தன்னிச்சையாக குறித்த தெரிவை மேற்கொண்டிருக்கின்றார் என்பது வேதனையை ஏற்படுத்தியுள்ளது. சின்ன விடயத்திலேயே இவ்வாறு நடந்துகொண்டால் இனிவரும் காலங்களில் சரியான ஒரு முடிவை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளை செய்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே இந்த கருத்துகளை நாங்கள் முன்வைக்கின்றோம். எங்களோடும் கலந்தாலோசித்து எடுக்கப்படுகின்ற முடிவுகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்ற அனைவரும் ஆதரவை வழங்குவோம்.

ஏற்கனவே எமக்கு ஆசனங்கள் குறைவடைந்துள்ளன. எங்களுக்கிடையில் ஒற்றுமை இல்லை என்கின்ற நிலைப்பாடு உள்ளது. அந்தவகையில் இவ்வாறான சம்பவங்கள் காலப்போக்கில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தும்.

மாவை சோனதிராஜாவிடம் கூட ஆலோசனைகள் செய்தார்களா என்று தெரியவில்லை. குறித்த தேசியப்பட்டியல் ஆசனமானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளுடன் கலந்து ஆலோசித்து வழங்கப்பட்டிருக்கவேண்டும். தன்னிச்சையான முடிவை நாங்கள் எதிர்க்கின்றோம். இவ்வாறான தன்னிச்சையான முடிவு இனி எந்தக் காலத்திலும் மேற்கொள்ளப்படக்கூடாது.

சம்பந்தன் ஒரு வயது முதிர்ந்தவர். அனுபவம் உள்ளவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக உள்ளவர். இவ்வாறான சம்பவங்கள் எமது மக்களை சஞ்சலத்திற்கு உள்ளாக்கும்.

எனவே, குறித்த தன்னிச்சையான செயற்பாட்டுக்கு எனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றேன் – என்றார்.

# உரிமைக்காக மடிந்தோர் பூமியில் மனம் மாறும் இளைஞர்கள்: சலுகைகளை வழங்கி எங்கிருந்தோ வந்தவர்கள் வெல்கிறார்கள்!

## விக்னேஸ்வரன் வேதனை





தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக்காக தேர்தல் காலங்களில் கட்சியின் பிரசாரத்துக்காக உழைத்த நண்பர்கள், நலன்விரும்பிகள், கட்சியின் தொண்டர்கள் அனைவரையும் கௌரவிக்கும் முகமாக அவர்களை நேரில் சந்தித்த கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன், முன்னாள் வடமாகாண கல்வியமைச்சர் க.சர்வேஸ்வரன், சி.சிவகுமார் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு சி.வி.விக்னேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில்,

நடைபெற்று முடிந்த தேர்தல் தற்செயலாக ஒரு தீர்மானத்தை தந்துவிட்டதாக நினைத்து விடவேண்டாம். ஏனென்றால், இதில் ஒரு செயற்பாடு உள்ளது. 2013 ஆம் ஆண்டு நான் வடமாகாண சபையின் முதலமைச்சராக பதவியேற்ற பின்னர் ஜோன் அமரதுங்கவின் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பங்குபற்றியிருந்தேன். அங்கே ஒரு கருத்தைக் கூறினார்கள். வடமாகாணத்தில்தான் அதிகமான போதைப்பொருட்கள் பாவிக்கப்படுகின்றன, வடமாகாணத்தின் ஊடாகவே போதைப்பொருட்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்படுகின்றன என்று எம்மைத் தாழ்த்தி அவதூறாகப் பேசினார்கள்.

2009ஆம் ஆண்டு வரையில் எந்தவிதமான போதைப்பொருள் பாவனையும் இல்லை என்று அவர்களுடைய அறிக்கையே காட்டுகின்றது. ஆனால், 2013 ஆம் ஆண்டில் போதைப்பொருள் வடமாகாணத்தில் அதிகமாக பாவிக்கின்றார்கள் என்றால் ஏதோ காரணம் இருக்கவேண்டும்.

போர் முடிவடைந்த பின்னர் இராணுவத்தினர், கடற்படையினர், பொலிஸார் உள்ளனர். அப்படியிருக்கையில் போதைப்பொருள் எவ்வாறு இங்கு வருகின்றது, முன்னர் இல்லாத போதைப் பொருட்கள் இவர்கள் இருக்கும்போது எவ்வாறு வருகின்றது என்றால் இவர்களுக்கும் போதைப்பொருள் காரர்களுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கின்றதா என்று கேள்வியை எழுப்பியபோது அவர்களால் எதையுமே கூற முடியாமல் இருந்தது.

போர் முடிவடைந்த பின்னர் இன்றுவரை இருக்கின்ற அரசாங்கங்கள் இராணுவத்தினரை வைத்திருப்பதற்குக் காரணம், வடக்கு, கிழக்கை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகவே. இதற்கு அவர்கள் பயன்படுத்தும் யுத்திகளாக இளைஞர்களை போதைப்பொருட்களுக்கு அடிமையாக்கி, களியாட்ட நிகழ்வுகளில் அவர்களை ஈடுபடுத்தி அவர்களுடைய மனங்களை மாற்றுகின்றார்கள்.

எமது உரிமைக்காக போராடிய இளைஞர்கள் மடிந்த காலம் போய் வெறும் களியாட்ட நிகழ்வுகளிலே எமது இளைஞர் களுடைய மனம் லயிக்கக்கூடியதான சூழலை ஏற்படுத்துகின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்தவர்கள் அரசாங்கத்தின் கையாட்களாக மாறினார்கள். அது எதற்காக என்றால் வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்களின் மனதை மெல்ல மெல்லமாக மாற்றி உரிமைகளை விட்டு சலுகைகளை நோக்கிச் செல்லவைப்பதற்கான சதித்திட்டத்தின் விளைவுதான் இந்தத் தேர்தலில் ஒரு தீர்மானம் மக்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இப்பொழுது இருக்கும் இளைஞர்களுக்கு போரின் வலிகள், துன்பங்கள் தெரியாது. ஏனென்றால், போர் நடைபெற்ற காலத்தில் அவர்கள் சிறுவர்களாக இருந்திருப்பார்கள். இப்பொழுதுதான் வாக்களிக்கும் உரிமையைப் பெற்று இளைஞர்களாக உள்ளனர். அவர்கள் களியாட்ட நிகழ்வுகளும் போதைப்பொருள் பாவனை போன்ற தற்காலிக சந்தோஷங்களில் இருக்கின்றார்களே தவிர, வருங்காலத்தில் தமிழ் மக்களுக்கு என்ன நடைபெறப் போகின்றது, தமிழனின் கலாசாரம், பண்பாடு, மொழி இவை அனைத்தையும் அழிக்கத் துடிக்கின்றார்கள் போன்றவை பற்றிய எந்த சிந்தனையும் கிடையாது.

இவ்வாறான ஒரு நிலையிலேயே மக்கள் தீர்மானம் தரப்பட்டிருக்கின்றது. ஆகவே, எமது இளைஞர்கள் இதிலிருந்து விடுபட வேண்டுமாக இருந்தால் பலவிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இளைஞர்களுடைய குறிக்கோள்களை மாற்றவேண்டும். சமூகப் புரட்சியொன்றை ஏற்படுத்த தவறுவோமாக இருந்தால் நாங்கள் அழிந்தவராகிவிடுவோம்.

வெகுவிரைவிலே இந்த நாட்டிலே சர்வதிகாரம் திளைக்கப்போகின்றது. அதற்குரிய சகலவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருகின்றன. அதற்குரிய அத்திவாரம் இடப்பட்டுவிட்டது.

ஆனாலும் எமது உரிமைகளை நாம் கேட்டே தீருவோம். ஆனால், சிலர் நினைக்கின்றார்கள் அதிகாரப் பலம் அவர்களிடம் சென்றதன் பின்னர் கிடைப்பதைப் பெற்றுக்கொண்டு நாங்கள் வாயை மூடிக்கொண்டு இருந்தால் என்ன என்று நினைக்கின்றார்கள்.

சலுகையா, உரிமையா என்ற போராட்டத்தில் இப்பொழுது நாம் சலுகைக்கு இடமளித்து விட்டோம். எங்கோ இருந்தவர்கள் வந்து இரவிரவாக மக்களுக்கு சலுகைகளைக் கொடுத்து இன்று மக்களால் தெரிவுசெய்யப் பட்டிருக்கின்றார்கள். ஆகவே, கட்சியின் வெற்றிக்காக உழைத்த அனைவரும் இனிவரும் காலங்களில் மக்களின் எழுச்சிக்காக, புரட்சிக்காக பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

# மக்கள் தந்த பொறுப்புகளை நிச்சயம் நிறைவேற்றுவோம்

## வினோ நோகராதலிங்கம்



அரசியல் உரிமை சார்ந்த விடயங்களில் வருகின்ற அரசாங்கத்திற்கு எங்களால் முடிந்த அனைத்து அழுத்தங்களையும் வழங்கி இனப்பிரச்சினைக்கான தீர்வை நாங்கள் நகர்த்தி ஒரு முடிவை எடுப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டிய பொறுப்பு மக்களால் எங்களுக்கு தரப்பட்டுள்ளது. அதனை செய்துமுடிக்க வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

மன்னாரிலுள்ள அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான தமிழீழ விடுதலை இயக்கத்தில் வன்னி மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற எனக்கு வாக்களித்த வன்னி மாவட்ட மக்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எதிர்வரும் காலங்களில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடும், தமிழ்த் தேசியத்தோடும் பயணித்து எங்களுடைய அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கு எங்களுடைய இனப்பிரச்சினையை தீர்த்து அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற் கும் தொடர்ந்தும் மக்களின் தரவு தேவைப்படுகின்றது. அதேபோல், மக்களின் அன்றாட பிரச்சினைகளையும் அத்தியாவசிய பிரச்சினைகளையும் தீர்த்துவைக்கவேண்டிய ஒரு கடமைப்பாடும் எங்களிடம் சுமத்தப்பட்டுள்ளது.

நிச்சயமாக அந்தக் கடமையை நாங்கள் சரியான முறையில் செய்துமுடிப்போம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தத் தேர்தலில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதை நாங்கள் உணர்கின்றோம். எதிர்காலத்தில் இந்த வீழ்ச்சிக்கு காரணமான விடயங்களை ஆராய்ந்து தமிழ் மக்களிடமிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அந்நியப்படுத்த முனைகின்ற சக்திகளை இனங்கண்டு அதற்கான தீர்வை நாங்கள் பரிகாரமாக ஏற்று செயற்படுத்தவேண்டிய கட்டாயம் எமக்குள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பல குறைபாடுகள் இருக்கின்றன. அவை தீர்த்து வைக்கப்படவேண்டியவை. குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு அரசியல் கட்சியாக தேர்தல் திணைக்களத்தில் பதிவுசெய்வது தொடக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கென கடந்த காலங்களில் ஒருங்கிணைப்புக் குழு என்று ஒரு குழு செயற்பட்டு வந்தது. அது விரிவுபடுத்தப்பட்டு ஒழுங்கான நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு செயல் வடிவம் கொடுக்கப்பட்டு எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டால் மாத்திரமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால வளர்ச்சியை கொண்டுவர முடியும்.

அந்த முயற்சிக்கான சகல அழுத்தங்களையும் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்று என்ற ரீதியிலும், குறித்த கட்சியின் பிரதிநிதி என்ற ரீதியிலும் நிச்சயமாக நானும் அதற்குரிய பூரண ஒத்துழைப்புகளை வழங்கி ஏனைய கட்சிகளுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலுவாக்கி பலப்படுத்தவேண்டிய ஒரு தேவையுள்ளது. அதனை நிச்சயமாக நாங்கள் எதிர்காலத்தில் செய்து முடிப்போம். அதேபோல் அரசியல் உரிமை சார்ந்த விடயங்களில் வருகின்ற அரசாங்கத்திற்கு எங்களினால் முடிந்த அனைத்து அழுத்தங்களையும் வழங்கி இனப்பிரச்சினைக்கான தீர்விவை நாங்கள் நகர்த்தி ஒரு முடிவை எடுப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டிய பொறுப்பு மக்களினால் எங்களுக்கு தரப்பட்டுள்ளது.

அதனை செய்துமுடிக்க வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது. மக்களின் அன்றாட வாழ்வாதார விடயங்களிலும், அபிவிருத்தி விடயங்களிலும் முக்கிய கவனம் செலுத்தவேண்டியிருக்கின்றது. இந்தத் தேர்தல் முடிவுகள் கூட அபிவிருத்தி விடயங்களில் மக்களின் ஒவ்வொரு கிராமங்களிலும் நாங்கள் சீர்தூக்கிப் பார்த்து அந்த கிராம மக்களின் தேவைகள் என்ன என்று ஆராய்ந்து அவர்களுடைய வாழ்வாதாரம், அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டி உள்ளது. நிச்சயமாக இது ஒரு கஷ்டமான விடயமாக காணப்படும். மூன்றில் இரண்டு பெறும்பான்மைப் பலத்துடன் இருக்கின்ற அரசாங்கத்திடம் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டும் அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கின்றபோது அவர்கள் மாற்றான் கை மனப்பாங்குடன் எமது கட்சியை பார்க்கின்ற ஒரு நிலைமை நிச்சயமாக ஏற்படும். அவற்றையெல்லாம் நாம் தாண்டி எமது மக்களின் அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்கின்ற முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குகின்ற முயற்சியில் எங்களுடைய சகல முயற்சிகளும் எதிர்வரும் ஐந்து ஆண்டுகளில் நாடாளுமன்ற ஆயுட் காலத்துக்குள் நிச்சயமாக செய்துமுடிப்போம்.

கடந்த காலங்களில் தீர்த்துவைக்கப்படாத, தீர்க்கப்பட வேண்டிய பல்வேறு விடயங்கள் உள்ளன. குறிப்பாக, அரசியல் கைதிகளின் பிரச்சினை, காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினை, காணி சுவீகரிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இன்னும் தீர்த்துவைக்கப் படாமல் அரசாங்கம் இவற்றுக்கு எவ்வித பொறுப்புக்கூறலும் செய்யாமல் காலம் கடத்திக்கொண்டிருக்கும் நிலைமை உள்ளது. இவையெல்லாம் உடனடியாக தீர்த்து வைக்கப்படவேண்டிய பிரச்சினைகள். இவற்றுக்கு காலம் தாழ்த்தி, கால நீடிப்பு வழங்கி, தீர்த்து வைக்காமல் இருக்கின்ற நிலைமையை ஏற்படுத்தாமல் பிரச்சினைகளை உடனடியாக தீர்ப்பதற்கு அரசுக்கு உரிய அழுத்தங்களை வழங்கி இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான சகல நடவடிககைகளையும் முன்னெடுப்போம் - என்றார்.




# மன்னார் ஆயரிடம் ஆசிபெற்ற செல்வம் - வினோ!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எஸ்.வினோநோகராதலிங்கம் ஆகியோர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சென்று மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையிடம் ஆசி பெற்றதோடு, பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) கட்சி சார்பில் போட்டியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எஸ்.வினோநோகராதலிங்கம் ஆகியோர் வெற்றிபெற்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சென்று மறைமாவட்ட ஆயரிடம் ஆசி பெற்றனர்.

அதனைத்தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட ஆயருடன் கலந்துரையாடினர். குறித்த கலந்துரையாடலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய நிலைப்பாடு குறித்தும், ஏனைய விடயங்கள் குறித்தும் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய வனப்பூங்கா பகுதியில் கரையொதுங்கிய 700 கிலோ எடையுள்ள கடற்பன்றி வகை மீன்

(மன்னார் நகர்)

மன்னார் ஆதாம் பாலத்திற்குட்பட்ட தேசிய வனப்பூங்கா பகுதியில் பாரிய மீன் சடலமாக கரையொதுங்கியுள்ளதைத் தொடர்ந்து வனஜீவராசிகள் திணைக்களத்தினர் குறித்த பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்டுள்ளனர்.

தலைமன்னார் ஊர்மனை வனஜீவராசிகள் திணைக்கள வட்டாரக் காரியாலய பகுதிக்குட்பட்ட நடுக்குடா கடல்வளப் பூங்கா கரையோரப்பகுதியில் கடற்பன்றி என பெயருடைய பாரிய மீன் கரையொதுங்கிருந்தமையை கடற்கரையோர ரோந்துப்பணியில் ஈடுபட்ட கடற்படையினர் அவதானித்து



வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கியிருந்தனர். அதனைத் தொடர்ந்து குறித்த திணைக்கள அதிகாரிகள் ஸ்தலத்திற்கு விஜயம் மேற்கொண்டு மீனை பார்வையிட்டதுடன், ஆய்வுகளையும் மேற்கொண்டனர்.

அதனடிப்படையில் மீனின் ஒருபகுதி உணவுக்காக வேட்டையாடப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து நேற்று பகல் மீனின் உடற்கூற்றுப் பரிசோதனை வனஜீவராசிகள் திணைக்கள வைத்திய அதிகாரி மற்றும் உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கடற்பன்றி இனமானது தற்போது அருகிவரும் பாலூட்டி மீன் இனத்தைச் சேர்ந்தது என்பதுடன், கரையொதுங்கிய கடற்பன்றி 3.3 மீற்றர் நீளமானதும் சுமார் 700 கிலோகிராம் எடை கொண்டதுமாகும்.

கடற்பன்றியின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னர் குறித்த அறிக்கையானது மன்னார் நீதவான் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மர்மக்கும்பலால் இளம்பெண் கடத்தல்

(யாழ் நிருபர்)

யாழ்ப்பாணம் நீர்வேலி வடக்கில் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத மர்மக் கும்பலால் இளம் யுவதியொருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

நீர்வேலி வடக்கு பகுதியிலுள்ள வீடொன்றுக்கு வெள்ளை வானில் சென்ற நான்கு பேர் கொண்ட குழுவினர் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து வீட்டிலிருந்தவர்களை தாக்கியுள்ளனர்.

வீட்டிலிருந்த 20 வயது யுவதியை பலாத்காரமாக கடத்திச் சென்றுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், இந்தச் சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் களைகட்டும் றம்புட்டான் வியாபாரம்

(வவுனியா)

தற்போது றம்புட்டான் விளைச்சல் அதிகரித்துள்ள நிலையில், நாட்டின் அனைத்து பாகங்களிலும் அதன் விற்பனையும் அதிகரித்துள்ளது. அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் றம்புட்டான் பழ விற்பனை சூடுபிடித்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக, றம்புட்டான் பழத்தின் பிரதான உற்பத்தி இடமான மல்வானையிலிருந்து அதிகளவான றம்புட்டான் பழங்கள் வவுனியாவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக வியாபாரிகள்



தெரிவிக்கின்றனர். இவ்வாறு வவுனியா நகரில் குவிந்து கிடக்கும் றம்புட்டான் பழங்களை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை முண்டியடித்துக்கொண்டு வாங்குவதை அவதானிக்க முடிகின்றது.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.

# கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் ஜனநாயக போராளிகள் அமைப்பினர் நேற்று சந்திப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை ஜனநாயக போராளிகள் அமைப்பின் குழுவினர் நேற்று திங்கட்கிழமை சந்தித்தனர்.

திருகோணமலையிலுள்ள இரா.சம்பந்தனின் இல்லத்திலேயே இச்சந்திப்பு இடம்பெற்றது. ஜனநாயகப் போராளிகள் அமைப்பின் சார்பில் அதன் செயலாளர் கதிர், ஊடகப் பேச்சாளர் துளசி அடங்கலான குழுவினர் இதில் கலந்து கொண்டனர். இச்சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த இரா.சம்பந்தன்; 2015ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தின் பின்னர் நிரந்தர ஆட்சிமாற்றத்துக்காக நாங்கள் பல முயற்சிகளை முன்னெடுத்திருந்தோம். இதன் நிமித்தம் பல தலைவர்களையும் சந்தித்து தீர்வுக்கான முன்னேற்பாடுகளையும் செய்தோம். ஆனால், தற்போதைய ஆட்சிமாற்றத்தின் பின்னர் தமிழ் மக்களுக்கு சதிகள் மற்றும் உதவிகள், சட்டவிரோத செயற் பாடுகளை செய்து வாக்குகளை சிதறடித்து தமிழ் மக்களின் ஒற்றுமையை நிலைகுலைக்க முற்படுகின்றனர். எமது மக்கள் இனியாவது பிரிந்து செயற்படாது ஒற்றுமையாக செயற்பட வேண்டும்.

நாம் தொடர்ந்தும் கௌரவமான அரசியல் தீர்வைப் பெற்று சுதந்திரமாக வாழ எமது பணிகளை முன்னெடுப்போம். இதில் மாற்றுக் கருத்து இல்லை எனத் தெரிவித்தார்.

இதற்கு தமது கருத்துகளைப் பகிர்ந்து கொண்ட ஜனநாயக போராளிகள் அமைப்பினர் தற்போதைய ஆட்சிக் காலத்தில் முகாம்களிலிருந்த இராணுவம் வீதிகளில் இறங்கிவிட்டது. நாளை தமிழர்களின் வீட்டினுள்ளும் இராணுவம் வரும். அந்த நிலைக்கு தமிழர்கள் இடம் கொடுக்காது ஒற்றுமையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தொடர்ந்தும் ஆதரிக்கவேண்டும். இக் கடப்பாடு தமிழர்களுக்கு உண்டு என தெரிவித்தனர்.



# இமாலய சாதனைக்கு ஒத்துழைத்த அனைவருக்கும் சிரம் தாழ்ந்த நன்றிகள்

## த.ம.வி. புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன்

நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் எமது தலைவரையும் கட்சியையும் ஏற்றுக்கொண்டு, இமாலய வரலாற்று சாதனையை நிகழ்த்த காரணமாக இருந்த ஒவ்வொரு பிரம்மாக்களுக்கும் எம் சிரம்தாழ்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வாறு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன் தெரிவித்துள்ளார். நேற்று திங்கட்கிழமை ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

இரவும் பகலும் ஊண் உறக்கம் மறந்து கட்சிக் கொள்கையை தம் கொள்கையாகக் கொண்டு எம்மோடு களத்தில் நின்ற வேட்பாளர்கள், கட்சியின் உயர்பீட, செயற்குழு, பிரதேச அமைப்பாளர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், எம் உயிருக்கு நிகரான கட்சியின் போராளிகள் அனைவருக்கும் தலைவர் சார்பாகவும் கட்சி சார்பாகவும் சிரம்தாழ்த்தி நன்றியைத் தெரிவிக்கின்றேன் .

ஐந்து வருடகாலமாக உரிய விசாரணைகளின்றி அரசியல் காழ்ப்புணர்ச்சியின் நிமித்தம் நல்லாட்சியின் கூட்டுச்சதியில் மேலாதிக்கத்தின் ஆசீர்வாதத்துடன் நமது தலைவர் சிறைப்படுத்தப்பட்ட போதும் தலைவருக்காக தன்னுயிரை தானம் செய்யவும் துணியும் தொண்டர்களை பெற்றிருப்பது எமது வரம். அத்தலைவரின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்த சிற்பிகளாக ஒவ்வொரு கட்சித் தொண்டனும் களத்தில் நின்று இவ்வரலாற்றுத் திருப்பத்தை நிகழ்த்த காரணமாக இருந்தனர்.

தலைவரின் சிந்தனையான 'மட்டக் களப்பின் நிலைபேறான அபிவிருத்தி' எனும் எண்ணக்கருவை ஏற்றுக்கொண்ட எம்மக்கள் எமக்கான அரசியல் அதிகாரத்தையும் உரிமையையும் சமதளத்தில் பெற்றுக்கொள்ள தங்களின் பிரதிநிதிகள் எனும் இமாலய பொறுப்பை எம்மீது சுமத்தியுள்ளனர்.

பணபலம், போலித் தேசியம், வெற்றுக் கோஷங்கள், நடைமுறை சாத்தியம் இல்லா கொள்கைகள் போன்றவற்றை நிராகரித்து எம்மக்கள் வழங்கியுள்ள இவ்வெற்றியின் கனத்தையும் பெறுமதியையும் நாம் நன்கறிவோம்.

மாவட்டத்தின் அபிவிருத்தியை பெற்றுக்கொடுக்க இணக்க அரசியல் செய்யும் அதேநேரம், மக்களின் அடிப்படை அரசியல் அபிலாஷைகளை உறுதிசெய்யவும் நியாயமான அரசியல் உரிமைகளை பெற்றுக்கொடுக்கவும் உள்ளிருந்து பேசவும் தயங்க மாட்டோம்.

தற்போதைய அரசாங்கத்திற்கு கிடைத்துள்ள மிகப்பெரும் வெற்றியானது பேரினவாத நிகழ்ச்சி நிரலை எளிதாக்கக்கூடியது. ஆனாலும் சமகொள்கைகொண்ட பங்காளிகளுடனும் சர்வதேச தொடர்புகளுடனும் எமக்கான நியாயமான அரசியல் உரிமைகளை வென்றெடுக்க நாம் தயங்கப்போவதில்லை.

தமிழ் மக்களின் அரசியல் தீர்வின் அடிப்படை அலகான மாகாண சபையை வென்றெடுத்து அதனைப் பயன்படுத்தி எமக்கான நியாயமான அடிப்படை தீர்வை பெறும்வரை நாம் ஓயப்போவதில்லை.




# கிழக்கில் திட்டமிட்டு முடக்கப்பட்ட அபிவிருத்திகள் மீண்டும் ஆரம்பமாகும்

## நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள நஸீர் அஹமத் தெரிவிப்பு





(செங்கலடி)

பிரதேச அரசியல்வாதியால் முடக்கப்பட்ட அத்தனை அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் தங்குதடையின்றித் தொடரும் என உறுதியளித்த கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளவருமான நஸீர் அஹமத் இவ்வருட இறுதிக்குள் ஏறாவூர் நவீன சந்தைக் கட்டிடத் தொகுதி இயங்கத் தொடங்கும் என்றும் தெரிவித்தார்.

தொடங்கப்பட்டு முடிவுறாமல் அரைகுறையாக காட்சியளிக்கின்ற ஏறாவூர் நவீன சந்தைக் கட்டிடத் தொகுதியை சந்தை வியாபாரிகளின் அழைப்பின்பேரில் கடந்த திங்கட்கிழமை நேரில் சென்று பார்வையிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு சந்தை வியாபாரிகள் ஊர் நலன்விரும்பிகள் முன்னிலையில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது;

எனது மாகாண சபை முதலமைச்சர் பதவிக்காலத்தில் முறைப்படியாக என்னால் ஆரம்பிக்கப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்களை மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் பிரதேச அரசியல்வாதி ஒருவரே வலிந்து தடைப்படுத்தினார்.

அதன் காரணமாகவே இந்த அரசியல் வாதியை இம்முறை மக்கள் நாடாளுமன்றம் செல்லவிடாமல் தடுத்துள்ளார்கள்.

அந்தவகையில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அத்தனை அபிவிருத்தித் திட்டங்களும் எல்லா சமூக மக்களுக்கும் நன்மை கிட்டும் வண்ணம் தங்குதடையின்றி முன்னெடுக்கப்படும்.

ஏறாவூர் நவீன சந்தை சட்டப்படியான எல்லா நடைமுறைமைகளையும் பின்பற்றி மாகாண சபை - மத்திய அரசாங்கம் ஆகியவற்றின் அனுமதியோடும் 193 மில்லியன் ரூபா நிதியோடும் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தால் கட்டுமான வேலைகள் தொடக்கிவைக்கப்பட்டிருந்தன,

ஆயினும், பிரதேச அரசியல்வாதி தனது வங்குறோத்து கையாலாகதனத்துடன் அரசியலைப் பயன்படுத்தி நாடாளுமன்ற கோப் குழுவுக்கு பொய்யான தகவல்களைச் சொல்லி இந்தப் பிரதேசத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்திகளையும் கேள்விக்குட்படுத்தினார்.

எனினும், அந்த அரசியல்வாதியின் பொய் கூற்றுகள் நாடாளுமன்ற பொதுக் கணக்குகள் குழுவினால் நிராகரிக்கப்பட்டது ஒரு புறமிருக்க, அந்தப்பொய் அரசியல்வாதியை இப்பொழுது மக்களும் நிராகரித்து விட்டனர்.

அதன் பெறுபேறாக இப்பிரதேச அபிவிருத்திகள் தங்குதடையின்றி இனித் தொடரும்.

தொழில்நுட்ப வளாகம், கிழக்கு மாகாண மக்களுக்கான நவீன வைத்தியசாலை, கைத்தொழில் பேட்டைகள், நவீன சர்வதேச ஆடைத் தொழிற்சாலைகள் என்பன அடுத்த ஆண்டுக்குள் அமைக்கப்படும். அதன்மூலம் பல ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் நிபுணத்துவ தொழில்வாய்ப்பைப் பெறுவர்" - என்றார்.

# சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றி கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பமாகின



கொரோனா வைரஸ் காரணமாக நீண்டகாலமாக விடுமுறையில் இருந்த மாணவர்கள் நேற்றைய தினம் மிகவும் ஆர்வத்தோடு பாடசாலைகளுக்கு சமுகமளித்ததாக பாடசாலைகளின் அதிபர்கள் தெரிவித்தனர்.

அந்தவகையில், சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தல்களுக்கமைய மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று பாடசாலைகளின் அதிபர்கள் மேலும் தெரிவித்தனர்.

## திருகோணமலையில்

# நோய்வாய்ப்பட்டுள்ள காட்டுயானை வனஜீவராசி அதிகாரிகளால் உணவளிக்கப்பட்டு பராமரிப்பு



திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புலியூத்துக்குளம் பகுதியில் நோய்வாய்ப்பட்டுள்ள காட்டு யானையொன்றுக்கு வனஜீவராசி பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்களும், பிரதேச பொது மக்களும் இணைந்து தினமும் உணவளித்து வருகின்றார்கள்.

சுமார் நாற்பது வயதுடைய காட்டு யானையொன்றே நடக்கமுடியாத நிலையில் இவ்வாறு புலியூத்துக்குளம் பகுதியில் நோய்வாய்ப்பட்டுள்ளது .

இக்காட்டுயானைக்கு வனஜீவராசி உத்தியோகத்தர்கள் மருந்துகள் வழங்கி பராமரித்துவருவதோடு, இக்காட்டுயானையை பிரதேசத்திலுள்ளவர்களும் பார்வையிட்டு உணவளித்து வருகின்றார்கள்.

# ஓட்டமாவடி பிரதேச சபைக்கு புதிய தவிசாளர் தெரிவு இன்று



கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் புதிய தவிசாளரை தெரிவுசெய்யும் அமர்வு இன்று செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ளது.

குறித்த பிரதேச சபையில் தவிசாளராக பதவிபுரிந்த ஐ.ரீ.அஸ்மி (அமிஸ்டீன்) தனது தவிசாளர் பதவியை கடந்த ஜூலை மாதம் 20ஆம் திகதி இராஜினாமா செய்திருந்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஐ.ரீ.அஸ்மி, அதே கட்சியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஏ.எம்.நௌபருக்கு இரண்டு வருடங்களின் பின்னர் தவிசாளர் பதவியை விட்டுக்கொடுப்பதாக ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டிருந்தார்.

அதற்கமைய பிரதேச சபையின் புதிய தவிசாளரை தெரிவுசெய்யும் அமர்வு இன்று கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நான் தோற்றேனா? தோற்கடிக்கப்பட்டேனா? உண்மையை ஊர்மக்கள் நன்கு அறிவார்கள்

## - முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர்

(அட்டாளைச்சேனை)

பதவிகளை கொடுப்பதும் இறைவன், தடுப்பதும் இறைவன். கடந்த 35 வருடங்களின் பின்னர் எமது ஊரின் நாடாளுமன்ற உறுப்புரிமை எனும் தாகத்தைப் போக்குவதற்காக கடந்த இரண்டு வருடங்கள் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமை எனக்கு தேசியப்பட்டியலைத் தந்து அட்டாளைச்சேனை பிரதேசத்தையும் எமது மக்களையும் அழகுபடுத்தி கௌரவப்படுத்தியது. அதனை தக்கவைத்துக்கொள்ள நாம் தவறிவிட்டோம் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்டத்தில் தொலைபேசி சின்னத்தில் போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளருமான ஏ.எல்.எம்.நஸீர் தெரிவித்தார்.

அவரது சொந்த ஊரான அட்டாளைச்சேனை இல்லத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற ஆதரவாளர்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனக்குக் கிடைத்த நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தின் மூலம் என்னால் முடியுமானளவு மாவட்டத்துக்கும் குறிப்பாக, எமது அட்டாளைச்சேனை பிரதேசத்தையும், அதனை அண்டிய கிராமங்களையும் சிறந்த முறையில் எவ்வித பாகுபாடுகளுமின்றி இன, மத வேறுபாடுகளுக்கப்பால் எல்லாப் பிரதேசங்களுக்கும் பல அபிவிருத்திகளை செய்திருக்கின்றேன். இதனை எல்லா இன மக்களும் நன்கறிவார்கள்.

அது மாத்திரமல்லாமல், கிழக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவத்துறை அமைச்சராக இருந்த காலப்பகுதிகளில் கூட, பல கோடி ரூபா நிதியின் மூலம் மூன்று மாவட்டங்களிலும் பல ஆயுர்வேத வைத்தியசாலைகள், மருத்துவ உத்தியோகத்தர்கள் தங்கும் விடுதிகளை அமைத்துக் கொடுத்துள்ளதுடன், அதற்குத் தேவையான வைத்திய உபகரணங்கள், தளபாடங்கள் போன்ற பல விடயங்களை என்னாலான முயற்சிகள் மூலம் செய்து கொடுத்துள்ளேன். இதை யாரும் மறுப்பதற்கில்லை.

நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தல் களத்தில், தலைமையின் அழுத்தமான வேண்டுகோளுக்கிணங்க இந்தத் தேர்தலில் வேட்பாளராக களமிறக்கப்பட்டேன். ஊருக்கு கிடைத்த நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஊர் ஒற்றுமைப்பட்டு 35 வருடங்களின் பின்னர் வாக்களித்து ஒரு நாடாளுமன்ற உறுப்புரிமை பெறவேண்டும் என்ற நன்னோக்கில் மாவட்டம் முழுவதும் ஊர் ஊராக பிரசாரம் செய்து வெற்றிக்காக பாடுபட்டு உழைத்தோம்.



இறுதிவரைக்கும் சளைக்காமல் நாங்கள் செய்த முயற்சிக்கு இந்த மாவட்டத்திலுள்ள மக்கள் 26,153 விருப்பு வாக்குகளை அளித்து எனக்கு ஆதரவுக்கரம் தந்தீர்கள். உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இருப்பினும் வெற்றிபெற முடியவில்லை, இது இறைவனின் நாட்டமாகும். அதை நாம் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

இருந்தாலும் நான் தோற்றேனா, தோற்கடிக்கப்பட்டேனா என்பதை ஊர் மக்கள் அறியாமல் இல்லை. எனது வெற்றியின் பங்களிப்பில் ஈடுபட்டவர்களே எனது தோல்விக்குப் பிரதான சூத்திரதாரிகளாக செயற்பட்டார்கள் என்பது கசப்பான உண்மை என்பது உங்களுக்குத் தெரியாமல் இல்லை.

எமது மக்கள் ஒன்றை மட்டும் தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும். நான் எனக்காக களமிறங்கி வேலை செய்ததைவிட எமது ஊர் வெற்றிபெற வேண்டும் என்பதற்காகவே என்னை முழுமையாக அர்ப்பணித்து இரவு பகல் கண் விழித்து வேலை செய்தேன். இந்தத் தேர்தல் முடிவின் மூலம் நான் அரசியலை விட்டு ஒதுங்கப் போகின்றேன், கட்சி மாறப் போகிறேன் என்றெல்லாம் பல போலிப் பிரசாரங்களை சிலர் முன்னெடுத்து வருகின்றனர். அவர்கள் நினைப்பதுபோல் எதுவும் நடக்காது என்பதை நான் உறுதிப்பட தெரிவிக்க விரும்புகின்றேன்.

நான் மக்களுக்காகவே அரசியலுக்கு வந்தவன், மக்களுக்காகவே அரசியல் செய்பவன், நான் கட்சி மாறப்போவதுமில்லை, அரசியலிலிருந்து ஒதுங்கப் போவதும் இல்லை. நான் அரசியலிலிருந்து ஒதுங்கி இந்த ஊர் மக்களை அனாதையாக்க விரும்பவும் இல்லை. இந்தத் தேர்தலில் மக்கள் என்னை நிராகரிக்கவில்லை. மாறாக, சில சகுனிகளின் திட்டமிட்ட சதியின் மூலம் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றேன் என்பதுதான் உண்மையாகும். எனது அரசியல் பயணம் மக்களுக்காகவே என்றும் தொடரும் என்பதை தெளிவாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன் - என்றார்.

# தவிசாளர் அஸ்ரப் தாஹிர் மீண்டும் பதவியேற்றார்



( நிந்தவூர் )

தேர்தல் கால விடுமுறையில் சென்றிருந்த நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் அஸ்ரப் தாஹிர் நேற்றுக் காலை மீண்டும் நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளராக தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். இதன்போது சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பலரும் கலந்துகொண்டனர் .

# கோறளைப்பற்றில் நேற்று கொரோனா பி.சி.ஆர். பரிசோதனை இடம்பெற்றது

( கல்குடா)

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா பி.சி.ஆர். பரிசோதனை நடவடிக்கைகள் வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ரி.நஜீப்கான் தலைமையில் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட மக்களிடையே கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதா என்பதை அறியும் வகையில் கொரோனா பி.சி.ஆர். பரிசோதனை நடைபெற்றது.







இதன்போது சிற்றுண்டிச்சாலை வேலையாட்கள், வெதுப்பக வேலையாட்கள், சிகையங்கார வேலையாட்கள், மீன் வியாபாரிகள், நீண்ட தூரம் பயணம் செய்யும் சாரதிகள் என மக்களிடையே அதிகம் நெருக்கமாக உள்ளவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மாதத்தில் நூறு நபர்களுக்குமாக வாரத்தில் இருபத்திதைந்து நபர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வைத்திய அதிகாரி எஸ்.ரி.நஜீப்கான் தெரிவித்தார். இங்கு கோறளைப்பற்று மத்தி பொதுச் சுகாதார பரிசோதர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் ஆகியோர் குறித்த பரிசோதனைகளை நடத்தினர்.

# தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பில் பிரதமர் முக்கியத்துவம் அளித்தல் வேண்டும்

## -பிரதமருக்கான வாழ்த்தில் த. வி. புலிகள் தலைவர் இன்பராசா தேரிவிப்பு




அதிகூடிய பெரும்பான்மையைப் பெற்று ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு, நாட்டின் அனைத்து மக்களுக்கும் பாராபட்சமின்றிய சேவையை வழங்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுப்பதாக புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் க.இன்பராசா தெரிவித்தார்.

புதிதாகப் பதவியேற்ற பிரதமரை வாழ்த்து முகமாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்த நாடு பல்லின மக்கள் வாழும் நாடு. இந்த நாட்டை சமத்துவமாக எவ்வித பிரச்சினைகளும் இல்லாவண்ணம் ஆட்சி புரியவேண்டும். அத்துடன், மிக முக்கிய பிரச்சினையாகவுள்ள தமிழ் மக்களின் அபிலாசைகள் தொடர்பிலான பிரச்சினைகளைத் தீர்க்கும் விடயத்திலும் பிரதமர் அக்கறைகொள்ள வேண்டும்.

பெரும்பான்மை மக்களின் பெரும்பான்மையான ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் - இந்த ஆட்சியின் மூலம் புதிய பிரதமரால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்றிட்டங்களுக்கு பெரும்பான்மை மக்களின் ஏகோபித்த ஆதரவு கிடைக்கும். அந்தவகையில் சிறுபான்மை மக்களின் அபிலாஷைகள் தொடர்பிலான விடயங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து இந்த நாட்டை அனைத்து மக்களும் நேசிக்கும் ஒரு நாடாகக் கட்டியெழுப்ப முடியும்.

நாட்டின் சகல வளங்களும் சகல மக்களுக்கும் பயன்படும் வகையில் சமமான முறையில் அனைத்துப் பிரதேசங்களுக்குமான அபிவிருத்தி செயற்பாடுகளையும் மேற்கொள்ளவேண்டும் என்பதுடன், குறிப்பாக யுத்ததால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வாதாரம் தொடர்பான பிரச்சினைகள், முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரம் தொடர்பான பிரச்சினைகள் போன்ற விடயங்களுக்கும் முன்னுரிமையளிக்க வேண்டும் எனவும் எமது கட்சியின் சார்பில் வினயமாகக் கேட்டுக் கொள்கின்றோம் - என தெரிவித்தார்.




# கிழக்கில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மூன்று மாதங்களாக கொடுப்பனவு வழங்கப்படவில்லை

## உரியவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(பாண்டிருப்பு)

கிழக்கு மாகாணத்தில் முன்பள்ளி பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மூன்று மாதங்களாக நாலாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இதனால் இந்த ஆசிரியைர்கள் தங்களது குடும்ப சீவியத்தை நடத்துவதில் பொருளாதார சிக்கலுக்கு முகங்கொடுத்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் 1,681 பதிவு செய்யப்பட்ட பாலர் பாடசாலைகள் இயங்கிவருகின்றன. அவற்றில் 46,240 பிள்ளைகள் கல்வி கற்றுவருவதுடன், இவர்களுக்கு 3,780 ஆசிரியைகள் கல்வி கற்பித்து வருகின்றனர். கிழக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியைகளுக்கு மாதாந்த கொடுப்பனவாக 4ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுவந்தது. குறித்த கொடுப்பனவு கடந்த மே மாதம் தொடக்கம் மூன்று மாதங்களாக வழங்கப்படாதுள்ளது. இதனால் குறித்த ஆசிரியைகள் மிகுந்த பொருளாதார சிக்கலுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

தற்போதைய கொரோனா வைரஸ் தொற்றினால் தொழில் இழந்துள்ள பலருக்கும் அரசாங்கம் உதவித்தொகைகளையும், அரச ஊழியர்களுக்கான சம்பளங்களையும் தொடர்ச்சியாக வழங்கிவரும் நிலையில் கிழக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியைகளுக்கு மாத்திரம் இவ்வாறு மாதாந்த நாலாயிரம் கொடுப்பனவு வழங்கப்படாதுள்ளதாக சுட்டிக்காட்டுகின்றனர். எனவே, முன்பள்ளி ஆசிரியைகளுக்குரிய மூன்று மாதக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# பிரதமரின் பதவியேற்பையொட்டி ஓட்டமாவடியில் விசேட பிரார்த்தனை

## முக்கிய பிரமுகர்களும் உரை நிகழ்த்தினர்

(ஓட்டமாவடி)

இலங்கையின் 9ஆவது பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றதை முன்னிட்டு அவரது சேவைகள் தாய்நாட்டுக்கு அவசியம் என்பதை வலியுறுத்தியும் நீண்ட ஆயுளை வேண்டியும் ஒழுங்குசெய்யப்பட்ட வைபவமும்,விசேட துஆப் பிரார்த்தனையும் கல்குடா தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள ஓட்டமாவடி-காவத்தமுனை கிராமத்தில் நடைபெற்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இந்த வைபவம் ஒழுங்குசெய்யப்பட்டுவந்த நிலையில் கல்குடா தேர்தல் தொகுதி மக்களை அரசின் பக்கம் அரவணைத்துச் செல்லும் ஓர் அங்கமாக இந்த வைபவம் ஒழுங்குசெய்யப்பட்டதாக ஓட்டமாவடி பிரதேச காவத்தமுனை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

பொதுஜன பெரமுன கட்சியின் காவத்தமுனை பிரதேச இணைப்பாளர் அல்-ஹாபிழ் என்.எம்.எம்.சியாம் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கோறளை மத்தி பிரதேச செயலக அபிவிருத்தி குழுத் தலைவர் ஏ.சீ.எம்.முனவ்பர், பொதுஜன பெரமுன கட்சியின் ஜெயந்தியாய பிரதேச இணைப்பாளர் ஜமால்தீன் முஸ்தகிர், தேசகீர்த்தி இனநல்லுறவு அமைப்பாளர் மனித உரிமை அமைப்புகளின் செயற்பாட்டாளர் ஏ.நாஸர் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வை ஏற்பாடுசெய்த காவத்தமுனை பிரதேச பொதுஜன பெரமுன கட்சி இணைப்பாளர் அல்ஹாபிழ் சியாம் இங்கு உரையாற்றுகையில், கடந்த காலத்தில் எமது பிரதேசத்தில் ஆட்சியதிகாரம் செலுத்தியோரின் பொறுப்பற்ற வழிநடத்தல்களினால் எமது பிரதேசம் அபிவிருத்திகளில் தன்னிறைவுகளை காணவில்லை. காகித நகரை அருகாமையில் வைத்துக்கொண்டு வாழைச்சேனை கடதாசி ஆலையை மீள ஆரம்பிப்பதற்கு திராணியற்ற தலைவர்களாகவே அவர்கள் இருந்து வந்துள்ளனர். எமது ஆட்சியில் வாழைச்சேனை கடதாசி ஆலையானது மீள ஆரம்பிக்கப்பட்டு இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்புக் கதவுகளை அது திறந்துள்ளது - என்றார்.

மேலும், கோறளை மத்திய பெரமுன கட்சியின் அபிவிருத்திக் குழுத் தலைவர் ஏ.சி.முனவ்பர் உரையாற்றும்போது, இந்த நாட்டில் ஏற்பட்ட கொடிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சுபீட்சமாதனதொரு எதிர்காலத்தை ஏற்படுத்தி நாட்டில் அச்சமற்ற சூழலொன்றை உருவாக்கியவர்கள் ராஜபக்ஷ பரம்பரையினர். அவர்களே இந்த நாட்டை ஆளத்தகுதியானவர்கள். எதிர்காலத்தில் நமது ஆதரவை அவர்களுக்கு வழங்குவதன் மூலமாக எமது மட்டக்களப்பு மாவட்டம் அபிவிருத்திப்பாதையில் முன்நிற்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை - என்றார்.

பொதுஜன பெரமுன கட்சியின் ஜெயந்தியாய பிரதேச இணைப்பாளர் ஜமால்தீன் முஸ்தகீர் இங்கு உரையாற்றும் போது; காவத்தமுனை பிரதேசமானது யுத்தத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட பிரதேசமாகும். இங்குள்ள பாடசாலை மாணவர்கள் துப்பாக்கிச் சத்தங்களுக்கு பயந்து கடந்த காலங்களில் பாடசாலைக்கு செல்லாத அவலம் இந்தப் பிரதேசத்தில் நடந்துள்ளது. முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகள் சுவீகரிக்கப்பட்டு விவசாயச் செய்கை பெரிதும் பாதிப்படைந்த பகுதியாகும். ஆட்கடத்தல், கொலைகள் என அதிகம் நடந்த பிரதேசம் காவத்தமுனையாகும். தற்போது இந்தப் பிரதேச மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது. அச்சமற்ற சூழலில் வாழ்கின்றார்கள். தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இணைந்து கால்நடை வளர்ப்பிலும், நன்னீர் மீன் பிடித் தொழிலிலும் ஈடுபடுகின்றனர். இப்படியானதொரு வளமான வாழ்வை அமைத்துத் தந்த எமது பிரதமரின் பதவியேற்புக்கு முஸ்லிம்களாகிய நாம் பிரார்த்தனைகளில் ஈடுபடுவது கடமை என்பதோடு அது காலத்தின் அவசியமும் ஆகும் - என்றார்.













நீண்ட விடுமுறையின் பின்னர் நேற்று 10 ஆம் திகதி நாட்டின் அனைத்து பாடசாலைகளும் ஒரேதடவையில் மீண்டும் திறக்கப்பட்டன. அம்பாறை மாவட்டத்தில் பாடசாலையொன்றில் மாணவர்கள் சுகாதார நடைமுறையைக் கருத்திற்கொண்டு பாடசாலையினுள் பிரவேசிப்பதையும் வகுப்பறையினுள் சமூக இடைவெளியுடன் மாணவர்கள் கற்றலில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: காரைதீவு)

# முதலை ஒன்றினால் இழுத்துச் செல்லப்பட்ட மனிதத் தலை அடையாளம் காணப்பட்டுள்ளது

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் சவளக்கடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சொறிக்கல்முனை பகுதியிலுள்ள வழுக்கமடு பாலத்தின் அருகே மாடு மேய்த்துக்கொண்டிருந்தவரை முதலை இழுத்துச்சென்ற நிலையில் தலை மாத்திரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கிராம மக்களின் உதவியுடன் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, கடந்த சனிக்கிழமை வழமைபோன்று மாடுகளை பார்ப்பதற்காக வயல்வெளிகளுடன் இணைந்த வழுக்கைமடு நீர்க்கால்வாய் அருகில் குறித்த நபர் சென்றுள்ளார்.

பின்னர் தனது உடுதுணிகளை நீர்க்கால்வாய் அருகில் வைத்துவிட்டு கால்வாயில் இறங்கி குளித்துள்ளார். இவ்வேளை அவரை கால்வாயில் இருந்த முதலைகள் இழுத்துச்சென்றுள்ளன.

இவ்வாறு இழுத்தச்சென்றவரை காணவில்லை என குடும்பத்தவர்கள் தெரிவித்த நிலையில், கிராமத்தவர்களின் உதவியுடன் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது காணாமல் போனவரின் ஆடைகள் கால்வாய் கரையோரத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டது.



பின்னர் சுமார் 800 மீற்றர் தொலைவில் குறித்த கால்வாயில் மிதந்துவந்த நிலையில் அவரது தலை மீட்கப்பட்டது. மீட்கப்பட்ட தலை கரைக்கு கொண்டுவரப்பட்டு சவளக்கடை பொலிஸாரால் விசாரணைகள் இடம்பெற்றன.

விசாரணைகளின் அடிப்படையில் அப்பகுதியைச் சேர்ந்த 65 வயது மதிக்கத்தக்க றோக்கு ஜோசப் என்பவற்றின் சடலமே இது என அவரது சகோதரி அடையாளம் காட்டியுள்ளார். சம்பவம் தொடர்பாக தடயவியல் பொலிஸார் அழைக்கப்பட்டுள்ளதுடன், சம்மாந்துறை மஜிஸ்ரேட் நீதிவானின் உத்தரவுக்காக சடலம் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



## இன்று கோகுலாஷ்டமி

# கண்ணனை கட்டிப்போடுங்கள்..!



கண்ணனை உங்களின் பக்தி எனும் கயிற்றால் கட்டிப்போடுங்கள். கிருஷ்ண பக்தியில் பூஜை செய்யப்படும் வீடுகளுக்கு கண்ணன் சூட்சுமமாக வருவான். நம் பக்தி எனும் பிரசாதத்தைப் பெற்றுத் திளைப்பான் குளிர்ந்த கண்ணன். நமக்கு அவனின் அருள்மழையைப் பொழிவான்.

ஆவணி மாத சுக்லபட்ச அஷ்டமி, அத்தனைப் புண்ணியம் நிறைந்த நன்னாளாக மாறியதற்குக் காரணம், பகவான் ஸ்ரீகிருஷ்ணர். அவர் அவதரித்த திருநாள். அன்றைய தினத்தை ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி என்றும் கோகுலாஷ்டமி என்றும் கொண்டாடுகிறார்கள் பக்தர்கள். இந்தமுறை ஆடி மாதத்திலேயே வருகிறது கோகுலாஷ்டமி. இன்று (11.8.2020) செவ்வாய்க்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது.

தன் தங்கைக்குப் பிறக்கும் எட்டாவது குழந்தையால் தன் உயிருக்கு ஆபத்து என்பதை அறிந்து பதறிக் கதறினான் கம்சன். முதற்கட்டமாக தங்கை தேவகியையும் அவளின் கணவர் வசுதேவரையும் சிறையில் அடைத்தான். கண்கொத்திப் பாம்பாகக் கவனித்துவந்தான். எட்டாவது குழந்தைதான் நமக்கு வில்லன் என்றபோதிலும் பிறந்த ஒவ்வொரு குழந்தையையும் கொன்றான். கலங்கித் துடித்தார்கள் வசுதேவரும் தேவகியும்!

ஏழாவது குழந்தை பலராமர், தேவகியின் வயிற்றில் கருவாகியிருந்தார். அப்போது ஸ்ரீமகாவிஷ்ணு என்ன செய்தார் தெரியுமா? மாயாதேவியை அழைத்தார். பலராமரின் கருவை, கோகுலத்திலுள்ள நந்தகோபரின் மனைவியரில் ஒருவரான ரோகிணியின் கர்ப்பப்பைக்குள் வைக்கும்படி அருளினார். தவிர, மாயாதேவியை நந்தகோபரின் மற்றொரு மனைவியான யசோதையின் வயிற்றில் கருவாக வளரும்படி பணித்தார். ஆக, பிறப்புக்கு முன்பிருந்தே விளையாடத் தொடங்கிவிட்டான் கண்ணன்.

எட்டாவதாக, கிருஷ்ண பகவான் தேவகியின் வயிற்றில் வளர்ந்தார். ஆவணி மாத சுக்லபட்ச அஷ்டமியில் கிருஷ்ணர் அவதரித்தார். தாயும் தந்தையும் மகிழ்ந்து கொண்டாடினார்கள். அப்போது குழந்தையானது, ஸ்ரீமகாவிஷ்ணுவாக விஸ்வரூபம் எடுத்து காட்சித் தர, வியந்து போனார்கள். இது அந்தத் தம்பதிக்குக் கிடைத்த அரிய வரம். ஏற்கனவே வாங்கிவந்த வரம்.

முன்னொரு காலத்தில் சுதபா – பிருச்னி தம்பதியாக இவர்கள் இருந்தார்கள். 12 தேவ வருடங்கள், விஷ்ணுவை நினைத்து கடும் தவமிருந்தார்கள். இதன் பலனாக, அவர்களின் முன்னே காட்சி தந்தருளினார் மகாவிஷ்ணு. மேலும் என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். "பரமாத்மாவான தாங்கள் எங்களுக்கு மகனாகப் பிறக்கவேண்டும்" என்றனர்.

மகாவிஷ்ணு அப்போது, " அதன்படி, பிருச்னி கர்பா என்ற பெயரில் மகனாகப் பிறந்தேன். அடுத்த பிறவியில், காஷ்யபர் – அதிதி தம்பதியாகப் பிறந்தீர்கள். அப்போதும் உங்களுக்கு மகனாக உபேந்திரனாகப் பிறந்தேன். இப்போதும் பிறந்திருக்கிறேன். இந்த முறை என் பெயர் கிருஷ்ணர்" என்று அருளினார் மகாவிஷ்ணு. அத்துடன், அவர்களின் பிறவி முடிவடைந்தது என்றும் வைகுண்டம் வரும் காலம் நெருங்கிவிட்டது என்றும் கம்சனை அழிக்கும் கடமை எனக்குண்டு என்றும் தெரிவித்தார் திருமால். என்னை கோகுலத்திலுள்ள நந்தகோபரின் மனைவி யசோதையிடம் சேர்த்துவிடுங்கள் என்றார். மாறாக, அங்கே அவர்களுக்குப் பிறந்த பெண் குழந்தையை இங்கே கொண்டுவந்து சேர்த்துவிடுங்கள் என்றும் அறிவுரை கூறினார்.

இத்தனையும் நிகழ்ந்த நன்னாள்தான் ஆவணி சுக்லபட்ச அஷ்டமித் திருநாள். கிருஷ்ண ஜயந்தி எனும் நன்னாள். இந்த நாளில், வீட்டுவாசலிலிருந்து வீட்டுப் பூஜையறைக்குள் பகவான் ஸ்ரீகிருஷ்ணரை, குழந்தையாகவே பாவித்து நாம் வரவேற்று பூஜிப்பது வழக்கம்.

அரிசி மாவில் கிருஷ்ணர் பாதம் வரைந்து குதூகலிப்போம். அந்த கிருஷ்ணர் பாதமே நம் துயரங்களையெல்லாம் போக்கி, மகிழ்வைக் கொடுக்கவல்லது என்கின்றன ஞானநூல்கள்.

அன்றைய தினம்... (அதாவது இன்றைய நாள்) மாலை வரை விரதமிருக்கவேண்டும். பின்னர் கிருஷ்ணருக்குப் பிடித்த சீடை முதலான பட்சணங்களை நைவேத்தியம் செய்து பூஜிப்போம்.

உண்மையான பக்தியுடன் கிருஷ்ண ஜெயந்தி நாளில், பூஜித்து வழிபட்டால், ஏதேனும் ஒரு ரூபத்தில் கிருஷ்ணர் நம் வீட்டுக்கே வருவார். தீயதையெல்லாம் அழித்து அருளுவார.

நம் வறுமையைப் போக்கி, சகல ஐஸ்வரியங்களையும் தந்தருள்வார். கிருஷ்ண பக்தியுடன் கோகுலாஷ்டமியைக் கொண்டாடுவோம்.

***

# சீத்துவக்கேடு 44



காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்

கஞ்சி மாதிரி எங்கட இன்னுமொரு வழக்கமான சாப்பாடுதான் பழஞ்சோறு. முந்தி பழஞ்சோறு சாப்பிடாத ஆக்களே இல்லையெண்டு சொல்லலாம். அப்பிடி ஒவ்வொரு வீட்டிலையும் அந்தக் காலத்தில காலமை பழஞ்சோறுதான் சாப்பாடு. வயலுக்கு போறவை, கடலுக்குப் போறவை, வேற வேலை வெட்டியளுக்குப் போறவை, கந்தோர்களுக்குப் போறவை, பள்ளிக்கூடம் போற பெடிபெட்டை, வேலை வெட்டி இல்லாமல் வீட்டில இருக்கிறவை, குஞ்சு குருமன், கிழடு கட்டை, இளந்தாரியள் குமரியள் எண்டு எல்லாரும் பழஞ்சோறுதான் சாப்பிடுவினம் .

பழஞ்சோறு எண்டது இப்ப கனபேர் மறந்துபோன இல்லாட்டில் ஞாபகத்தில வைச்சிருக்க விரும்பாத கிராமத்தான்ரை இல்லாட்டில் அவையின்ரை பாசையில சொல்லுறதெண்டால் பட்டிக்காட்டான்ரை ஒரு இளக்காரமான சாப்பாடாப் போட்டுது. பழஞ்சோறு சாப்பிட்டனான் எண்டு சொல்லுற ஒருத்தனை கொஞ்சம் நக்கலா பாக்கிற பரிகாசமாகப் பாக்கிற இல்லாட்டில் அவனை நாகரீகம் இல்லாதவன் எண்டு பாக்கிற ஒரு வித்தியாசமான பார்வை இப்ப கனபேரிட்டை குறிப்பாக, பாணும் பர்கரும் சாப்பிடுறவையிட்டை கொஞ்சம் கனக்கவே இருக்கு.

அநேகமா அடிமட்டத்தில இருக்கிற ஆக்கள் குறிப்பா தொழிலாளியள் ஏழை பாழைகள் அடிக்கடி பழஞ்சோறு சாப்பிடறதாலதான் போல இப்பிடியான ஆக்கள் பழஞ்சோத்தையும் பழஞ்சோத்தை தின்னுற ஆக்களையும் இளக்காரமாப் பாக்கினமாக்கும் . உள்ளதைச் சொல்லுறதெண்டால் பழஞ்சோறு எண்டது தமிழன்ரை பாரம்பரியமான சாப்பாடு அதிலும் அவன்ரை பண்பாட்டோடை இணைஞ்ச சாப்பாடு எண்டு ஆச்சி முந்தி நெடுகச் சொல்லுவா.

"பழஞ்சோற்றுப் புகவருந்திந் புகற்றளவின் பூச்சூடி" எண்டு சோழநாட்டுப் பிடவூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் எண்டவன்ரை பெருமையைச் சொல்லுற நக்கீரர் எண்ட புலவரும் "பழஞ்சோறு அயிலும் முழங்குநீர்ப் படப்பைக் காவிரிக் கிழவன்" எண்டு கிள்ளிவளவன் எண்ட சோழ அரசனைப் பற்றி முடவனார் எண்ட புலவரும் பாடும்போது பழஞ்சோத்தை பற்றி பாடினவை எண்டு நான் புறநானூறிலை படிச்சனான் எண்டு ஆச்சி சொல்லுவா.

உதைக் கேட்டதும் அப்பு,
"பணவநிலைப் புற்றின்
பழஞ்சோற் றமலை
கணவ நிடந்திட்ட கட்டி –
உணவேண்டி
எண்கங்கை ஏற்றிருக்கும்
ஈங்கோயே, செஞ்சடைமேல்
வண்கங்கை ஏற்றான் மலை" –

எண்டு பதினோராந்திருமுறையில நக்கீரதேவ நாயனார் பாடின திருஈங்கோய்மலை எழுபது எண்ட பதிகத்தில பழஞ்சோறு எண்டு ஒரு சொல்லு வருகுது கண்டியோ எண்டுவார்.

உடன ஆச்சி, "நக்கீரர் ஒண்டும் நாங்க தின்னுற பழஞ்சோத்தை சொல்லேல்லை காணும். அவர் பாம்புப் புத்திலை இருக்கிற புற்றாஞ் சோற்றைத்தான் சொல்லுறார். நீ உங்க சுருட்டுக் கொட்டிலிலை மற்ற சுருட்டுக் காறருக்கு கதை விடுகிற மாதிரி இஞ்சை எனக்கு கதை விடுகிறியோ" எண்டு நக்கல் அடிப்பா. உடனை அப்பு, "எங்கேயும் பராக்குப் பாத்துக் கொண்டு சுருட்டுப் பத்தேக்கை வாயிலை கொள்ளி பட்ட மாதிரி துள்ளி எழுந்து என்னடி கனக்கக் கதைக்கிறாய். நீ என்ன பெரிய படிப்புக்காரியே. படிச்சது ஐஞ்சாம் வகுப்பு. ஆனா அதுக்குள்ளை கதை மட்டும் கம்பன்ரை பேத்தி மாதிரி கதைக்கிறாய்" எண்டுவார்.

பிறகும் "உன்ரை கொப்பு அண்ணன் தம்பிமார் மாதிரி என்னையும் பள்ளிக்கூடம் போகாத ஆளெண்டு நினைச்சியோ .உனக்குத் தெரியுமே சதுரகிரி அறப்பளீசுர சதகம் பாடின அம்பலவாணக் கவிராயர்

"கைவிலைக் குக்கொளும் பாலகப் பால்வருங்
காரார்க் கரந்த வெண்பால்
காளான் முருங்கைசுரை
கொம்மடி பழஞ்சோறு" – எண்டு

பழஞ்சோத்தை பற்றிப் பாடுறார் எண்டுவார்.

அவர் பாடிக் கிழிச்சதும் நீ அதைப் படிச்சுக் கிழிச்சதும் எனக்குத் தேவையில்லை. இப்ப என்னத்துக்கு உந்தப் பழஞ்சோத்துக் கதையுக்கை என்ரை அப்பு அண்ணன் தம்பி எல்லாரையும் இழுத்துக் கதைச்சனி அவை உன்னட்டை தின்னக் குடிக்க வழியில்லை உடுக்க கழிக்க வழி இல்லையெண்டு எப்பை எண்டான்னை வந்து நிண்டு கை ஏந்தினவையே எண்டுவா ஆச்சி.

உடன அப்பு இடுப்பில கட்டி இருக்கிற நாலு முழ வேட்டியை கோமணம் தெரியிற மாதிரி தூக்கிக் கட்டிக் கொண்டு முத்தத்தில முன்னுக்கும் பின்னுக்குமா நடந்து கொண்டே வாயிலை இருக்கிற சுருட்டை ஒரு இழுவை இழுத்து புகையை விட்டு காறித் துப்பிப் போட்டு உன்ரை கொப்புவுக்கு ஒண்டும் தேவையில்லைத் தானேடி .

நான் உன்னைக் கலியாணம் கட்டேக்கை தாறம் எண்டு சொன்ன அளவம் கொம்பரைக் காணியையும் தரேல்லை அங்கால தாறமெண்டு சொன்ன வயல் சாடுவாயையும் தரேல்லை எல்லாத்தையும் தன்னோட வைச்சுக் கொண்டு ஏமாத்திப்பிழைக்கிறவர் பிறகென்னண்டு எந்த மூஞ்சயோட இஞ்சை என்னட்டை அது வேணும் இது வேணும் எண்டு வரேலும். உன்ரை அண்ணன் தம்பியும் உதைப் பற்றி மூச்சுக் கூட விடாம இருந்தவங்கள் எல்லே.

அவங்களைப் பற்றி நீ இஞ்சை பெருமையாக் கதைச்சிளண்டால் நடக்கிற சங்கதி வேறை வெக்கங் கெட்டதுகள் எண்டுவார். உடன ஆச்சி ஒண்டுக்கு மூண்டு நாலு அண்ணன் தம்பியோட பிறந்தும் கேக்கப் பறைய ஆக்கள் இல்லையே இந்தக் குடிகாரன் என்னை இப்பிடி கேள்வி கேக்கிறானே எண்டு மூக்கைச் சிந்தத் தொடங்க பழஞ்சோத்தின்ரை பெருமையைப் பேசத் தொடக்கி பழம் கதை பேசித் தொடங்கின சண்டை தானாகவே ஒரு மாதிரி முடிவுக்கு வரும் . **(தொடரும்)**





# உறவுகளால் நிறைந்த நாடாளுமன்றம்!

நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பல சிறப்பான விடயங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் உறவுமுறையான பலர் இம்முறை நாடாளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றுள்ளமை விசேட சிறப்பம்சமாகும்.

சுற்றிவர சொந்தக்காரர்களுடன் அமையப்பெற்றுள்ள புதிய நாடாளுமன்றத்தில் முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற டி.ஏ.ராஜபக்ஷவின் புதல்வர்களான சமல் ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷவின் புதல்வர் சஷீந்திர ராஜபக்ஷ, தினேஷ் குணவர்தனவின் புதல்வர் யதாமினி குணவர்தன, ஜனக பண்டார தென்னக்கோனின் புதல்வர் ப்ரமித பண்டார தென்னக்கோன் ஆகியோருடன் கீழ்க் குறிப்பிடப்படுபவர்களும் உள்ளடங்குகின்றனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தங்கையின் புதல்வர் நிபுண ரணவக்க, முன்னாள் ஜனாதிபதி காலஞ்சென்ற ரணசிங்க பிரேமதாஸவின் புதல்வர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற தி.மு.ஜயரத்னவின் புதல்வர் அனுராத ஜயரத்ன, முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற ரத்னசிறி விக்ரமநாயக்கவின் புதல்வர் விதுர விக்ரமநாயக்க, அமைச்சர் மஹிந்த விஜேசேகரவின் புதல்வர் காஞ்சனா விஜேசேகர.

முன்னாள் முதலமைச்சர் மஹிபால ஹேரத்தின் புதல்வர் கனக ஹேரத், முன்னாள் முதலமைச்சர் காலஞ்சென்ற பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்கவின் புதல்வர் துமிந்த திசாநாயக்க, முன்னாள் முதலமைச்சர் காலஞ்சென்ற மொஹான் சாலிய எல்லாவலவின் புதல்வர் அகில எல்லாவல.

அமைச்சர் காலஞ்சென்ற அனுருத்த ரத்வத்தயின் புதல்வர் லொஹான் ரத்வத்த, முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற டொக்டர் ஜயலத் ஜயவர்தனவின் புதல்வர் காவிந்த ஜயவர்தன, முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற ரெஜி ரணதுங்கவின் புதல்வர் பிரசன்ன ரணதுங்க, முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற றிச்சட் பத்திரணவின் புதல்வர் ரமேஷ் பத்திரண, முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற அமரசிறி தொடங்கொடவின் புதல்வர் இசுரு தொடங்கொட, முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற ஆறுமுகம் தொண்டமானின் புதல்வர் ஜீவன் தொண்டமான்.

முன்னாள் பிரதியமைச்சர் காலஞ்சென்ற எச்.ஜி.பி. நெல்சனின் புதல்வர் கிங்ஸ் நெல்சன், முன்னாள் பிரதியமைச்சர் தர்மதாச வன்னியாராச்சியின் புதல்வி பவித்ரா வன்னியாராச்சி. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற ஹீன்மஹத்தயா லியனகேயின் புதல்வர் வருண லியனகே, முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற சரத்சந்திர ராஜகருணாவின் புதல்வர் ஹர்ஷண ராஜகருணா, முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற கலாநிதி ஜகத் பாலசூரிய மற்றும் முன்னாள் ஆளுநர் குமாரி பாலசூரிய ஆகியோரின் புதல்வர் தாரக்க பாலசூரிய.

இலங்கை மக்கள் கட்சியின் ஸ்தாபக செயலாளர் காலஞ்சென்ற ரஞ்சித் நவரத்னவின் புதல்வர் அசங்க நவரத்ன, முன்னாள் மாகாண அமைச்சர் டி.வி. உபுல்வின் புதல்வர் டி.வி.சானக, அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் முன்னாள் தலைவர் காலஞ்சென்ற குமார் பொன்னம்பலத்தின் புதல்வர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவின் குடும்ப உறவினர் சீ.வி.விக்னேஸ்வரன், முன்னாள் பிரதியமைச்சர் காலஞ்சென்ற தயா ரீ.பஸ்குவலின் சகோதரரின் புதல்வர் அனுப பஸ்குவல். முன்னாள் பிரதியமைச்சர் காலஞ்சென்ற ரூபா கருணாதிலக்கவின் மருமகன் கயந்த கருணாதிலக்க, ஊவா மாகாண அமைச்சர் விதானகமகேயின் சகோதரர் தேனுக விதானகமகே, முன்னாள் பிரதியமைச்சர் காலஞ்சென்ற எச்.ஆர். மித்ரபாலகேயின் புதல்வர் துஷ்மந்த மித்ரபால, முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற அதாவுத செனவிரத்னவின் மருமகன் உதயகாந்த குணதிலக்க.

முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற வின்சன்ட் பெரேராவின் புதல்வர் சுமித் சஞ்சய பெரேரா, முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற எஸ்.டி.ஆர். ஜயரத்னவின் புதல்வர் பியங்கர ஜயரத்ன, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற கொட்பிறி பெர்னாண்டோவின் மருமகன் அருந்திக பெர்னாண்டோ, முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற பெஸ்டஸ் பெரேராவின் மகன் நிரோஷன் பெரேரா, முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற ஏ.சி.எஸ்.ஹமீதின் மருமகன் அப்துல் ஹலீம். முன்னாள் பிரதியமைச்சர் எச். பி.சேமசிங்ஹவின் புதல்வர் ஷெஹான் சேமசிங்ஹ, முன்னாள் பிரதியமைச்சர் காலஞ்சென்ற எஸ்.டபிள்யு. அலவத்துவலவின் புதல்வர் ஜே.சி.அலவத்துவல, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் காலஞ்சென்ற தேசபந்து நாமல் குணவர்தனவின் சகோதரர் கோகிலா ஹர்ஷனி குணவர்தன. இலங்கை மக்கள் கட்சியின் தலைவர் காலஞ்சென்ற விஜயகுமாரதுங்கவின் மருமகன் ரஞ்சன் ராமநாயக்க, முன்னாள் அமைச்சர் சாலிந்த திசாநாயக்கவின் மனைவி மஞ்சுளா திசாநாயக்க, முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் மனைவி சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே.

முன்னாள் நிதி அமைச்சர் காலஞ்சென்ற என்.எம். பெரேராவின் மருமகன் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஸ்ரீலால் விக்ரமசிங்ஹவின் மனைவி ராஜிகா விக்ரமசிங்ஹ, முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற ரஞ்சித் சொய்ஸாவின் மனைவி முதிதா பிரசன்ன. முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற காமினி அத்துகோரளவின் சகோதரி தலதா அத்துகோரள, முன்னாள் அமைச்சர் சரத் அமுனுகமவின் குடும்ப உறவினர் திலும் அமுனுகம ஆகியோர் தேசியப்பட்டியல் மற்றும் வாக்களிப்பு மூலம் இம்முறை நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

**அ.அஸ்வர் - மாளிகைக்காடு**

# இங்கிலாந்து டெஸ்ட் குழாமிலிருந்து வெளியேறினார் பென் ஸ்டோக்ஸ்



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் பென் ஸ்டோக்ஸ் தனிப்பட்ட காரணத்தின் அடிப்படையில் பாகிஸ்தான் அணியுடனான இறுதி இரண்டு (இரண்டாவது மற்றும் மூன்றாவது) டெஸ்ட் போட்டிகளிலிருந்து விலகியுள்ளாதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்தது.

இங்கிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்துவீச்சு சகலதுறை வீரரான பென் ஸ்டோக்ஸ் தற்போது நடைபெற்றுவரும் சுற்றுலா பாகிஸ்தான் அணியுடனான டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறார். மேலும், இங்கிலாந்து டெஸ்ட் அணியின் உபதலைவராகவும் பென் ஸ்டோக்ஸ் செயற்பட்டு வருகிறார்.

பாகிஸ்தான் அணியுடனான முதல் டெஸ்ட் போட்டி கடந்த சனிக்கிழமை நிறைவுபெற்ற நிலையில், அதில் இங்கிலாந்து அணி இறுதிநேரத்தில் வெற்றியை தனதாக்கியது. முதல் டெஸ்ட் போட்டியில் பென் ஸ்டோக்ஸ் விளையாடிய நிலையில், தற்போது அவசரமாக நியூஸிலாந்து பயணிக்கவுள்ளார். பென் ஸ்டோக்ஸின் தந்தை சுகயீனம் காரணமாக நியூஸிலாந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பென் ஸ்டோக்ஸின் தந்தை தற்போது குணமடைந்து வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதன் காரணமாகவே பென் ஸ்டோக்ஸ் நியூஸிலாந்து பயணிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால், இங்கிலாந்து கிரிக்கெட் சபை காரணத்தை வெளியிடவில்லை. பென் ஸ்டோக்ஸ் நியூஸிலாந்தில் பிறந்து இங்கிலாந்து குடியுரிமையை பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# “தோல்வியிலிருந்து மீளும் திறமை பாகிஸ்தான் அணியிடம் உள்ளது”

### – பாகிஸ்தான் பயிற்றுவிப்பாளர் மிஸ்பாஹ்

சுற்றுலா பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் இங்கிலாந்து அணி இறுதிநேரத்தில் சிறப்பான துடுப்பாட்டம் மூலம் மூன்று விக்கெட்டுகளால் வெற்றியை தனதாக்கியது. இந்நிலையில், பாகிஸ்தான் அணியின் தோல்வி குறித்து அதன் தலைமை பயிற்றுவிப்பாளர் மிஸ்பாஹ் உல் ஹக் தெரிவிக்கையில்,

“ஒரு கட்டத்தில் ஐந்து விக்கெட் இழந்த பிறகும் இங்கிலாந்து வெற்றிபெற்றது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. பட்லர், வோக்ஸ் திறமையான முறையில் எங்களது பந்துவீச்சை அதிரடியாக விளையாடி விட்டார்கள். இரண்டாவது இன்னிங்சில் நாங்கள் இன்னும் சிறப்பாக துடுப்பெடுத்தாடியிருக்க வேண்டும். 300 என்ற இலக்கை வைத்திருந்தால் சூழ்நிலை வேறு மாதிரியாக இருந்திருக்கும். சொந்த மண்ணில் தலைசிறந்த பந்துவீச்சை வைத்திருக்கும் இங்கிலாந்துக்கு எதிராக 2ஆவது இன்னிங்ஸில் ஓரளவுக்குப் போதுமான ஓட்டங்கள் அடிப்பது மிகவும் முக்கியமானது.”

“பட்லர் - வோக்ஸ் ஜோடி சேர்வதற்கு முன்பு வரை போட்டி எங்கள் கையில்தான் இருந்தது. அந்த ஜோடி முற்றிலும் சூழ்நிலையை மாற்றி போட்டியை எங்களிடமிருந்து பறித்துவிட்டது. கடும் நெருக்கடியில் சிறப்பான இணைப்பாட்டத்தை உருவாக்கியதுதான் போட்டியின் திருப்புமுனை.”

மேலும் தெரிவித்த மிஸ்பா உல் ஹக், “எங்களுக்கு இது கடினமான போட்டி. இதிலிருந்து விரைவில் மீண்டுவருவோம். இதைவிட சிறந்த கிரிக்கெட்டை எங்களால் விளையாட முடியும். தோல்வியிலிருந்து மீளும் திறமை பாகிஸ்தான் அணியிடம் உள்ளது” என தெரிவித்தார். பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் சவுதம்டணில் ஆரம்பமாகவுள்ளது.

# சேப்பாக்கத்தில் களமிறங்கும் டோனியின் மஞ்சள் படை



முழு உலகையும் முடக்கிப்பிடித்த கொரோனோ வைரஸ் தாக்கம் காரணமாக கடந்த மார்ச் மாதம் நடைபெறவிருந்த இந்தியன் பிரிமியர் லீக் தொடர் தற்போது ஐக்கிய அரபு இராச்சியத்தில் செப்டெம்பர் 19ஆம் திகதி முதல் நவம்பர் 10ஆம் திகதி வரை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த தொடரில் பங்கேற்பதற்காக ஒவ்வொரு அணியிலும் இடம் பெற்றுள்ள வீரர்கள் அனைவரும் எதிர்வரும் 21ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியம் பயணிக்க முடிவு செய்துள்ளனர்.

இந்நிலையில், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரும் விக்கெட் காப்பாளருமான மஹேந்திர சிங் டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, 13ஆவது இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் பங்கேற்பதற்காக ஐக்கிய அரபு இராச்சியம் செல்வதற்கு முன்னர் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ஐந்து நாட்கள் பயிற்சி மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

அணித்தலைவர் எம்.எஸ்.டோனி, சுரேஷ் ரெய்னா, ரவீந்திர ஜடேஜா, அம்பத்தி ராய்டு, முரளி விஜய், ஆசிப், சாய் கிஷோர் உள்ளிட்ட இந்திய வீரர்கள் மட்டும் குறித்த பயிற்சியில் பங்கேற்கவுள்ளனர். பயிற்சி மேற்கொள்ளும் இந்திய வீரர்கள் இரண்டு முறை கொரோனோ பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதுடன், கொரோனா தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்படும் வீரர்கள் மட்டும் பயிற்சி மேற்கொள்ளவுள்ளனர்.

இதனடிப்படையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை எம்.எஸ்.டோனி சென்னை செல்லவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. தமிழக அரசு பயிற்சிக்கான அனுமதி வழங்கும் பட்சத்தில் ஒகஸ்ட் 15ஆம் திகதி முதல் சேப்பாக்கத்தில் வீரர்கள் பயிற்சி மேற்கொள்ளவுள்ளனர்.

வீரர்கள் ஐக்கிய அரபு இராச்சியம் பயணிக்க முன்னர் சென்னையில் இரண்டு முறை கொரோனோ பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. ஐக்கிய அரபு இராச்சியம் சென்றதும் வீரர்கள் தனிமைப்படுத்தப்படவுள்ளதால் சென்னை சேப்பாக்கத்தில் வீரர்கள் பயிற்சிகளை மேற்கொள்வது அணிக்கு கூடுதல் பலமாக அமையும்.






# ராமர் கோயில் அடிக்கல் நாட்டு விழா; தனீஷ் கனேரியா மகிழ்ச்சி!

இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தில் ராமர் கோயில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்துவீச்சாளர் தனீஷ் கனேரியா மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

பல ஆண்டுகளாக பிரச்சினையில் இருந்துவந்த அயோத்தி விவகாரம் உச்ச நீதிமன்ற தீர்ப்பின் மூலம் முடிவுக்கு வந்ததையடுத்து அயோத்தியில் ராமர் கோவில் கட்டுவதற்கான பணிகள் தொடங்கியுள்ளன. இந்நிலையில், ராமர் கோயில் சம்பந்தமாக பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் தனீஷ் கனேரியா தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள தனீஷ் கனேரியா, “ராமரின் மகத்துவம் அவர் பெயரில் இல்லை. குணாதிசயத்தில் உள்ளது. தீமையை வென்றதற்கான அடையாளம் அவர். இந்தச் செய்தியானது உலகம் முழுவதும் மகிழ்ச்சி அலை வீசச்செய்துள்ளது” எனத் தெரிவித்துள்ளார்.

## ‘எல்லாவற்றையும் விட விசுவாசம் மிகவும் முக்கியம்’

# கோஹ்லியின் டுவிட்டால் பெரும் குழப்பம்




இந்திய கிரிக்கெட் அணியின் தலைவராக செயற்பட்டு வரும் விராட் கோஹ்லி இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் ரோயல் செலஞ்சேர்ஸ் பெங்களூர் அணியின் தலைவராக செயற்பட்டுவருகிறார். 13ஆவது இந்தியன் பிரிமியர் லீக் தொடர் அடுத்த மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், ஆர்.சி.பி. அணித்தலைவர் விராட் கோஹ்லி அண்மையில் டுவிட்டரில் பதிவிட்ட டுவீட் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய கிரிக்கெட்டில் சிறந்த அணித்தலைவராக திகழும் விராட் கோஹ்லியால் இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் ஒரு தடவையேனும் கிண்ணத்தை கைப்பற்ற முடியவில்லை என்பது அனைத்து இரசிகர்களிடத்திலும் மிகப்பெரிய குறையாக இருந்துவருகிறது. ஆர்.சி.பி. அணி இறுதிப்போட்டி வரை வந்திருந்தாலும் அந்த அணியால் கிண்ணத்தைக் கைப்பற்ற முடியவில்லை. இந்நிலையில், இந்த ஆண்டு நடைபெறவுள்ள இந்தியன் பிரிமியர் லீக் தொடரை ஆர்.சி.பி. அணி மற்றும் விராட் கோஹ்லியின் இரசிகர்கள் மிகவும் ஆவலாக எதிர்பார்த்தவண்ணம் உள்ளனர்.

விராட் கோஹ்லி தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில், “எல்லாவற்றையும் விட விசுவாசம் மிகவும் முக்கியம். ஐ.பி.எல். தொடரில் விளையாட மிகவும் ஆர்வமாக உள்ளேன்” என பதிவிட்டிருந்தார்.

இதில், “விசுவாசம் மிகவும் முக்கியம்” எனக் கூறியது ஏன், எதற்காக என பலரும் குழம்பியுள்ளனர்.

## தலைவர் கிண்ணத் தொடர்

# நியூ ஸ்டார் கழகம் வெற்றி; நியூ யங்ஸ் - மாத்தறை சிட்டி போட்டி சமநிலையில்

இலங்கை காற்பந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் எவ்.எவ்.எஸ்.எல். தலைவர் கிண்ண காற்பந்து தொடரின் குழு ‘பி’ யிற்கான முதல் போட்டியில் ரினௌன் காற்பந்து கழகத்தை எதிர்த்து நியூ ஸ்டார் கழகம் மோதியது.

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற குறித்த போட்டியின் முதல் பாதியில் இரு அணிகளும் சமபலத்துடன் போட்டிக்குப்



போட்டியாக விளையாடியதன் அடிப்படையில் எந்த அணியாலும் கோல் அடிக்க முடியாத நிலையில் முதல் பாதி சமநிலையில் நிறைவுபெற்றது. இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகி நீண்ட நேரம் கழிந்த நிலையில், இறுதியில் 72ஆவது நிமிடத்தில் நியூ ஸ்டார் கழக வீரர் மொஹமட் அனஸ் கோல் ஒன்றை பெற்றுக்கொடுத்தார்.

குறித்த கோலானது நியூ ஸ்டார் கழகத்தின் வெற்றி கோலாக மாறியது. போட்டியின் இறுதி விசில் அடிக்கப்படும் வேளையில் நியூ ஸ்டார் கழகம் 1-0 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் கொழும்பு குதிரைப்பந்தய திடலில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் மாத்தறை சிட்டி கழகத்தை எதிர்த்து நியூ யங்ஸ் கழகம்



மோதியது. குறித்த போட்டியில் முதல் பாதியின் 6 ஆவது நிமிடத்தில் நியூ யங்ஸ் வீரர் ஒலாவெல கோல் ஒன்றை அடித்தார். பதிலுக்கு போட்டியின் 9ஆவது நிமிடத்தில் மாத்தறை சிட்டி வீரர் வீரப்புலி பதில் கோலை அடிக்க போட்டியின் முதல் பாதி 1-1 என சமநிலை பெற்றது. தொடர்ந்தும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் எந்த அணியாலும் கோல்கள் பெறப்படாததன் அடிப்படையில் இறுதியில் போட்டி 1-1 என்ற அடிப்படையில் போட்டி சமநிலையில் நிறைவுபெற்றது.







போர்க்காலங்களில் கால்களை இழந்த இராணுவ வீரர்களுக்கு செயற்கை கால்களை விநியோகிக்கும் திட்டம் கடந்த சனிக்கிழமை இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் திமுத் கருணாரத்னவின் தலைமையில் ஸ்ரீ அம்பேபுஸ்ஸ லங்கா சின்ஹா ரெஜிமென்ட்டில் நடைபெற்றது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7